26
N06
118107

TDRe: 311

R.R. 309-3.1906

A. M. D. G.

T. O. R. C. 311
Regn. 30 7-2.06

# வேத சத்தியங்கள்.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS.

1906

309/3-1996

230/2

A. M. D. G.

SEP 1906
309

309

# வேத சத்தியங்கள்.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS

1906.

Imprimatur:

A. FAISANDIER, S. J.,

*Vicar General,*

*Trichinopoly.*

# முகவுரை.

இந்த ஞானோபதேச புஸ்தகத்தை, மற்ற அநேக ஞானோபதேச புஸ்தகங்களைப்போல், என் சிறுகேள்வியும் மறுமொழியுமாய் எழுத வில்லையென்று அநேகர் கேட்டிருக்கிறார்கள். அப்படி எழுதாததற்கு காரணமேதென்றால், அம்மாதிரியான நல்ல ஞானோபதேச புஸ்தகங்கள் இருக்கின்றனவென்பதே. சிறுபிள்ளைகள் அவைகளை நன்றாய்ப்படித்தபிற்பாடு, தாங்கள் கற்றுக்கொண்ட வேத சத்தியங்களை இப்புஸ்தகத்தைக்கொண்டு அதிக தெளிவாய் அறிந்து கொள்ளலாம். இப்புஸ்தகத்தை வாசிக்கும்போது, வார்த்தைகளை மனப்பாடமாய்ப் படிப்பது அவசரமில்லை. ஆனால் வேதசத்தியங்களை நன்றாய்க் கண்டுணர்ந்து, அவைகளின் ஞாயங்களைத் தெளிவாய்க் கற்றறியக்கடவார்கள். இதுவே இப்புஸ்தகத்தின் கருத்து.

A. M. D. G.

# வேத சத்தியங்கள்.

மனிதன் மோக்ஷபாக்கியத்தை அடையத்தக்கதாக, வேதசத்தியங்களை விசுவசிக்கவும், தேவகற்பனைகளை அநுசரிக்கவும், சில வழிபாடுகளை உபயோகிக்கவும், கடமைப்பட்டிருக்கிறான். அக்கடமைகளை இச்சிறு புஸ்தகத்தில் சுருக்கமாய் வெளிப்படுத்துவோம்.

## முதல் பிரிவு.

### ஆத்தும இரட்சணியம் அடையத்தக்கதாக விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள்.—

விசுவசிக்கவேண்டிய பிரதான வேதசத்தியங்கள் விசுவாச மந்திரத்தில் சுருக்கமாய் அடங்கியிருக்கின்றன.

---

* "வேத சத்தியங்களின் சுருக்கம்" என்னும் புஸ்தகத்திலடங்கிய ஞானோபதேசத்தோடு இப்புஸ்தகத்தில் எளிதான வியாக்கியானங்களுஞ் சேர்த்திருக்கிறது. "வேத சத்தியங்களின் விளக்கம்" என்னும் மூன்றாம் புஸ்தகத்தில் அதிக விரிவான வியாக்கியானங்கள் கொடுக்கப்படும்.

# I. சர்வேசுரன்பேரிலும், சிருஷ்டிப்பின் பேரிலும்.

## 1. சர்வேசுரன் பேரில்.

சர்வத்துக்கும் பரம கர்த்தரானவரே, சர்வேசுரன். (க) ஒரே சர்வேசுரன் இருக்கிறார் என்று முந்த முந்த நாம் விசுவசிக்கவேண்டும். அவரிடத்திலிருக்கிற அளவில்லாத சகல நன்மைகளும் தெய்வ சுபாவத்துக்குரியவைகளானதினாலே, அவர் ஒரே சர்வேசுரனாய் மாத்திரம் இருக்கவேண்டும். ஏனென்றால் அளவில்லாத வஸ்து இரண்டு இருக்கக்கூடாது. ஆகையால் அஞ்ஞானிகள் தப்பிதமாய்ச் சொல்லுகிறது போல, அநேக தேவர்கள் இருக்க முடியாது.

(உ) சர்வேசுரன் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் தம்மிலே தாமாயிருக்கிறார்.—அநாதியாய் இருக்கிறார். அதாவது: அவருக்குத் துவக்கமுமில்லை, முடிவுமில்லை. அவர் எப்போதுமிருந்தார், எப்போதுமிருப்பார்.

(ந) அவர் எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார்:—அதாவது: சகலத்தையும் அவரே உண்டாக்கிக் காப்பாற்றி நடத்தி வருகிறார்.

(ச) சர்வேசுரனுக்குச் சரீரமுமில்லை, யாதொரு உருபமுமில்லை. ஆகையால் நமது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாதவராயிருக்கிறார். அவரை நாம் கண்ணாலே பார்க்க முடியாது, கையால் தொட்டறியவுங் கூடாது.

இப்படியிருக்க, சித்திரங்களிலும், படங்களிலும், சர்வேசுரனுடைய சாயலானது மிகவும் வயது சென்ற ஒரு மனிதனைப்போலவும்; கண், காது, கைகள் உள்ளவரைப்போலவும், எழுதப் பட்டிருப்பதற்கு முகாந்தரம் என்னவென்றால், அவர் நித்திய காலமாய் இருக்கிறாரென்றும், நம்மைப் பார்க்கிறாரென்றும், நாம் சொல்வதைக் கேட்கிறாரென்றும், உலகத்தில் சகலத்தையும் நடத்துகிறாரென்றும், நமக்குப் படிப்பிக்கிறதற்காக, அப்படி எழுதியிருக்கிறதேயல்லாமல், மற்றப்படி சர்வேசுரனுக்குக் கண், காதுகளுமில்லை, கை கால்களுமில்லை. சரீரமும், உருபமும், அவயவங்களும் அவருக்கு இல்லை. அப்படி உண்டென்று நினைத்தால், அது பெரிய அபத்தமாகும்.

(ரு) சர்வேசுரன் எங்கும் வியாபித்திருக்கிறார்:—அதாவது: எங்கும் நிறைந்திருக்கிறார்; அவரில்லாத இடம் ஒன்றுமில்லை, எல்லாவற்றையும் பார்க்கிறார். நமது இரகசிய நினைவு யோசனை

கள் முதலாய் அவருக்குத் தெரியும். அவைகளைப்பற்றி ஒரு நாள் நம்மிடத்தில் கணக்கு கேட்பார்.

(௪) மேலும் அளவில்லாத வல்லபம், நீதி, இரக்கம், அர்ச்சியசிஷ்டதனம், முதலிய இலக்ஷண நன்மைகளெல்லாம் தேவ சுபாவத்துக் குரியவைகள். இவைகளில் ஒன்றை முதலாய் நீக்கினால், தெய்வ சுபாவத்தை அழிப்பதற்கு ஒப்பாகும்.

### 2. அர்ச். திரித்துவத்தின் பேரில்.

சர்வேசுரன் தேவசுபாவத்திலே ஒருவராயிருந்தாலும், ஆள்வகையில் மூவராயிருக்கிறார். இந்த மூன்றாட்களுக்கும் பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்துவென்று பெயர். பிதாவேறே, சுதன்வேறே, இஸ்பிரீத்துசாந்துவேறே. பிதாவும் சர்வேசுரன், சுதனும் சர்வேசுரன், இஸ்பிரீத்து சாந்துவும் சர்வேசுரன். மூவரும் எல்லாத்திலும் சரிசமானமாயிருக்கிறார்கள். ஆனால், மூவரும் மூன்று சர்வேசுரன் அல்ல, ஒரே சர்வேசுரன் தான். அதெப்படியென்றால் இந்த மூன்றாட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவசுபாவம் இருக்கிறதினால், மூவரும் ஒரே சர்வேசுரன் தான்.



ஏகசர்வேசுரன் மூன்றாளாயிருக்கிறாரென்பது அர்ச்சியசிஷ்ட திரித்துவத்தின் பரம இரகசியமென்று சொல்லப்படும்.

பரம இரகசியமாவதென்ன:—சர்வேசுரன் நமக்கு வெளிப்படுத்தின சத்தியங்களுக்குள்ளே, நம்முடைய புத்தி ஞானத்துக்கு எட்டாதவைகளும், நம்மால் கண்டுபிடிக்கக்கூடாதவைகளுமான சத்தியங்களே பரம இரகசியங்களென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சத்தியங்களைச் சர்வேசுரன் தாமே வெளிப்படுத்தியிருக்கிறதினாலே, இவைகளைச் சகலரும் சத்தியமென்று கைக்கொண்டு, உறுதியாய் விசுவசிக்க வேண்டியது. நாம் இவ்வுலகத்திலிருக்குமளவும், இந்தப் பரமரகசியங்களைக் கண்டு பிடிக்கக் கூடாதென்றாலும், இவைகளை மோக்ஷத்தில் தெளிவாய்க் கண்டு பிடிப்போம். இதுவே மோக்ஷத்தில் நமது புத்திக்குப் பேரின்பமாகும்.

### 3. சம்மனசுக்களின் பேரில்.

பரலோகமும் பூலோகமும் இவைகளில் அடங்கிய சகல வஸ்துக்களும் படைக்கப்படுவதற்குமுன், சர்வேசுரனைத் தவிர வேறொன்றுமில்லை. இப்படி ஒன்றுமில்லாதிருக்கையில்,

சர்வேசுரன் யாதொரு உதவி, வேலை, பிரயாசமுமில்லாமல் தமது சித்தத்தினாலே மாத்திரம் அவைகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்.

சம்மனசுக்களும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். அவர்களில் அநேகர் சர்வேசுரனுக்குக் கீழ்ப்படியாமல் ஆங்காரமென்னும் பாவத்தினால் கெட்டுப் பசாசுகளாகி நரகத்தில் விழுந்தார்கள். மற்றவர்கள் சர்வேசுரனுடைய சித்தத்துக்குப் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து நடந்ததினாலே, மோக்ஷபாக்கியத்தை அடைந்தார்கள். இவர்கள் தான் நல்ல சம்மனசுக்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நல்ல சம்மனசானவரைச் சர்வேசுரன் காவலாக நியமித்திருக்கிறார். இவர்களுக்குக் காவலான சம்மனசுக்களென்று பெயர்.

## 4. ஆதித்தாய் ஆதித்தகப்பன் பேரில்.

கெட்ட சம்மனசுக்கள் இழந்துபோன மோக்ஷ பாக்கியத்தை அடையும்படியாகச் சர்வேசுரன் மனுஷ சந்ததியை உண்டாக்கினார். மனிதன் இவ்வுலகத்தில் சர்வேசுரனை அறிந்து, சிநேகித்து, சேவிக்கவும், இவ்வழியாய் மோக்ஷத்தில் அவரை முகமுகமாய்த் தரிசிக்கவும், நித்தியகாலமாய்ப் பேரின்ப பாக்கியத்தை அநு



பவிக்கவும், உண்டாக்கப்பட்டானேயல்லாமல், மற்றப்படியல்ல.

அன்றியும், சர்வேசுரன் மனுஷனுக்கு உபகாரமாகவும், உதவியாகவும், சர்வலோகத்தையும், அதிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கி, அவனுடைய அவசரங்களிலெல்லாம் ஒத்தாசை செய்து, அவனை அன்போடு பராமரித்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்.

(க) சர்வேசுரன் ஆதித்தாயி ஆதித்தகப்பனை எப்படி உண்டாக்கினார்? பரம கர்த்தர் உண்டாக்கின முதல் மனுஷனுக்கு ஆதாமென்றும், முதல் மனுஷிக்கு ஏவாளென்றும் பெயர். சர்வேசுரன் முந்த முந்த மண்ணால் ஒரு சரீரத்தை உருவாக்கினார். அதோடுகூட, அரூபியானதும் அழியாததுமான ஒரு ஆத்துமத்தையுந் தமது சாயலாகச் சிருஷ்டித்து, இந்த ஆத்துமத்துக்குப் புத்தி, நினைவு, மனது என்கிற மூவித தத்துவங்களைக் கொடுத்தார். இந்த ஆத்துமத்தை அந்தச் சரீரத்தோடு ஒன்றித்து, மனசுவாதீனமுள்ள மனிதனாக ஆதாமை உண்டாக்கினார்.

அன்றியும், அவனுக்கு அற்புதமான நித்திரையை வருவித்து, அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்து, அதைச் சரீரமாக உரு

வாக்கி, அந்தச் சரீரத்துக்கு ஒரு ஆத்துமத்தையும் உண்டுபண்ணி, இவ்விரண்டையும் ஒன்றாகச்சேர்த்து, ஆத்தும சரீரமுள்ள மனுஷியாக ஏவாளைச் சிருஷ்டித்தார்.

இவ்விதமாய்ச் சர்வேசுரன் ஆதாமையும் ஏவாளையும் படைக்கும்போது, மனுஷ சுபாவத்துக்குரிய நன்மைகளைக் கொடுத்ததுமன்றி, இஷ்டப்பிரசாதத்தினாலும் மேலான வரங்களினாலும் அவர்களை அலங்கரித்து, செல்வம் நிறைந்த ஓர் சிங்காரத்தோப்பில் வைத்தார்.

**(உ) ஆதித்தாயும் ஆதித்தகப்பனும் செய்த பாவமென்ன?**—சர்வேசுரன், தாம் படைத்த சகலத்துக்கும் தாமே எஜமானென்பதை அவர்கள் அறிந்து, தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கத்தக்கதாக, அந்தச் சிங்காரத்தோப்பிலிருந்த மரங்களில் ஒரு மரத்தின் கனியைமாத்திரம் சாப்பிட வேண்டாமென்று விலக்கியிருந்தார். இந்தக் கற்பனையைப் பிரமாணிக்கமாய் அநுசரித்திருப்பார்களேயானால், சிலகாலம் உலகத்தில் பாக்கியமாய் வாழ்ந்தபின், சாகாமல் மோக்ஷத்தில் சேர்ந்து, சதாகாலமும் பேரின்ப சீவியத்தை அடைந்திருப்பார்கள். ஆனால் காய்மகாரமுள்ள பசாசு வருவித்த சோதனைக்கு அவர்கள் உட்பட்டு, சர்வேசுரன் கொடுத்திருந்த கற்



பனைக்குக் கீழ்ப்படியாமல் போனதினால், இஷ்டப்பிரசாதத்தை யிழந்து, சிங்காரத்தோப்பில் நின்று தள்ளுண்டு, கடினமானவேலை பிரயாசத்துக்கும், வியாதி, நோவு முதலிய துன்பத்துக்கும், கடைசியாய் சாவுக்கும் தீர்வையிடப்பட்டார்கள்.

**(ங) பாவத்துக்குத் தண்டனையென்ன?**—மேற் சொல்லியபடி, சர்வேசுரன் கொடுத்திருந்த அந்த இலேசான கட்டளையை ஆதித்தகப்பன் சரியாய் அநுசரித்தால், அவருக்கு அளிக்கப்பட்டிருந்த இஷ்டப்பிரசாதத்துக்கும் மற்ற வரங்களுக்கும் அவருடைய சந்ததியாராகிய சகல மனிதரும் உடன் பங்காளிகளாயிருப்பார்களென்றும், கற்பனையை மீறினால், அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைக்கு உடந்தையாயிருப்பார்களென்றும் சர்வேசுரன் தீர்மானித்திருந்தார்.

**(ச) ஜென்மப் பாவத்தின்பேரில்:**—அந்தக் கற்பனையை ஆதித்தகப்பன் மீறிவிட்டதினாலே, அவர் கட்டிக்கொண்ட பாவத்துக்கும், அதினால் வந்த நிர்ப்பாக்கியத்துக்கும், சகல மனிதரும் உடந்தையாகி, தேவசாபத்தை அடைந்தார்கள். இதினிமித்தம் இஷ்டப் பிரசாதமில்லாமலும், மற்ற வரங்களில்லாமலும், பசாசுக்கடிமை

களாய், பாவ ஸ்திதியிலே உற்பவிக்கிறார்கள். இதுவே ஜென்மப்பாவ தோஷமென்று சொல்லப்படும். அர்ச். கன்னிமரியம்மாள், மாத்திரம், சேசுநாதரின் பேறு பலன்களை முன்னிட்டு, சர்வேசுரன் கிருபையினாலே இத்தோஷமின்றி உற்பவித்தாள். இந்தப்பாவமே மனிதன் மோக்ஷத்தையிழந்து போவதற்கும், எவ்வித பொல்லாப்புக்குள்ளாவதற்கும், முதற்காரணமாம்.

---

## II. சேசுநாதர்சுவாமியின்பேரிலும் இரட்சணியத்தின் பேரிலும்.

---

### 1. சுதனாகிய சர்வேசுரன் எடுத்த மனுஷாவதாரமாவதென்ன?

தயை நிறைந்த ஆண்டவர் மனுக்குலத்தின் மேல் மனமிரங்கிப் பாவத்திலும் பசாசின் அடிமைத்தனத்திலும் நின்று நம்மை மீட்டிரட்சிக்கவும், பரலோக இராச்சியத்துக்குப் பங்காளிகளாக்கவும் திருவுளமானார். அதற்காக இவ்வுலகில் ஒரு இரட்சகனை அனுப்புவோமென்றும், அவர் மனுக்குலத்தை இரக்ஷிப்பாரென்றும், ஆதித்தாய் ஆதித்தகப்பனுக்குச் சர்வேசுரன் வாக்குத்தத்தங் கொடுத்தார்.



(௧) இதை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்தபோது, சர்வேசுரன் அர்ச். கன்னிமரியம்மாளிடத்தில் அதிதூதரான கபிரியேல் சம்மனசானவரை அனுப்பி, மனுஷாவதாரம் எடுக்கப்போகிற தம்முடைய குமாரனுக்குத் தாயாராயிருக்க அவளுக்குச் சம்மதமோவென்று கேட்டார். அவள் தன்னுடைய கன்னிமைக்குப் பழுதில்லாமல் அற்புதமாய்க் கர்ப்பவதியாவாளென்று தேவதூதனிடமிருந்து நிச்சயமாய் அறிந்துகொண்டு, அவரை நோக்கி: "இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என்று தாழ்மையுடன் பதிலுரைத்தாள்.

(௨) அந்தக்ஷணமே பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் மண்ணாலே ஆதி மனுஷனுடைய சரீரத்தை உண்டாக்கினதுபோல, அர்ச். கன்னிமரியம்மாளுடைய நிர்மல திரு உதரத்திலிருந்து ஒரு துளி இரத்தத்தை எடுத்து, அந்த இரத்தத்தினாலே ஒரு சரீரத்தை உருவாக்கி, ஒரு ஆத்துமத்தையுஞ் சிருஷ்டித்து, இரண்டையும் ஒன்றுபடுத்தினார்.

(௩) அந்நேரத்திலேயே இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன் அந்த ஆத்தும சரீரத்தைத் தம்முடையதாக்கி, மனுஷனானார். இதுதான்

மனுஷாவதாரத்தின் பரம இரகசியமென்று சொல்லப்படும். இந்த விசேஷத்தை நினைப்பூட்டத்தக்கதாக, மார்ச்சு மீ 25-ம் தேதி மங்களவார்த்தை சொன்ன திருநாள் கொண்டாடி வருகிறோம்.

(ச) சுதனாகிய சர்வேசுரன்மாத்திரம் மனுஷாவதாரம் எடுத்தாரல்லாமல், பிதாவாவது இஸ்பிரீத்து சாந்துவாவது மனுஷாவதாரம் எடுக்கவில்லை. மனுஷாவதாரம் எடுத்த தேவசுதன்தான் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி.

## 2. கர்த்தர் பிறப்பு.

திவ்விய கர்த்தர் அர்ச். கன்னிமரியம்மாளுடைய உதரத்திலே ஒன்பது மாதந் தங்கியிருந்தபின், அற்புதமாகப் பிறக்கத் திருவுளமானார். புஷ்பத்தினின்று வாசனை புறப்பட்டாலும், அந்த வாசனை புஷ்பத்துக்கு ஏதேனும் குறை வருவிக்குமோ? இல்லையே. மீளவும் சூரியனுடைய கதிர் கண்ணாடியை ஊடுருவி, அப்புறஞ்சென்றாலும், அது கண்ணாடியை எவ்விதத்திலுஞ் சேதப்படுத்துமோ? இல்லையே. அத்தன்மையே, திவ்விய கர்த்தர் அர்ச். கன்னிமரியாயினுடைய திரு உதரத்தினின்று அற்புதமாய்ப் பிறந்தபோது, அவள் கன்னி



மைக்கு யாதொரு பழுதும் உண்டாகவில்லை. தேவதாய் யாதொரு நோவு, வருத்தமின்றித் தமது திவ்விய குமாரனைப் பெற்றெடுத்தாளென்று அறியவேண்டியது.

இப்படியே அர்ச். கன்னிமரியம்மாள் சுதனைப் பெறுமுன்னும், பெறும்போதும், பெற்றபிறகும், எப்பொழுதும் பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருந்தாளென்பது சத்தியமாமே.

## 3. அர்ச். கன்னிமரியம்மாள் சர்வேசுரனுக்குத் தாயாரென்று காண்பிப்பது:—

நம்முடைய தாய்மார்கள் நமதாத்துமம் உண்டாக ஒன்றும் செய்யாவிட்டாலும், மெய்யாகவே அவர்கள் நமது தாய்மார்களல்லவோ? அப்படியே, தேவசுபாவத்துக்கு அர்ச். கன்னிமரியம்மாள் தாயாரல்லவென்றாலும், மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதர்சுவாமியை அவள் பெற்றபடியால், அவளைத் தேவமாதாவென்று சொல்வது நியாயமாம். ஆதலால் அர்ச். கன்னிமரியம்மாள் மெய்யாகவே சர்வேசுரனுடைய தாயாராயிருக்கிறாளென்பது வேதசத்தியமாம்.

கர்த்தர் மனுஷாவதாரமெடுத்துப்பிறந்த பரம இரகசியத்தை நினைப்பூட்டத்தக்கதாக, வரு

ஷந்தோஷமும், டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி, கர்த்தர் பிறந்த திருநாள் கொண்டாடப்படுகின்றது. கர்த்தர் பிறந்த எட்டாம் நாள், அவருக்கு விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றிச் சேசுவென்கிற பெயரிட்டார்கள். இந்தத் திருநாமத்துக்கு இரட்சகனென்று அர்த்தமாம்.

## 4. சேசுநாதர்சுவாமிக்கு இரண்டு சுபாவமுண்டு.

திவ்விய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் தேவசுபாவமும் மனுஷசுபாவமும் இருக்கிறபடியால், அவர் மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமாயிருக்கிறார். இந்த இரண்டு சுபாவங்களும் ஒன்றோடொன்று கலப்பில்லாமல், வெவ்வேறாக, அர்ச். தமதிரித்துவத்தின் இரண்டாமாளாகிய சுதனிடத்தில் ஒன்றித்திருப்பதினாலே, அவருக்குத் தெய்வீகத்துக்குரிய ஞானமும், மனுஷனுக்குரிய ஞானமும், ஆக இருவகை ஞானமும் உண்டு. அப்படியே அவரிடத்தில் தேவசித்தமும் மனுஷசித்தமுமாகிய இருவகை சித்தங்களும் உண்டு. தேவசித்தம் வேறே; மனுஷ சித்தம் வேறே. ஆனதினால் அந்தந்தச் சித்தத்தின் கிரிகைகளும் எப்போதும் வெவ்வேறாகவேயிருக்கும்.



(க) சேசுநாதர்சுவாமி தேவசுபாவமும் மனுஷசுபாவமுமுள்ளவராகையால், தேவசுபாவத்திலே பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் அவர் நித்திய சீவியராய் இருப்பதுமல்லாமல், அநாதியுமாய், சரீரமில்லாதவருமாய், எங்கும் வியாபித்துமிருக்கிறார்.

(உ) மனுஷசுபாவத்திலேயோவென்றால், அர்ச். கன்னிமரியம்மாளிடத்தில் அவர் உற்பவித்த க்ஷணந்துவக்கி, நம்மைப்போல் ஆத்தும சரீரத்தோடு உலகத்தில் பிறந்து, வளர்ந்து, சீவித்து, மரித்தார். இப்போது அவர் எடுத்த மனுஷசுபாவத்தோடு மோக்ஷத்திலேயும் திவ்விய நற்கருணையிலேயும் எழுந்தருளியிருக்கிறார்.

அவர் மனுஷாவதாரமெடுத்து, நம்மைப்போல் ஒரு ஆத்துமமும் சரீரமுமுள்ளவராயிருந்ததினால், பாவமும் பாவதோஷத்தால் விளைந்த குறைகளும் நீங்கலாக, மற்ற விஷயங்களில் நமது சுபாவத்துக்கும் அவருடைய மனுஷசுபாவத்துக்கும் வித்தியாசமில்லை.

(ங) அவருடைய ஆத்துமம், துக்கம், சஞ்சலம், சந்தோஷம், முதலியவற்றை அநுபவிக்கக்கூடியதாயிருந்தபோதிலும், அதிலே பாவம், அறியாமை, சந்தேகம் முதலிய குறைகள்

இல்லை. அவர் உற்பவித்த க்ஷணந்துவக்கி, அவருடைய ஆத்துமத்தில் அறிவும், மனதும், சகல ஞான நன்மையும் வரப்பிரசாதங்களும் சம்பூரணமாய் நிறைந்திருந்தன.

(உ) அவருடைய சரீரம், துர்க்குணங்கள், துராசாபாசங்கள் நீங்கலாக, மற்ற மனிதருடைய சரீரம்போலவே யிருந்தது. ஏனென்றால், பசி, தாகம், குளிர் முதலிய துன்பவருத்தங்களுக்கும், சாவுக்கும் உரியதாயிருந்தது. ஆண்டவர் நமதுபேரில் வைத்த சிநேகத்தினிமித்தம், மனம்பொருந்தி, இப்பேர்ப்பட்ட சரீரத்தை எடுத்துப் பிறக்கத் திருவுளமானாரேயன்றி மற்றப்படியல்ல.

## 5. சேசுநாதர்சுவாமி ஆளின் வகையில் ஒருவர்தான்.

சேசுநாதர்சுவாமியிடத்தில் இரண்டு சுபாவம் இருப்பதினால், அவர் இரண்டு ஆளாயிருக்கிறாரென்று சொல்லக்கூடாது. அவர் ஓரே ஒரு ஆளாய் மாத்திரம் இருக்கிறார். இவர்தான் அர்ச். திரித்துவத்தின் இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன். அவரிடத்தில் ஓரே ஒரு தெய்வீக ஆள்மாத்திரமிருக்கிறபடியால், மனிதசுபாவத்தில் அவர் என்ன செய்



தாலும், அதெல்லாம் தேவ ஆளான திருச்சுதனுடைய கிரிகையென்றே சொல்லப்படும். இதினால், மனிதசுபாவத்திலே அவர் செய்த எந்த அற்பக்காரியமும், அநுபவித்த சொற்ப வேதனையும், அளவில்லாத பேறுபலனுள்ளதாம்.

## 6 உலக இரட்சணியம்.

சேசுநாதர்சுவாமி முப்பத்துமூன்று வருஷகாலம் இப்பூலோகத்தில் வாசஞ்செய்து, தாழ்ச்சி, பொறுமை, தரித்திரம், முதலிய சகல புண்ணியங்களுக்கும் மாதிரிகை காண்பித்தார். சுவிசேஷத்திலே எழுதப்பட்டிருக்கிற சுகிர்த போதனைகளையும், இன்னும் அநேக வேதசத்தியங்களையும் போதித்து, தாம் மெய்யான சர்வேசுரனென்று ஒப்பிப்பதற்காக, அநேகாநேக அற்புதங்களையும் செய்தார்.

(க) கடைசியாய், நம்முடைய பாவங்களுக்காகப் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு, பெரிய வெள்ளிக்கிழமையில் மரணத்தையடைந்தார். அவர் பட்ட திருப்பாடுகளால் அடைந்த அளவில்லாத பேறுபலன்களையெல்லாம் நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாகத் தேவநீதிக்கு ஒப்புக் கொடுத்ததினாலே, நித்திய நரக ஆக்கினையில் நின்று மனுஷர் இரட்சிக்கப்பட்

டார்கள். இதுவே இரட்சணியத்தின் பரம ரகசியமென்று சொல்லப்படும்.

(உ) சேசுநாதர்சுவாமி மரணமடையும்போது அவருடைய தேவசுபாவம் அவருடைய ஆத்துமத்தோடேயும் சரீரத்தோடேயும் எப்போதும் ஒன்றித்திருந்தது.

தேவசுபாவத்தோடு ஒன்றித்திருந்த அந்தத் திருச்சரீரத்தை தேவமாதாவும் சீஷர்களும் சிலுவையினின்று இறக்கி, மிகுந்த பூச்சிய வணக்கத்தோடு ஆராதனை செய்து, கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். அவருடைய ஆத்துமமோவெனில், சரீரத்தைவிட்டுப் பிரிந்தமாத்திரத்தில் பாதாளங்களிலிறங்கினது. இந்தப் பாதாளமானது பிதாப்பிதாக்கள் தங்கியிருந்த ஸ்தலம் என்று சொல்லப்படும்.

(ங) ஆதித்தாய் ஆதித்தகப்பன் செய்த பாவத்தினால் மோக்ஷவாசல் அடைபட்டிருந்தது. சேசுநாதர்சுவாமி பாடுபட்டு, மரித்து, உயிர்த்து, அந்தப் பரலோக வாசலைத்திறக்க வேண்டியதாயிருந்தது. அதுவரையில் ஒருவரும் மோக்ஷத்துக்குப் போகவில்லை. ஆகையால் உலோகமுண்டான நாள்முதல் தேவஇஷ்டப்பிரசாதத்தோடு மரித்த சகல புண்ணியவான்களுடைய ஆத்துமங்களும் பாதாளமென்ற



அந்த ஸ்தலத்தில்தானிருந்தன. திவ்விய கர்த்தர் தங்களை இரட்சிக்க எப்போது வருவாரோவென்று அவர்கள் அங்கே காத்துக்கொண்டிருந்தார்கள்.

தேவ சுபாவத்தோடு ஒன்றித்திருந்த சேசுநாதருடைய திரு ஆத்துமம் அந்த ஸ்தலத்திலே இறங்கி, அங்கேயிருந்த புண்ணியாத்துமாக்களுக்குத் தன்னைக்காண்பித்துத் தெய்வீக தரிசனத்தால் அவர்களுக்குப் பேரின்ப பாக்கியத்தை வருவித்தது.

(ச) அந்த க்ஷணம் முதல், மோக்ஷத்துக்குரிய அளவில்லாத பாக்கியத்தை அவர்கள் அநுபவிக்கத் துவக்கினார்கள். இந்தப் பேரின்ப பாக்கியத்தைக் குறித்துதான், சேசுநாதர் சுவாமி நல்ல கள்ளனை நோக்கி: "இன்றுதானே நம்மோடுகூடப் பரகதியிலிருப்பாய்" என்று திருவுளம் பற்றினார். கடைசியாய் சேசுநாதர் சுவாமி பரலோகத்துக் கெழுந்தருளிப் போகும்போது, அந்தப் புண்ணியாத்துமாக்களெல்லாரும் அவரோடுகூட மோக்ஷத்திற் பிரவேசித்தார்கள்.

## 7. கர்த்தர் உயிர்த்தது.

நமது திவ்விய இரக்ஷகர் மரித்த மூன்றாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை, அதிகாலமே, பாதாளங்களிலேயிருந்த புண்ணியாத்துமாக்

களைத் தம்மோடுகூடக் கூட்டிக் கொண்டு போய், கல்லறையிலிருந்த தமது திருச்சரீரத்தோடே தமது திரு ஆத்துமத்தைத் திரும்ப ஒன்றித்து, மிகுந்த மகிமைப் பிரதாபத்தோடு உயிர்த்தெழுந்தருளினார்.

(க) பிற்பாடு தமது பரிசுத்த தாயாருக்குத் தோன்றி, அவளை ஆனந்த பாக்கியத்தினால் நிரப்பி, அப்போஸ்தலர்களுக்கும் தம்மை அடிக்கடி காண்பித்து, அவர்களை வேத சத்தியங்களிலே ஸ்திரப்படுத்திக் கொண்டுவந்தார்.

(உ) நாற்பதாம் நாள் தமது தெய்வீக வல்லமையால் ஒட்டோலகராய்ப் பரமண்டலத்துக்கு எழுந்தருளிப்போனார். அங்கே சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

(ங.) இதிலே, வலதுபாரிசமென்று சொல்வதற்கு அர்த்தமென்னவென்றால், உலக ஆசாரப்படி, யாதொருவனை ஒரு அரசன் மகிமைப்படுத்தவேணுமானால், தனது வலது பக்கத்தில் அவனை உட்காரச் செய்வானல்லவோ? அப்படியே சேசுநாதர்சுவாமி மனுஷனாகியமட்டும், பரலோகத்திலே மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார் என்றும், சகல ஸ்தானங்களுக்கும் மேலான ஸ்தானத்தில் வீற்றிருந்து, சர்வ அதிகார வல்லமை



யுடையவரா யிருக்கிறாரென்றும், அர்த்தமாகும். மற்றப்படி பிதாவாகிய சர்வேசுரனுக்குக் கை கால் முதலிய அவயவங்களுமில்லை, வலது பக்கம் இடது பக்கம் என்கிற குறிப்புமில்லை.

## III. இஸ்பிரீத்து சாந்துவின் பேரிலும், நமது அர்ச்சிப்பின்பேரிலும்.

### 1. இஸ்பிரீத்து சாந்துவின்பேரில்.

(க) சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்கு எழுந்தருளின பத்தாம் நாள் ஏன் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனை அனுப்பினாரென்றால், தாம் போதித்த சத்தியங்களை அப்போஸ்தலர்கள் தெளிவாய் அறியும்படியாகவும், தம்முடைய அப்போஸ்தலர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதற்கும், புண்ணியங்களாலே அவர்களை அலங்கரித்து அர்ச்சிப்பதற்கும், திருச்சபையை ஸ்திரப்படுத்துவதற்கும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனை அனுப்பினார்.

(உ) அர்ச். திரித்துவத்தின் மூன்றாமாளாகிய இஸ்பிரீத்து சாந்துவானவர் பிதாவோ

டேயும், சுதனோடேயும், ஒரே சர்வேசுரனாயிருக்கிறாரென்று விசுவசித்து, அவரை வணங்கி, ஆராதித்து நமஸ்கரிக்க வேண்டியது. இவர் சர்வேசுரனாகியமட்டும், எங்கும் வியாபித்திருந்தாலும், சாவானபாவமில்லாத ஆத்துமங்களிலே விசேஷ பிரகாரமாய் வாசம் பண்ணுகிறார். இஷ்டப்பிரசாதம், தேவசிநேகம், பிறர் சிநேகம், முதலிய புண்ணியங்களுக்கடுத்த நல்லுணர்ச்சிகளை நமதிருதயத்தில் அவர் வருவிக்கிறார். புண்ணியங்களைச் செய்வதற்கான பலத்தையும் நமக்குத் தந்தருளுகிறார்.

### 2. திருச்சபையின் பேரில்.

சேசுநாதர்சுவாமி இவ்வுலகத்திலிருந்தபோது, தமது திவ்விய வேதத்தைப் போதித்ததுமல்லாமல், அதைக் கேட்டனுசரித்தவர்களை ஸ்திரப்படுத்தி, நடப்பித்தும் வந்தார். அவர் மோக்ஷத்துக்கு எழுந்தருளிப்போகுமுன், சகல மனிதரும் விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள் என்னவென்றும், அனுசரிக்கவேண்டிய கற்பனைகள் எவையென்றும், சர்வேசுரனுக்குச் செலுத்தவேண்டிய ஆராதனை எப்பேர்ப்பட்டதென்றும், நமக்குப் படிப்பிப்பதற்காக, அர்ச். இராயப்பரையும், அவருக்குப்பின் வரும் அர்ச்.



பாப்புமார்களையும், தமக்குப் பதிலாக நியமித்தார். சேசுநாதர்சுவாமி படிப்பித்த வேத சத்தியங்களையெல்லாம் விசுவசித்து, அவர் ஏற்படுத்தின தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று, அவருக்குப் பதிலாயிருக்கிற பாப்பானவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களின் கூட்டந்தான் திருச்சபை என்று சொல்லப்படும்.

### 3. திருச்சபையின் அடையாளங்கள்.

மெய்யான திருச்சபையானது ஏகமுமாய், பரிசுத்தமுமாய், பொதுவுமாய், அப்போஸ்தலர்களாலே ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறதென்று அறியக்கடவோம்.

(க) திருச்சபை ஏகமாய் அல்லது ஒன்றாயிருக்கிறதென்பதற்கு, அந்தச்சபையிலிருக்கிறவர்களெல்லாரும் ஒரே மனமாய்ச் சேசுநாதர்சுவாமி படிப்பித்த வேத சத்தியங்களையே விசுவசித்து, அவர் ஸ்தாபித்த தேவத்திரவிய அனுமானங்களையே பெற்று, அவருடைய ஸ்தானத்திலிருக்கிற அர்ச். பாப்பானவராகிய ஒரே தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்களென்று அர்த்தமாகும்.

(௨) திருச்சபை பரிசுத்ததனம் அல்லது அர்ச்சியசிஷ்டதன முள்ளதாய் இருக்கிறதென்பதற்கு, பரிசுத்தமான போதனையைத் தப்பறையில்லாமல் படிப்பித்து, அர்ச்சியசிஷ்டதனமடைவதற்குச் சேசுநாதர்சுவாமியால் ஏற்படுத்தப்பட்ட வழிபாடுகளையெல்லாம் பிரமாணிக்கமாய்க் காப்பாற்றி, விசுவாசிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கிறதென்று அர்த்தமாகும்.

இந்த அர்ச்சியசிஷ்டதனத்தை அறிவதற்குப் பிரதான அடையாளமென்ன? அளவில்லாத அர்ச்சியசிஷ்டதனமுள்ள சேசுநாதர்சுவாமியைப் பின்சென்று நடந்த கணக்கில்லாத மகாத்துமாக்கள் தங்களுடைய அர்ச்சியசிஷ்டதனத்தை ஆச்சரியமான வரங்கள், புதுமைகள், முதலானவைகளால் எக்காலத்திலும் விளங்கப்பண்ணினதினாலே, திருச்சபை பரிசுத்ததனமுள்ளதென்று சொல்லுகிறது சரியே.

திருச்சபையில் பாவிகளிருந்தாலும், அவர்களுடைய குற்றங்கள் திருச்சபையைச் சாராது. ஏனெனில் இவர்கள் திவ்விய கர்த்தருடைய போதனைக்கு விரோதமாய் நடந்ததினாலேதான் பாவிகளானார்கள். ஆகையால் திருச்சபை அவைகளை ஒருக்காலும் அங்கீகரிக்கிறதில்லை. ஆனால் அந்தப்பாவிகள் முதலாய் மனந்திரும்பி,



அர்ச்சியசிஷ்டவர்களாய் நடக்கும்படியாக வேண்டிய உதவியெல்லாம் திருச்சபை அவர்களுக்குக்கொடுக்கும். கர்த்தர் திருவுளம்பற்றினபடியே, திருச்சபையிலுள்ள பாவிகள் நற்பயிரின் நடுவில் வளரும் களைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

(௩.) திருச்சபை பொதுவாயிருக்கிறதென்பதற்கு, எவ்விடத்திலும், எக்காலத்திலும், சகல மனிதருக்கும், ஒரே வகையான போதனையையே படிப்பிக்கிறதென்றும், அதிலுள்ளவர்கள் மற்ற எந்தப் பதிதமார்க்கத்திலாவது இருக்கிறவர்களைப்பார்க்க அதிகமான பேர்களென்றும், அர்த்தமாகும். பொது என்பதற்கும், கத்தோலிக்கு என்பதற்கும், அர்த்தம் ஒன்றுதான்.

(௪) திருச்சபை அப்போஸ்தலிக்கு என்பதற்கு அர்த்தமென்னவென்றால், கத்தோலிக்குத் திருச்சபையானது அப்போஸ்தலர்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அவர்கள் காலமுதல் இடைவிடாமல் அவர்களிடத்திலிருந்து வருகிற அதிகாரத்தினால் ஆண்டு நடத்தப்படுகிறதென்றும், அவர்களுடைய போதனைகளையே பிரசங்கித்து, அவர்கள் உபயோகித்த தேவத்திரவிய அனுமானங்களையே நிறைவேற்றுகிறதென்றும் அர்த்தமாகும்.

### 4. உரோமான் திருச்சபையின்பேரில்.

சேசுநாதர்சுவாமியால் திருச்சபைக்குப் பிரத்தியக்ஷ தலைவராக நியமிக்கப்பட்ட அர்ச். இராயப்பர், தமது மேற்றிராசனத்தை உரோமாபுரியில் ஸ்தாபித்து, அங்கேயே மரணமடைந்தாரென்கிறதினாலேயும், அவருக்குப் பதிலாகப் பின்வரும் உரோமாபுரி மேற்றிராணிமார்களாகிய அர்ச். பாப்புமார்கள் திருச்சபைக்குத் தலைவர்களாயிருந்து சகலராலும் அங்கிகரிக்கப்பட்டு, எப்போதும் மேலான அதிகாரம் செலுத்திக்கொண்டு வருகிறதினாலேயும், கத்தோலிக்குத் திருச்சபை உரோமான் திருச்சபையென்று சொல்வது நியாயந்தானே. கத்தோலிக்குத் திருச்சபையென்றாலும், உரோமான் திருச்சபையென்றாலும், ஒன்றுதான். உரோமான் திருச்சபையன்றி, வேறெந்தச் சபையும் கத்தோலிக்குத் திருச்சபையல்ல.

உரோமான் திருச்சபையில் மாத்திரம் முன்சொன்ன நாலு அடையாளங்களுமுண்டு. இதுவே சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த ஏகசத்திய திருச்சபை. இதைத்தவிர, மற்ற மார்க்கங்களெல்லாம் தப்பறை, அபத்தமுள்ள மார்க்கங்கள். ஆகையால் கத்தோலிக்குத் திருச்சபையில்மாத்திரம்



ஆத்தும இரட்சணியமுண்டு. இதற்குப் புறம்பாயிருக்கிறவர்களுக்கு இரட்சணியமேயில்லை.

### 5. திருச்சபையின் தவறாத நிலைமை.

மனிதர் மோக்ஷகரையேறுகிறதற்குத் திருச்சபை அவசரமாயிருக்கிறதினாலே, இந்தச்சபை எப்பொழுதும் நிலைமையாயிருக்குமென்றும், வேத சத்தியங்களை எங்கும் போதித்து வருமென்றும், திவ்விய கர்த்தர் தாமே திருவுளம் பற்றியிருக்கிறார். ஆனதால் திருச்சபை போதிக்கும் வேத சத்தியங்கள் உலகமுடிகிறவரைக்கும், யாதொரு தப்பிதமும், மாற்றமுமின்றி, ஒரே சீராய் வழங்கி வருமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் சேசுநாதர்சுவாமி வாக்குத்தத்தம் செய்தபடி, நரகத்தின் வாசல் அதை ஒருக்காலும் மேற்கொள்ளாது.

### 6. அர்ச். பாப்பானவர் திருச்சபைத் தலைவர்.

நமது ஞானப்பிதாவான அர்ச். பாப்பானவர் அர்ச். இராயப்பருக்குப் பதிலாயிருக்கிறதினாலே, திருச்சபைக்குக் காணப்படும் தலைவராயிருப்பதுமன்றி, காணப்படாத தலைவராகிய சேசுநாதர்சுவாமி ஸ்தானத்திலிருக்கிறார்.

(க) இவரே சகல மேற்றிராணிமார்களையும், குருக்களையும், விசுவாசிகளையும், ஆண்டு நடப்பிக்க மேலான அதிகாரம் பெற்றவர்.

(உ) ஆகையால், இவராலே ஏற்படுத்தப்படுகிற மேற்றிராணிமார்களும், அந்த மேற்றிராணிமார்களால் அனுப்பப்படுகிற குருக்களும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படியே, விசுவாசம் நல்லொழுக்கத்தைப்பற்றிய விஷயங்களில் கட்டளைகள் செய்யும்போது, கிறீஸ்துவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது. இக்கட்டளைகளை மூர்க்கமாய் மீறினதினாலே யாராவது சபிக்கப்பட்டிருப்பார்களேயானால், அவர்களும் அவர்களோடே சேருகிறவர்களும் திருச்சபைக்குப் புறம்பாயிருப்பார்கள். இவர்கள் மனந்திரும்பாவிட்டால், நித்திய நரகாக்கினைக்குள்ளாவார்களென்பது நிச்சயம்.

## 7. அர்ச். பாப்பானவர் தவறாத வரத்தை அடைந்தவர்.

இதுவுந்தவிர, அர்ச். இராயப்பருக்கும், அவருடைய ஸ்தானத்தில் வருகிற அர்ச். பாப்புமார்களுக்கும், ஆண்டவர் ஒரு விசேஷ வரத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். அது தவறாத



வரமாம். அதெப்படியென்றால், உரோமாபுரி மேற்றிராசனத்தில் திருச்சபைக்குத் தலைவராக எழுந்தருளியிருக்கும் அர்ச். பாப்பானவர், விசுவாச சத்தியங்களைப் பற்றியாவது, நல்ல நடக்கைக்கு அடுத்த ஒழுங்குகளைப்பற்றியாவது, யாதொரு சத்தியத்தைத் தீர்மானித்து, விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது, அதில் அவர் என்னவேனும் பிசகிப்போகமாட்டார். இதிலே வழுவாதவராயிருப்பதினால் அவர் கற்பிக்கிறபடி நடக்கிறவர்கள் ஒருக்காலும் மோசம்போகமாட்டார்கள்.

## 8. அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகிதப் பிரயோசனமாகிறதென்ன?

உரோமான் திருச்சபை மெய்யான சத்திய வேதமாகையால், இதிலேமாத்திரம் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகிதப் பிரயோசனம் உண்டு. முந்தமுந்த அர்ச்சியசிஷ்டவர்களென்று சொல்லப்படுகிறவர்கள் யாரென்றால், இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரணமடைந்து, இப்பொழுது மோக்ஷத்திலிருக்கிற புண்ணியவான்களும், உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கிற ஆத்துமாக்களும், இவ்வுலகத்தில் இன்னும் உயிரோடிருக்கிற கத்தோலிக்குத் திருச்சபையைச்சேர்ந்த விசுவாசிகளு

மாம். ஏனெனில் உயிரோடிருக்கிற விசுவாசிகள் ஞானஸ்நானம்பெற்று, இஷ்டப்பிரசாதத்தை அடைந்திருக்கிறதினாலேயும், அதைக் காப்பாற்றி, எப்போதும் அதிகரிக்கும்படி உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறதினாலேயும், இந்தப்பேர் அவர்களுக்குச்செல்லும்.

(௧) சமூதீதப் பிரயோசனமென்பதற்கு திருச்சபையிலுண்டான சகல ஞான நன்மைகளும் விசுவாசிகள் எல்லாருக்கும் பொதுவாயிருக்கிறதென்று அர்த்தமாகும். இந்த ஞான நன்மைகளும், ஞானப்பொக்கிஷங்களும் எவைகளென்றால், சேசுநாதர்சுவாமி நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அடைந்த அளவில்லாத புண்ணிய பலன்களும், ஸ்ரீ தேவமாதாவும் மோக்ஷவாசிகளும் உலகத்திலிருக்கிற நீதிமான்களும், சேசுநாதருடைய பேறுபலன்களின் உதவியைக்கொண்டு, சம்பாதித்த ஏராளமான புண்ணியபலன்களுமாம். விசுவாசிகளுக்குச் சர்வேசுரன் ஞானத்தகப்பனாராகவும், திருச்சபை ஞானத்தாயாராகவும் இருப்பதால், இவர்களெல்லாரும் ஒரு குடும்பத்துக்குச் சமானமாயிருக்கிறார்கள். இதினாலே மேற்சொன்ன ஞான நன்மைகள் எல்லாருக்கும் பொதுவாயிருக்கின்றன.



(௨) சாவானபாவமில்லாமல் இஷ்டப்பிரசாத ஸ்திதியிலிருக்கிறவர்கள் தான் இந்தச் சமூதீதப் பிரயோசனத்தை முழுதும் அடைகிறார்கள்.

(௩) ஆயினும் பாவஸ்திதியிலிருக்கிற கிறீஸ்துவர்கள் அந்தச்சமூதீதப் பிரயோசனத்தில் கொஞ்சமாகிலும் பங்கு அடையாமல் போகிறதில்லை. ஏனெனில் சாவான பாவமானது ஆத்துமத்திலிருக்கிறதினிமித்தம், பாவிகள் பிசகியிருக்கிற அவயவங்களைப்போலிருந்தாலும், தங்கள் தலைவராகிய சேசுநாதர்சுவாமியோடேயும், ஞானச்சரீரமாகிய திருச்சபையோடேயும், ஒருவிதத்தில் அவர்கள் ஒன்றித்திருக்கிறார்கள். அதினாலே திருச்சபையின் பிரதான நன்மைகளை இவர்கள் அடையாமற்போனாலும், புண்ணியவான்களுடைய செபதபமுத[illegible]கிரிக்கியத்தின் பலனைக்கொண்டு, தங்கள் பாவஸ்திதியைவிட்டு, மனந்திரும்ப விசேஷமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

(௪) திருச்சபைக்குப் புறம்பாயிருப்பவர்கள் இந்த விசேஷமான உதவிசகாயங்களை அடையமாட்டார்கள். ஏனென்றால் இவர்கள் அறுபட்டகால்போல இருக்கிறார்கள், அறுபட்டகால் சரீரத்தினின்று பிரிந்து இருக்கிறதினாலே,

அசைவில்லாமல், செத்து அழிந்துபோகும். பாவிகளோவென்றால் பிசகின காலைப்போல் இருக்கிறார்கள். பிசகின கால் சரீரத்தோடே இன்னம் சேர்ந்து இருக்கிறதினால், அழிந்து போகாமல், மறுபடி குணப்பட்டு, சரியாய் வருமென்று நம்பலாம்.

அஞ்ஞானிகள், துலுக்கர், பதிதர், பிரிவினைக்காரர், சபிக்கப்பட்டவர்கள், முதலானவர்கள் திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிறதினால், திருச்சபையின் ஞான நன்மைகளுக்கு அவர்கள் பங்காளிகளல்ல. அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமுதிதப் பிரயோசனம் இவர்களுக்குக் கிடையவே கிடையாது.

9. பாவத்தைப் போக்குகிறதற்குத் திருச்சபைக்குள்ள அதிகாரமென்ன?

(க) எப்பேர்ப்பட்ட கனமான பாவங்களை மனுஷன் செய்திருந்தாலும், எத்தனைவிசை அந்தப்பாவங்களில் அவன் விழுந்திருந்தாலும், சகலத்தையும் பொறுத்துக்கொள்ள, சேசுநாதர்சுவாமி தமது திருச்சபைக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்திருக்கிறார். சர்வேசுரன் மாத்திரம் பாவத்தைப் பொறுக்கக் கூடுமேயொழிய மனுஷன் தன் சொந்த பலத்தி



னாலே பொறுக்கக் கூடாதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் சேசுநாதர்சுவாமி சித்தமிரங்கி, தாம் ஸ்தாபித்த திருச்சபையின் குருக்களுக்கு இப்பேர்ப்பட்ட வல்லமையைக் கொடுத்திருக்கிறார். மற்றவர்களுக்கோவென்றால் அந்த அதிகாரங் கொடுக்கவில்லை. ஆகையால், திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிற பற்பல மதங்களிலுள்ள எந்தக் குருவும், மெய்யான பட்டம் பெற்றிருந்தாலும், பாவப்பொறுத்தல் கொடுக்கமுடியாது.

(உ) பாவப்பொறுத்தல் அடைய வழிபாடென்ன?—சேசுநாதர்சுவாமி தமது அளவில்லாத பேறுபலன்களை நமக்குக்கொடுக்கும்படியாக, தேவத்திரவிய அநுமானங்களை ஏற்படுத்தினார். அவைகளின் வழியாய் மனிதருக்குப் பாவப் பொறுத்தலையும் இஷ்டப்பிரசாதத்தையும் கொடுக்கவேணுமென்று சித்தமானார். பாவத்தைப்பொறுக்கிறதற்கு முக்கியமாய், ஞானஸ்நானம், பச்சாத்தாபம் ஆகிய இவ்விரண்டு தேவத்திரவிய அநுமானங்களை ஸ்தாபித்தார். அவஸ்தைப் பூசுதலும் வியாதிக்காரரிடத்திலுள்ள மீதியான பாவங்களை மன்னிக்கக்கூடும்.

(ங) அதிகாரத்தின்பேரில்:—தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றுகிறதற்குத் திருச்

சபைக்குருக்களுக்குப் பொதுவான வல்லமையிருந்தாலும், அவர்களுக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் அப்படிச்செய்ய அவர்களுக்குத் திருச்சபையின் கட்டளை. ஆகையால் மற்ற இடங்களில் யாதொரு அதிகாரமுமில்லை. அதெப்படியெனில், இப்பூலோகத்தில் குற்றங்களை விசாரித்துத் தண்டிப்பதற்கு, ஒருவன் நியாயாதிபதி என்னும் பட்டம் பெற்றிருந்தபோதிலும், தன் அதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஊர், எல்லையைத் திட்டம் பண்ணும்வரைக்கும், அதைச்செலுத்தமுடியாது. மேலும் அவனுக்குக் குறிக்கப்பட்ட இடத்திற்கு வெளியேயும் அந்த அதிகாரம் செல்லாது. இப்படி நடக்கிறதை நாம் நாள்தோறும் கண்டு வருகிறோம்.

(௪) அதிகாரமில்லாத குரு பாவம் பொறுக்கலாமா?—அப்படியே ஒருவர் குருப்பட்டம் பெற்றிருந்தாலும், தமக்குக் குறிக்கப்பட்ட எல்லைக்குள் மாத்திரந்தான் அவர் தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றலாம். ஆகையால் பாப்பானவரிடத்திலேயாகிலும், மேற்றிராணிமாரிடத்திலென்கிலும், அதிகாரமும் உத்தரவும் பெற்ற குருக்கள் மாத்திரம் குறிக்கப்பட்ட இடங்களிலே பாவப்பொறுத்தல் கொடுக்கலாம். அப்



படி உத்தரவில்லாத குருவிடத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவன் மெய்யாகவே பாவப்பொறுத்தல் அடைகிறதில்லை. ஆனதால் திரும்பவும் அப்பாவங்களைச் சரியான அதிகாரம் பெற்ற குருவிடத்தில் அவன் பாவசங்கீர்த்தனம்பண்ணி வெளிப்படுத்தவேண்டியது.

(௫) மரணசமயத்தில் விசேஷ உத்தரவுண்டா? இப்படித் தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றுகிறது திருச்சபையால் நியமிக்கப்பட்ட குருக்களைச்சேர்ந்த காரியமாயிருந்தாலும், மரண சமயத்திலிருக்கிறவர்களுக்கு யாராவது ஞானஸ்நானம் கொடுக்கலாம். அன்றியும், மரண ஆபத்திலிருப்பவர்களுக்கு அதிகாரம் பெற்ற குருவில்லாமற்போனால், சத்தியவேத ஆசாரப்படி பட்டம் பெற்ற எந்தக் குருவாவது பாவசங்கீர்த்தனமும், அவஸ்தைப்பூசுதலும் கொடுக்கிறதற்குத் திருச்சபை உத்தரவு கொடுக்கிறது. ஏனென்றால், மரண சமயத்தில் எல்லாரும் சேசுநாதர்சுவாமியிடத்தில் நல்ல தீர்வையடைந்து, மோக்ஷராச்சியத்தில் சேரவேண்டுமென்பதே திருச்சபையின் முழு ஆசையாமே.

## 10. தனித்தீர்வையின்பேரில்.

ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்து போகிறது மரணமென்றுசொல்லப்படும். நாம் இறந்து

போனபிறகு, சரீரம் அழிந்துபோனாலும், நம்முடைய ஆத்துமம் ஒருபோதும் அழியாது. ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்த க்ஷணத்திலே, சர்வேசுரன் ஒவ்வொருவரும் செய்த பாவபுண்ணியங்களுக்குத் தக்கபடி கணக்குக் கேட்டுத் தீர்வையிடுவார். பரிசுத்தமான புண்ணியாத்துமாக்களாகிய நீதிமான்களுக்குச் சம்பாவனையாக மோக்ஷ பாக்கியத்தைக் கட்டளையிடுவார். தங்கள் பாவங்களுக்குத் தக்கபடி உத்தரியாத புண்ணியவான்கள் உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போவார்கள். மெய்யான வேதத்தை அறிந்து அநுசரியாத அஞ்ஞானிகள் முதலிய அன்னிய மதஸ்தரும், பழிவாங்குகிறவர்களும், திருடரும், காமாதுரரும், குடிவெறியரும், வேதப் படிப்பினைப்பிரகாரம் நடவாதவர்களும், எவ்வித சாவானபாவத்தோடேயாவது சாகிற மற்ற யாவரும், நரகத்திலே விழுந்து, அதிலே ஊழியுள்ளகாலம் பசாசுகளோடே நெருப்பிலே வெந்து நித்தியவேதனை அநுபவிப்பார்கள்.

### 11. மாம்ஸ உத்தானத்தின் பேரில்.

மாம்ஸமென்பதற்குச் சரீரமென்றும், உத்தானமென்பதற்கு உயிர்த்தலென்றும் அர்த்தம்.



உலகமுடிவிலே, சகல மனிதர்களும் தங்கள் தங்கள் சரீரத்தோடு எழுந்திருப்பார்கள். ஆதி மனிதனுடைய சரீரத்தைச் சர்வேசுரன் மண்ணால் உண்டாக்கினதுபோல, அழிந்துபோன நமது சரீரத்தின் தூளியைத் திரும்பவும் சரீரமாக அவர் உண்டுபண்ணுவாரென்பது குன்றாச் சத்தியம்.

(க) பின்னும், மோக்ஷம், உத்தரிக்கிறஸ்தலம், நரகமாகிய இம்மூன்று ஸ்தலங்களுள் ஒன்றிலிருக்கும் நமது ஆத்துமத்தைச் சரீரத்தோடு சேர்ப்பார். எந்தச் சரீரத்தோடு முந்தியிருந்தோமோ, அந்தச் சரீரத்தோடு தானே உயிர்த்து, சாகாமல், ஊழியுள்ளகாலம் இருப்போமென்று அறியக்கடவோம். ஏனென்றால் இவ்வுலகத்திலிருந்தபோது, சரீரம் ஆத்துமத்தோடே ஒன்றித்து, பாவத்துக்கும் புண்ணியத்துக்கும் எப்படிப் பங்காளியாயிருந்ததோ, அப்படியே சம்பாவனைக்கும் அல்லது ஆக்கினைக்கும் அது பங்காளியாயிருப்பது ஞாயமாமே.

(உ) பாவிகளுடைய சரீரம் அவலட்சணமாயும் அருவருப்புக்குரியதாயும் உயிர்த்தெழுந்தபின்பு, நரகத்தில் விழுந்து, வேகாமல் வெந்து, சாகாமல் செத்து, நாறுகிற பிரேதமாய் அங்கே கொடூர ஆக்கினையை ஆத்துமத்தோடு

கூட அநுபவிக்கும். புண்ணியவான்களுடைய சரீரமோவென்றல், முன் உலகத்தில் சீவித்த போது அதற்கிருந்த குறைச்சல்கள் இலட்சணக்கேடுகள் நீங்க, வாக்கு கெட்டாத அழகு சௌந்திரியத்தோடு உயிர்த்தெழுந்து, மோக்ஷத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களும் ஆத்துமத்தோடுகூடப் பேரின்ப பாக்கியத்தைச் சுகித்தநுபவிக்கும்.

## 12. நடுத்தீர்வை.

உலக முடிவாகிற கடைசி நாளில், சம்மனசுக்கள், "எல்லாரும் எழுந்திருந்து, தீர்வைக்கு வாருங்கள்" என்று எக்காள சத்தத்தோடு கூப்பிட்டவுடனே, ஆதி மனுஷன் முதல் பூமியில் பிறந்திறந்த சகலரும் சர்வேசுரனுடைய வல்லமையால் உயிர்த்தெழுந்து, தீர்வைக்கு வருவார்கள்.

(க) அப்போது சேசுநாதர்சுவாமி மிகுந்த மகிமைப்பிரதாப வல்லமையோடு எழுந்தருளி வந்து, தமது அளவில்லாத நீதி விளங்கச் சகல மனிதரையும் நடுத்தீர்ப்பார். புண்ணியாத்துமாக்களை மென்மேலும் மகிமைப் படுத்தி, பாவிகளைச் சகல மனுஷருக்கு முன்பாகத் தாழ்த்திச் சபித்து நாணச்செய்வார்.



(உ) உலகமுடிவிலே உத்தரிக்கிற ஆத்துமாக்கள் எல்லோரும் மோக்ஷத்துக்குப்போகவே, உத்தரிக்கிற ஸ்தலம் முடிந்துபோகும். ஆனால் நரகமும் மோட்சமும் எக்காலமும் நீடித்திருக்கும். அதினாலேதான், சதநமான சீவியத்தை அதாவது முடிவில்லாத சீவியத்தை விசுவசிக்கிறேனென்று விசுவாசமந்திரத்தில் சொல்லுகிறோம்.

## 13. வேத சத்தியங்கள்.

தப்பில்லாத சத்தியசுரூபியாகிய சர்வேசுரன் திருவுளம் பற்றினபடியினாலேயும், அவராலே ஸ்தாபிக்கப்பட்ட வழுவாத திருச்சபை நமக்குப் படிப்பிக்கிறதினாலேயும், அதின் கருத்தப்படி வேத சத்தியங்களையெல்லாம் நாம் உறுதியாய் விசுவசிக்கக்கடவோம்.

# இரண்டாம் பிரிவு.

## ஆத்தும இரட்சணியம் அடையும்படி செய்யவேண்டிய காரியங்கள்.

இரட்சணியம் அடைய வேணுமானால் முதல் பிரிவிலே சொன்ன விசுவாச சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவசிக்கவேண்டியதுமல்லாமல், அவைகளுக்கு ஏற்றபிரகாரம் நடப்பதும் அவசியம். ஆகையால், சகலரும் தேவ கற்பனைகளையும், திருச்சபைக் கட்டளைகளையும் அநுசரித்து, பாவத்தைத் தள்ளி, தங்கள் அந்தஸ்தின் கடமைகளையும் சரியாய் நிறைவேற்றக் கடவார்கள்.

## I. சர்வேசுரனுடைய கற்பனைகள்.

### முதலாம் கற்பனை.

சர்வேசுரன் நமக்குக் கொடுத்த கற்பனைகள் பத்து. அவைகளில் முதல் கற்பனையாவது: "உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே,



நமக்குமுன்பாக வேறே சர்வேசுரன் உனக்கு இல்லாதே போவதாக."—இந்த முதல் கற்பனையில் சர்வேசுரன் கற்பிக்கிறதென்னவென்றால்,

(க) சர்வேசுரன் எல்லாத்தையும் படைத்து, சர்வத்துக்கும் ஆண்டவராயிருக்கிறதினாலே, அவருக்குத் தேவ ஆராதனை நமஸ்காரம் செய்து, அவருக்கு மாத்திரமே பலிபூசை ஒப்புக்கொடுக்கவேண்டியது.

அன்றியும், சர்வேசுரனைத் தக்க வணக்கத்தோடு அடிக்கடி மன்றாடி, நாம் அடைந்த நன்மை உபகார சகாயங்களுக்கு நன்றியறிந்த தோத்திரஞ்சொல்லி, நமக்கு அவசரமானவைகளைக் கேட்கவேணும்.

மனிதனுக்குச் சரீரமும் ஆத்துமமும் இருக்கிறபடியினாலே, அவன் சர்வேசுரனுக்கு வெளி ஆராதனையும் உள்ளாராதனையும் செலுத்தவேண்டும். வாய்ச்செபங்களை அடக்கவொடுக்கத்தோடு சொல்வது வெளி ஆராதனை. சர்வேசுரன் அறிவித்த சகல சத்தியங்களையும் உறுதியாய் விசுவசித்து, அவர் பேரில் கெட்டியான நம்பிக்கை வைத்து, சகலத்தையும் பார்க்க அவரைச் சிநேகிப்பதுதான் உள்ளாராதனை. இப்படியே நமது புத்தி மனதைச் சர்வேசுரனுக்

ருக் கிழ்ப்படுத்தி, காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிறோம்.

(உ) அர்ச்சியசிஷ்டவர்களுடைய வணக்கம்:— உண்டாக்கப்பட்ட வஸ்துக்கள் எவ்வளவுமேலானவைகளாயிருந்தாலும், அவைகளுக்கு ஒருக்காலும் தேவ ஆராதனையைச் செலுத்தலாகாது. ஆகையினாலேதான், தேவமாதா முதலான அர்ச்சியசிஷ்டவர்களுக்குப் பூசைப்பலியை நாம் ஒப்புக்கொடுக்கிறதுமில்லை, தேவ ஆராதனையைச் செலுத்துகிறதுமில்லை. ஆனால் அவர்களைக்குறித்துச் சர்வேசுரனுக்குப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களுக்கு அளிக்கப்பட்ட திரளான வரப்பிரசாதங்களுக்காக ஆண்டவரைத் தோத்திரம்பண்ணுகிறோம். மேலும் அர்ச்சியசிஷ்டவர்கள் நமக்காகத் தேவ சமுகத்தில் மனுப்பேசி, உதவிசெய்யும்படி, அவர்களையும் மன்றாடுகிறோம்.

(ங) சுரூப வணக்கம்:—இம்முதற் கற்பனையினால் சுரூப வணக்கம விலக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கக்கூடாது. ஏனென்றால், ஒரு படத்தையாகிலும் சுரூபத்தையாகிலும் பார்த்து, நாம் சங்கைசெய்யும்போது, கடுதாசிப் படத்துக்கும், மரச்சுரூபத்துக்கும் இந்தச் சங்கையை நாம் செலுத்துகிறதில்லை. ஆனால்



சுரூபங்களைப் பார்க்கும்போது, அவைகள் நமக்கு ஞாபகப்படுத்துகிற *சேசுநாதர்சுவாமி, தேவமாதா, மற்ற அர்ச்சியசிஷ்டவர்களை நினைத்து, அவரவர்களுக்குத்தக்க வணக்கத்தைச் செலுத்துகிறோமேயல்லாமல், சுரூபங்களுக்குத் தானே தேவ ஆராதனை செய்கிறதில்லை.

(ச) அஞ்ஞானக்கிரியை:—பேய் பசாசுகளைக் கும்பிடவும்படாது, அவைகளுக்காக யாதொன்றும் ஒப்புக்கொடுக்கவும்படாது. அவைகளை மன்றாடக்கூடாது. அவைகளிடத்தில் கோணங்கிக் குறி கேட்கப்படாது. யாதொரு நன்மை அடைகிறதற்கானாலும், வியாதி குணமாகிறதற்காகிலும், பிறருக்குச் சேதம் வருவிக்கிறதற்கானாலும், பசாசின் உதவி ஒத்தாசையைக் கேட்கக் கூடாது. இதுவெல்லாம் மகா பெரிய பாவங்கள்.

நல்ல நாள், கெட்ட நாள், சகுன சாஸ்திரம், நிமித்தம், பொருத்தம் முதலான அஞ்ஞான அபத்த சடங்குகளும், கண் திஷ்டிப்பரிகாரம், பார்வை பார்த்தல், முதலியவைகளும் முதல் கற்பனையினால் விலக்கப்பட்டிருக்கின்றன.

### இரண்டாம் கற்பனை.

“சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியாதிருப்பாயாக”:—

(க) சர்வேசுரனுடைய திருப்பெயரை வீணாய்ச்சொல்லாமல், அதைத் தக்க வணக்க ஆசாரத்தோடே உச்சரிக்கவேணுமென்றும், சாபமிடக்கூடாதென்றும், தேவதூஷண வார்த்தைகளைச் சொல்லக்கூடாதென்றும், இரண்டாம் கற்பனை படிப்பிக்கின்றது.

(உ) குற்றமின்றிச் சத்தியம்பண்ணுவதற்குச் சத்தியஞ்செய்யும் காரியம் உண்மையானதாகவும், அவசியமானதாகவும், கனமானதாகவுமிருக்கவேண்டும். மற்றப்படி அற்பக்காரியங்களுக்கும், பொய்யான சங்கதிகளுக்கும், சர்வேசுரன்பேராலேயாகிலும், அர்ச்சியசிஷ்டவர்கள் பேராலேயென்கிலும், ஒருக்காலும் ஆணையிடப்படாது.

(ங) இதைத்தவிர, நாம் சர்வேசுரனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாடுகளையும், செய்துகொண்ட நேர்ச்சி வேண்டுதல்களையும், கூடியமாத்திரம் நிறைவேற்றவும், இதில் கற்பித்திருக்கிறது. ஒரு தர்மக்கிரிகை சர்வேசுரனுக்காக செய்வேனென்று பிரதிக்கினை பண்ணுகிறதும், வாக்குக் கொடுக்கிறதும் மெய்யான வார்த்தைப்பாடல்ல. மெய்யான வார்த்தைப்பாட்டுக்கு, தன்மேல் ஒரு கடமை மனம்பொருந்தி சுமத்திக்கொள்ளவேண்டியது. நேர்ந்த காரியத்தை



நாம் நிறைவேற்றாவிட்டால், அது சாவானபாவமாகவென்கிலும், அற்பப் பாவமாகவென்கிலுமிருக்குமென்று உறுதியாய்த் தீர்மானிப்பது அவசியம். இப்படிப்பட்ட கடமையைக் குறிக்காமல், பொதுவில்மாத்திரம் ஓர் நேர்ச்சி செய்தால், அதைச் செலுத்தாமலிருக்கிறது பாவமல்ல.

## மூன்றாம் கற்பனை.

"சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக":—இந்த மூன்றாம் கற்பனையினால், ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் பத்தி வணக்கத்தோடு முழுப்பூசை காணக் கடனிருக்கிறது. மீளவும் கைத்தொழில் வேலைக்காரர்செய்யும் கஷ்டமான சரீர உழைப்பு முதலிய விலக்கப்பட்ட வேலைகளை அவசரமின்றிச் செய்யக்கூடாது.

(க) இந்த கற்பனையை மீறுகிறதில் எத்தனை பாவமுண்டு:—இந்த நாட்களில், சரியான முகாந்தரமின்றி, பூசைகாணாமல் இருக்கிறது ஒரு சாவான பாவமும், அவசரமில்லாத கடினவேலையைச் செய்கிறது ஒரு சாவான பாவமும் ஆக இரண்டு சாவான பாவங்களுண்டு. இதுவும்தவிர வேதசத்தியங்களும், வேத ஒழுங்குகளும் தெரி

யாதவர்கள் இந்நாட்களில் பிரசங்கங் கேட்கவும், ஞான உபதேசத்திற்கு வரவும், கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(உ) பூசைகாணக் கடன்பட்டிருக்கிறவர்களார்?—பெரியவர்கள் மாத்திரமல்ல, புத்தி விபரம் அறிந்த பிள்ளைகளும் இந்தக் கற்பனைக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஆனதால், அவர்கள் பூசை காண்கிறார்களோ இல்லையோவென்று விசாரிப்பது, தாய் தகப்பன்மாருடைய பிரதான கடமை.

(ங) ஞாயிற்றுக்கிழமையை நன்றாய் அநுசரிக்கிறதெப்படி?—மீளவும், கிறீஸ்துவர்கள் ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் விசேஷமான செபங்கள்செய்து, ஞானவாசகம் வாசித்து, சிலுவைப்பாதைசேவித்து, ஞான உபதேசம் படித்து, மந்திரம் குறிப்பிடம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து, இவைமுதலான சுகிர்த கிரிகைகளைச்செய்வது அந்த நாட்களை உத்தமமாய் அநுசரிப்பதற்கான வழியாகும்.

(ச) குருவானவர் பண்ணும் பூசைமந்திரஞ் சகல கிறிஸ்துவர்களும் காணவேணுமென்று திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது. ஆனால் உபதேசி, கோவில்பிள்ளை செபிக்கும் பூசை மந்திரத்துக்குப் போகிறது திருநாளை அநுசரிக்கிறதற்குத்தக்க வழிபாடாகும். அதிக தூரமாய்



குடியிருக்கிறவன் குரு பண்ணுகிற பூசைக்கும் உபதேசிசொல்லுகிற பூசைமந்திரத்துக்கும் போகக்கூடாதானால் ஞாயிற்றுக்கிழமையைச் சர்வேசுரனுடைய திருநாளாக அநுசரிக்கும்படி, தன் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரை[illegible] விசேஷ செபம், ஞானவாசகம், முதலிய பத்திக்குரிய முயற்சிகளைச் செய்வானாகில், மெத்த நல்லது. விசுவாசத்தைக் காப்பாற்றுகிறதற்கும், மற்றப் புண்ணியங்களில் விர்த்தியடைகிறதற்கும், அஞ்ஞானிகள் நடுவிலே வாசம்பண்ணுகிற கிறீஸ்துவர்களுக்கு இது மகா பிரயோசனமாயிருக்கும்.

## நாலாம் கற்பனை.

“பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக”:—

(க) பிள்ளைகள் தங்கள் தாய் தகப்பன்மார்களைச்சங்கித்து, சிநேகித்து, பாவம் இல்லாத காரியங்களிலே அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கடவார்கள். பெற்றோர் தரித்திரம், வியாதி, துன்பத்தினால் வருத்தப்படுகையில், பிள்ளைகள் தங்கள் அந்தஸ்துக்குத்தக்கது, அவர்களுக்கு அன்னவஸ்திரம்கொடுத்து, வேண்டிய உதவி, ஒத்தாசை, ஊழியம் செய்து, நன்றாய் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதுவுமல்லாமல், நல்ல மரணத்துக்கு ஆயத்தம் பண்ணவும், அவஸ்தை சமயத்தில் அவர்கள் தேவத்திரவிய அநுமானங்களைப் பெறும்படி உதவிசெய்யவும், இறந்தபின் தக்கமேரையாய் அடக்கம் பண்ணி, அவர்களுடைய ஆத்துமத்துக்காகப் பூசை தான் தர்மமுதலிய பக்திமுயற்சிகளைத் தங்களால் கூடியமட்டும் நடப்பிக்கவும், பிள்ளைகள்மேல் கடனுண்டு.

தங்கள் தாய் தந்தைகளை மனசுக்குள் பகைத்து, சங்கைக் குறைவாய்ப்பேசிக் கோபித்து, அடித்துச் சபித்து, கஸ்திப் படுத்துகிற பிள்ளைகள் பாவம் கட்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், தங்கள் பேரில் தேவ கோபாக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். இப்பேர்ப்பட்ட குற்றங்கள் சாதாரணமாய் சாவானபாவமாயிருக்கும்.

(உ) தாய் தகப்பன்மார்களோவென்றால் தங்கள் பிள்ளைகளைத் தக்கபடி சிநேகித்து, அவர்களுக்குவேண்டிய சவரக்ஷணைசெய்து, அவர்கள் ஆத்துமத்துக்கு அடுத்தவைகளை விசேஷமாய் விசாரித்து, வேதசத்தியங்களையும் மந்திரம் குறிப்பிடங்களையும் படிப்பித்து, தங்கள் அந்தஸ்துக்கேற்ற அலுவலைக் கற்றுக்கொடுக்க வேணும்.



பிள்ளைகளுடைய நடக்கையின்மட்டில், கண்ணுண்டாயிருந்து, குற்றம் செய்கையில் அவர்களைக் கண்டித்துத் திருத்துவதும் தாய்தந்தைகளின் கடமையாம்.

(௩) புருஷன் பெண்சாதியாகிய இருவரும் அன்னியோன்னிய சிநேகப் பிரமாணிக்கமுள்ளவர்களாய் ஒன்றித்திருக்கிறதுமன்றி, குடும்பத்தின் நன்மையையும், விசேஷமாய் ஆத்தும இரட்சணியத்தையும் கவனித்து நடக்க வேண்டும்.

(௪) மாமனும் மாமியாரும் தங்கள் மருமக்கள்மார்களை சொந்தப் பிள்ளைகளைப்போலச் சிநேகித்து நடப்பிக்கவும்,—மருமகனும் மருமகளும், மாமி மாமன்மார்களைச் சொந்தத்தாய் தகப்பனைப்போலச் சங்கித்து, பராமரித்துப் பணிந்து நடக்கவும், நாலாம் கற்பனை கற்பிக்கிறது.

(௫) ஊழியக்காரரோவென்றால் தங்கள் எஜமான் எந்த மதஸ்தனாயிருந்தபோதிலும், தக்க சங்கைகாட்டி, கீழ்ப்படிந்து, சுறுசுறுப்போடே வேலைசெய்து, பிரமாணிக்கமுள்ளவர்களாயிருக்கவேணுமென்றும்,—எஜமான்கள் தங்களுடைய ஊழியக்காரருக்குத் தக்க சம்பளம் கொடுத்து, நல்ல புத்திமதிசொல்லி, நல்ல மாதிரிகை

காண்பித்து, அவர்கள்மட்டில் தயை இரக்கம்,
நியாயநீதி செலுத்திவரவேணுமென்றும் கற்பிக்
கிறது. ஆனால் எஜமான் தேவகற்பனைகளுக்கு
விரோதமான கட்டளையிட்டால், ஊழியக்காரர்
ஒருபோதும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கக்
கூடாது.

(௬) யாதொரு அதிகாரம் பெற்றிருக்கிறவர்கள்
தங்களுடைய அந்தஸ்துக்கடுத்த கடமைகளை
எல்லாம் சுமுத்திரையாய் நிறைவேற்ற வேணு
மென்பதும் இக்கற்பனையின் படிப்பினை. ஆகை
யால் குடிகளுக்கு அக்கிரமமாய்த் துன்பம்
வருத்துவிக்கிற உத்தியோகஸ்தரும், அநி
யாயமான தீர்ப்பு சொல்லுகிற நியாயாதிபதி
களும், கனமான பாவத்தைக் கட்டிக்கொள்ளு
கிறார்கள். இப்பேர்ப்பட்ட அநியாயங்களுக்
கெல்லாம் பரிகாரம் பண்ண இவர்கள்பேரில்
கடன் சுமந்திருக்கிறது. இதன்றியே, லஞ்சம்
வாங்குகிறது உலக சட்டத்துக்கும், தேவ கட்
டளைக்கும் விரோதமாயிருக்கிறதென்று அறிய
வும்.

ஐந்தாங் கற்பனை.

"கொலை செய்யாதிருப்பாயாக":—

(௧) சண்டை சச்சரவு திட்டுதல், கொலை பாத
கம் முதலிய பொல்லாங்குகளைச் செய்யாமலும்



அவைகளைச் செய்யமுதலாய் ஆசைப்படாம
லிருக்க வேண்டியது.

(௨) பிறருக்குத் துர்மாதிரிகை காண்பிக்கிற
தும், துர்ப்புத்தி சொல்லுகிறதும், பகை
பழி முதலான தின்மைகளும் இக்கற்ப
னைக்கு விரோதமான பாவங்களாம்.

(௩) பிறர் செய்யும் குற்றங்களை நல்ல மன
தோடு பொறுத்துக்கொள்ளுகிறதும் நமது கடன்
தான்.—அப்படிப் பொறுத்துக் கொள்ளாமல்,
மனதுக்குள்ளே பகை வர்மம் வைத்துக்கொண்
டு, ஒருபோதும் பாவசங்கீர்த்தனம் பண்ணக்
கூடாது. அப்படிச்செய்தால் தேவ துரோக
மாயிருக்கும்.

(௪) வியாச்சியம் செய்கிறது இந்தக் கற்ப
னைக்கு விரோதமா? நமது எதிராளிசெய்த குற்
றத்தை எப்போதும் மன்னிக்கவேண்டுமென்
பது அவசரமாயிருந்தாலும், அவனுடைய குற்றத்
தினாலே வந்த நஷ்டத்தை அவன் உத்தரிக்கும்படியாக
நாம் வேண்டிய முயற்சி செய்யலாம். நமக்குச்
சொந்தமானபொருள் நியாயமாய்க் கிடைக்கு
ம்படி, நாம் வியாச்சியம் பண்ணலாம். ஆனால்
அது சமாதானத்துக்கும் பேச்சுவார்த்தைக்குப்
விக்கினமாயிருக்கக்கூடாது.

(ரு) எதிராளியோடு பேசாமலிருக்கலாமா? அதிக பொல்லாப்புவருமென்று ஒருவேளை பேசாவிட்டாலும், திரும்ப சமாதானம் உண்டாவதற்கு வேண்டியபிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கிடையில் மனதிலிருக்கிற வருத்தத்தை வெளிப்பார்வைக்குக் காண்பியாமல், எதிராளிக்குச் சாதாரண உபசாரம்பண்ணி அவனுடைய தப்பிதத்தினிமித்தம் நாம் மனதில் தாங்கல் வைத்துக் கொள்ளுகிறதில்லையென்று காண்பிக்கக்கடவோம்.

நமக்குத் தின்மைசெய்கிறவர்களுக்கு எப்படி நாம் பொறுத்தல் கொடுக்கிறோமோ, அப்படியே சர்வேசுரனும் நமது பாவங்களைப் பொறுத்துக்கொள்ளுவார்.

### ஆறும், ஒன்பதாம் கற்பனைகள்.

"மோகம் அகமியாகமனம் பண்ணாதிருப்பாயாக. — பரதாரத்தை அபேட்சியாதிருப்பாயாக":—

(க) இந்த இரண்டு கற்பனைகளாலும் அசுசியான மோக பாவமும், அதற்கு ஏதுவாயிருக்கிற சிற்றின்ப சரச பரிகாசம், சேஷ்டை, பேச்சுவார்த்தை, நினைவு, ஆசை, பார்வை, துர்ச்சகவாசம், முதலிய பாவங்களெல்லாம் விலக்கப்பட்டிருக்கின்றன.



(உ) மேலும் கெட்ட கூத்து நாடகங்களைப் பார்க்கிறதும், கெட்ட புஸ்தகங்களை வாசிக்கிறதும் பாவமாம். வெளிக்கிரிகைகளினாலே மோக பாவம் கட்டிக்கொள்ளாமல் போனாலும், கெட்ட நினைவுக்கும், கெட்ட ஆசைக்கும் எத்தனைவிசை மனம்பொருந்தி ஒருவன் சம்மதிக்கிறானோ, அத்தனைவிசையும் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறானென்பது நிச்சயம்.

### ஏழாம், பத்தாம் கற்பனைகள்.

"களவாடாதிருப்பாயாக.— பிறருடைமையை அபேட்சியாதிருப்பாயாக.":—

(க) திருடுவதும், கள்ள வழக்காடுவதும், அநியாய வட்டி வாங்குவதும், வியாபார விஷயங்களில் பிறரை ஏய்த்து மோசம் செய்வதும், பிறருக்குச் சேதம் வருவிப்பதும், எவ்விதத்திலாவது இப்பேர்ப்பட்ட துர் ஆசைகளுக்கு இடம் கொடுப்பதும், இவ்விரண்டு கற்பனைகளுக்கு விரோதமான பாவங்களாம்.

(உ) இதுவுமல்லாமல், வாங்கின கடனை உத்தரிக்கவும், கண்டெடுத்த பொருளை உடையவர்களுக்குக் கொடுத்துவிடவும், பிறருக்கு வருவித்த நஷ்டத்துக்குப் பரிகாரம் செய்யவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

(ங) அநியாயமாய் வருவித்த நஷ்டத்தை உத்தரிக்கவேண்டியது.—ஆகையால் பிறருக்கு அநியாயமான நஷ்டம் வருவித்தவர்களும், அதற்கு எவ்விதத்திலாவது உதவிசெய்தவர்களும், பிறர் பொருளை அபகரித்தவர்களும், அகத்தியமாய் உத்தரிக்கவேணும். இந்தக் கடனை முழுதும் தீர்க்கக்கூடாதானால், பாதியாவது, கால்வாசியாவது செலுத்துகிறது அவசியம். கொஞ்சமும் உத்தரிக்க வகையில்லாதவன், தன்னால் இயன்றமட்டும் பிரயாசப்பட்டு, வேலை செய்து, பிறகு கூடுமானபோது, அதற்குப் பரிகாரம் பண்ணுவேனென்று மனதாயிருக்கவேண்டியது. அப்படிச் செய்யாமல் கபடுள்ள மனதோடே பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவன் பாவப்பொறுத்தல் அடையாமல், தேவதுரோகத்தையும் கட்டிக்கொள்ளுகிறான்.

(ச) அநியாயம் செய்கிறவனுடைய பிள்ளைகள் உத்தரிக்க அவசியமாமே.—இப்பேர்ப்பட்ட பரிகாரம் செய்யாமல், யாதொருவன் செத்துப்போவானேயானால், அவனுடைய ஆஸ்திபாஸ்தியைக் கைப்பற்றிக்கொள்ளுகிறவர்கள்பேரில் மேற்சொன்ன கடன் சுமரும். இப்பேர்ப்பட்டவர்கள் தெரிந்திருந்தும் அதைத் தீர்க்காவிட்டால்,



நித்திய நரக ஆக்கினைக்கு ஆளாய்ப்போவார்கள்.

### எட்டாம் கற்பனை.

“பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.”

(க) எந்த விதமான பொய்யும் பித்தலாட்டமும் சொல்லாதிருக்கவேண்டியதுந் தவிர, விசேஷமாய்ப் பிறருக்குப் பொல்லாப்பு நஷ்டம் வருவிக்கத்தக்க பொய் சொல்லக்கூடாது.

(உ) யீளவும், புறணி, ஆவலாதி, கோள், குண்டணி சொல்லுவதும், அப்பேர்ப்பட்ட பேச்சுகளுக்குக் காது கொடுப்பதும் குற்றமாம்.—பிறரைப்பற்றி மனதில் தோன்றுகிறபடி இழிவான எண்ணங்களையும், தகுந்த காரணமில்லாமல் உண்டாகிற சந்தேக சமுசயங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.—முக்கியமாய் நீதிஸ்தலங்களிலே பொய்ச்சாட்சி சொல்லுகிறதை இக்கற்பனை விலக்கியிருக்கிறது.

(ங) மேலும், பொய்ச்சாட்சி, கோள், குண்டணி முதலியவைகளினால் பிறருக்கு வருவித்த பொருள் நஷ்டத்தை உத்தரிக்கிறதுமல்லாமல், அவர்களுடைய பேரைக் கெடுத்ததற்கும், சகாயமட்டும் பரிகாரம் செய்யக் கண்டிப்பான கடனுண்டென்று அறியவும்.

---

## II. திருச்சபைக் கட்டளைகள்.

நம்முடைய ஆத்தும இரட்சணியத்துக்கு உதவியாகச் சர்வேசுரனுடைய பேராலே திருச்சபையானது சில கட்டளைகளைக் கொடுத்திருக்கிறது.

### முதலாம் கட்டளை.

ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாட்களில் முழுப்பூசை காண்கிறதுமன்றி, அவசரமில்லாமல் கடினமானவேலை செய்யக்கூடாது.

கடன் திருநாட்களாவன:—கர்த்தர் பிறந்த திருநாள், கர்த்தர் மோக்ஷத்துக்கு ஆரோகணமான திருநாள், திவ்வியநற்கருணைத் திருநாள், தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள்.

### இரண்டாம், மூன்றாம் கட்டளைகள்.

வருஷத்துக்கு ஒருவிசையாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்வியநற்கருணை வாங்கவேணும்.

(க) பாஸ்குத் திருநாளாகிய கர்த்தர் உயிர்த்த திருநாளுக்கு முந்தியாவது, பிந்தியாவது, சிலநாளுக்குள்ளாக, ஒவ்வொருவரும் தாங்கள்



சேர்ந்திருக்கும் கோவிலிலேதானே, திவ்விய நன்மை வாங்கவேணுமென்பது திருச்சபையின் கட்டளை. யாதொரு முகாந்தரத்தினாலே, குறிக்கப்பட்டகாலத்தில் இந்தக் கட்டளையை நிறைவேற்றக் கூடாதேபோனால், தக்க சமயம் கிடைக்கும்போது, நல்ல ஆயத்தம்பண்ணி, திவ்விய நன்மை வாங்கவேணும்.

(உ) போதுமான குருக்கள் இல்லாத தேசத் [illegible]

அர்ச். பாப்பானவரின் புதுக்கட்டளை:—முன்னிருந்த நாலு கடன்திருநாட்களோடு மற்றொன்று புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்தியாதேச முழுவதும் அர்ச். சவேரியார் திருநாளைக் கடன் திருநாளாகக் கொண்டாடி, அன்றையத்தினம் முழுப்பூசை கண்டு, வேலைசெய்யாமலிருக்கவேண்டியது.

[illegible]

சரியான முகாந்தரமின்றி, பாவசங்கீர்த்தனம் செய்யாமலிருந்தால், அதினிமித்தம் ஒரு சாவானபாவமும், தேவநற்கருணை வாங்காததினிமித்தம் வேறொரு சாவானபாவமும், ஆக இரண்டு பாவங்கள் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

(௧.) புத்தி விபரம் அறிந்த பிள்ளைகளும் வருஷத்துக்கு ஒருவிசையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது. அவர்கள் கூடிய சீக்கிரத்தில் வேதசத்தியங்களைப் படித்து, புதுநன்மை வாங்கவேணுமென்பதும், திருச்சபைக் கட்டளையாமே. திருச்சபை கற்பிக்கிறபடி, பிள்ளைகள் பாவசங்கீர்த்தனம்பண்ணி, திவ்விய நன்மை வாங்குகிறார்களோ இல்லையோவென்று விசாரித்துக் கவனித்து நடத்துகிறது, தாய் தகப்பன்பேரில் சுமந்த கடனும்.

கிறீஸ்துவர்கள் அடிக்கடி திவ்விய நன்மை வாங்கவேணுமென்று திருச்சபை வெகுவாய் ஆசைப்படுகிறது. எனெனில் சரீர சவுக்கியத்திற்கும் பெலனுக்கும் போசனம் அவசரமாயிருக்கிறதுபோல, ஆத்துமமானது பக்தி, சுறுசுறுப்பு, ஞான உறுதி முதலிய புண்ணியங்களில் வர்த்திப்பதற்குத் தேவநற்கருணையாகிற ஞானபோசனத்தை அடிக்கடி உட்கொள்ளுவது அவசரமாமே.

இப்போது அர்ச். பாப்பானவர் தீர்மானித்தபடி, தினந்தோறும் முதலாய் தேவநற்கருணை உட்கொள்ளுகிறதற்கு, சாவான பாவமில்லாமலிருக்கிறதும், சுத்த கருத்தோடு நன்மை வாங்குகிறதும் போதுமான ஆயத்தம். அற்ப



பாவத்தை வெறுக்கிறது நன்மை வாங்க வெகு பிரயோசனமாயிருந்தபோதிலும், கட்டளையல்ல. ஆத்தும குருவின் ஆலோசனை கேட்கவேண்டியது மெய்தான். ஆனால் மேற்சொன்ன பிரகாரம் நல்ல ஆயத்தமாயிருக்கிறவன் நாடோறும் நன்மைவாங்க ஆசைப்பட்டால், அதற்கு ஒருவரும் தடங்கல் செய்யக்கூடாது.

### நாலாம் கட்டளை.

(௧.) சுத்தபோசனமும் ஒருசந்தியும் அநுசரிக்கக் கடமைப்பட்டவர்களார்? இந்த நாலாம் கட்டளைப்படி, புத்தி விபரம் அறிந்த யாவரும் ஞாயமான முகாந்தரமில்லாவிட்டால், வெள்ளிக்கிழமைகளிலும், சுத்தபோசன நாட்களிலும், சுத்தபோசனம் அநுசரிக்கவேண்டும்.—ஒருசந்தி நாட்களில்; இருபத்தொருவயதுக்கு மேற்பட்டவர்களும் அறுபதுவயதுக்குக் கீழ்ப்பட்டவர்களும் ஞாயமான விக்கினமில்லாவிட்டால், ஒருசந்தியாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(௨.) எத்தேசத்திலும் ஒரே ஒழுங்குண்டா? ஒவ்வொரு தேசத்தின் அவசரங்களுக்குத் தக்கபடி, அர்ச். பாப்பானவர் ஒருசந்தி சுத்த போசன நாட்கள் எவை என்பதைப்பற்றியும், அவைகளை அநுசரிக்கும் விதம் யாது என்பதைக்குறித்தும், வெவ்வேறு கட்டளைகள்

கொடுத்திருக்கிறார். அவனவன் தான் வாசம்பண்ணுகிற நாட்டில் வழங்குகிற கட்டளை இன்னதென்று நன்றாய் விசாரித்து, நிறைவேற்றவேண்டும்.

யாதொருவன் வேறே மேற்றிராசனத்துக்குப்போனால், தன் சொந்த மேற்றிராசனத்தின் ஒழுங்குப்படி நடவாமல், தான் தற்காலம் வந்திருக்குமிடத்திலே ஸ்தாபித்திருக்கும் சுத்தநாட்களையும், சுத்தபோசன ஒருசந்தி நாட்களையும் அநுசரிக்கவேண்டியது.

(ங) திருச்சிறுப்பள்ளி மேற்றிராசனத்தில் வசிக்கிற கிறீஸ்துவர்களுக்கு, சுத்தபோசன விஷயத்தில், அர்ச். பாப்பானவர் பத்து வருஷத்துக்குச் சில மன்னிப்பு கொடுத்திருக்கிறார். இந்த மன்னிப்புப்படி சுத்தபோசன நாட்களாவன:—

(1) வருஷத்தின் சகல வெள்ளிக்கிழமைகளும்,

(2) தபசுகாலத்தில்வருகிற புதன் கிழமைகளும், பின் சொல்லியிருக்கிற ஒன்பது ஒருசந்திநாட்களுமாம்.

(ச) ஒருசந்திநாட்களாவன:—" தபசுகால வெள்ளிக்கிழமைகளும், பெரிய சனிக்கிழமையும், கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளுமாம்.



தபசுகாலத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் எத்தனை விசையும் மாமிசம் சாப்பிடலாம். தபசுகாலத்தின் திங்கள், செவ்வாய், வியாழன், பெரிய சனிக்கிழமைநீங்கலாக மற்றச் சனிக்கிழமைகளில் ஒருவேளைமாத்திரம் மாமிசம் சாப்பிடலாம். சரியான முகாந்தரமில்லாமல் இரண்டுவேளை மாமிசம் சாப்பிட்டால், சாவானபாவமாயிருக்கும். தபசுகாலத்திலே ஞாயிற்றுக்கிழமை முதலாய் மாமிசமும், மீனும் ஒரே சாப்பாட்டில் கலந்து சாப்பிடக்கூடாது.

(ஞ) தபசுகாலத்தில் பால், முட்டை சாப்பிடலாமா? திருச்சிறுப்பள்ளி மேற்றிராசனத்தில் தபசுகாலத்தில், ஒருசந்திநாட்கள் தவிர, மற்ற நாட்களில் எந்தச் சாப்பாட்டிலும் முட்டை சேர்த்துக்கொள்ளலாம். ஒருசந்திநாட்களில் பிரதான சாப்பாட்டில்மாத்திரம் முட்டை சாப்பிடலாம். ஆனால் பெரியவெள்ளிக்கிழமையில் முட்டை சாப்பிட உத்தரவில்லை. பால், வெண்ணெய், பால்கட்டி முதலிய பால் பதார்த்தங்கள் எந்தநாட்களிலும் எந்த உணவுநேரத்திலும் சேர்த்துக்கொள்ளலாம்.

## ஐந்தாம் கட்டளை.

கலியாண விஷயத்தில், திருச்சபையானது சில விக்கினங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அப்

பேர்ப்பட்ட விக்கினம் இருக்கையில், அதை அறிவிக்காமலும், உத்தரவு பெறாமலும், பொய்யான முகாந்தரம்சொல்லிக் கள்ளத்தனமாய் உத்தரவு பெற்றும், கலியாணம் முடித்துக்கொண்டால், அது தேவதுரோகமும் விபசாரமுமாயிருக்குமேயல்லாமல், மெய்யான கலியாணமாகமாட்டாது. ஆகையால் யாதொரு விக்கினம் [illegible]தென்று யாராவது அறிந்திருந்தால், அதைக் குருவானவருக்கு அகத்தியமாய் அறிவிக்கவேணுமென்பது திருச்சபையின் கட்டளை.

இந்த ஐந்து கட்டளைகளல்லாமல் திருச்சபைக்குத் தலைவராயிருக்கிற அர்ச். பாப்பாணவர் கொடுக்கும் கட்டளைகளை எல்லாம் சரியாய் அநுசரித்துவர எப்போதும் முழுமனதுள்ளவர்களாயிருக்கக் கடவோம்.

---

## III. பாவத்தின் பேரில்.

---

1. தேவ கட்டளைகளை மீறுகிறதே பாவமென்னப்படும். அது ஜென்மப்பாவம், கர்மப்பாவம் ஆக இருவகையாகும்.



(க) மனிதரெல்லாரும் ஜென்மப்பாவத்தோடு உற்பவிக்கிறார்கள். தேவமாதாமாத்திரம் இத்தோஷமின்றி உற்பவிக்கும் வரமடைந்தாள்.

(உ) புத்தி விபரம் அறிந்தபிற்பாடு, அவனவன் மனதுபொருந்திச் செய்கிற பாவம், கர்மப்பாவம் என்னப்படும். கர்மம் என்றால், கிரிகை அல்லது செய்கையென்று அர்த்தம். ஆகையினால், ஜென்மப்பாவம் ஆதித்தகப்பனுடைய குற்றத்தினாலும், கர்மப்பாவம் நமது சொந்தக் குற்றத்தினாலும் வருகிறது.

(௩) சாவானபாவம், அற்பப்பாவம், ஆக இரண்டு வகை கர்மப்பாவமுண்டு.

2. சாவானபாவமாகிறதென்ன?

கனமான காரியத்தில், வேணுமென்று, தேவ கட்டளையை மீறினால், சாவானபாவமாகிறது.

இந்தப்பாவம் ஆத்துமத்துக்கு ஞானச்சாவு வருவிக்கிறதினால், சாவானபாவம் என்று சொல்லப்படும். ஆத்துமத்தில் சுபாவமான உயிரும், சுபாவத்திற்கு மேலான உயிரும் ஆகிய இரண்டு வகை உயிருண்டு. சர்வேசுரன் ஆத்துமத்தை அழியாதவஸ்துவாய் உண்டாக்கினதினாலே, அது ஒருபோதும் தன் சுபாவமான உயிரை இழந்து சாகமாட்டாது. சாவானபாவத்தால் அதன் சுபாவமான உயிர் அழிகிறதில்லை.

(உ) சாவான பாவத்தினால் வருகிற பொல்லாப்பென்ன? ஆத்துமத்தின் சுபாவத்துக்கு மேலான உயிராகிய இஷ்டப்பிரசாதமும், முன் செய்த புண்ணியங்களினால் அடைந்த பேறு பலன்களும், சாவானபாவத்தால் அழிந்து போகிறது. ஆகையால் இந்த ஸ்திதியில் ஆத்துமம் மோக்ஷ சம்பாவனைக்குரிய யாதொரு மேலான புண்ணியக் கிரிகையும் செய்ய சக்தியில்லாமல், செத்ததுபோலாகி, நரகத்திற்குப் பாத்திரமாகிறது.

### 3. அற்பப்பாவமாகிறதென்ன?

அற்பகாரியத்தில் தேவகற்பனையை மீறுவது அற்பப்பாவமாகும். அற்பப்பாவம் நம்மை உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் பாத்திரவான்களாக்கிறது. ஆகிலும் கனமான காரியங்களில், பெரிய பாவமென்று அறியாமலாவது, அதைக் கவனிக்காமலாவது, பூரணசம்மதமில்லாமலென்கிலும், யாதொரு தேவகட்டளையை மீறினால், அது அற்பப்பாவமாகுமேயொழிய சாவானபாவமாகமாட்டாது.

(க) சாவானபாவத்தின் சுபாவத்துக்கும், அற்பப் பாவத்தின் சுபாவத்துக்குமுள்ள வித்தியாசமென்ன? சாவானபாவத்தினால் தேவ சிநேகத்தைச் சிறிதும் மதிக்காமல், தேவ கோபத்தைப் பிறக்கவி



த்து, சர்வேசுரனுக்கு நிந்தையும்; அவமானமும் வருவிக்கிறோம். அற்பப்பாவத்தினாலேயாவெனில், சர்வேசுரனுடைய நேசத்தை இழந்துவிட மனதில்லாதபோதிலும், அவருக்கு வருவிக்கும் மனவருத்தத்தை அசட்டைபண்ணுகிறோம்.

ஆகையால், சாவானபாவத்தால் சர்வேசுரனை முழுதும் எதிர்த்து, நமது கடைசிமுடிவை இழந்துவிடுகிறோம். அற்பப்பாவத்தினால் சர்வேசுரனை முழுதும் எதிர்க்காமல், நம்முடைய கடைசி முடிவை அடைவதற்குரிய வழிபாடுகளைச் சரியாய் அநுசரியாமல் போகிறோம்.

(உ) ஆத்துமத்தின் ஞான[illegible] பிரசாதத்தை அற்பப்பாவம் போக்குகிறதுமில்லை, குறைக்கிறதுமில்லை. ஆனால் அற்பப் பாவங்களைச் [illegible]டிக்கொள்ளுவதினால், பத்தி உருக்கமும், சுறுசுறுப்பும், புண்ணியத்தின்பேரில் பிரியமும், குறைந்துபோகும். அன்றியும், சோதனைகளை ஜெயிக்கிறதற்கும், நல்ல கிரிகைகளைச் செய்கிறதற்கும், நமக்கு அவசியமாய் வேண்டிய அநுக்கிரகப் பிரசாதமென்கிற தேவ உதவியும் குறைந்துபோகும். கடைசியாய் திரளான வரப்பிரசாதங்களைப் பெறுகிறதற்கு அற்பப்பாவங்கள் தடையாயிருக்கிறபடியினா

லே, நமது ஆசாபாசங்கள் மேற்கொண்டு, நாம் சாவான பாவத்தில் விழுவதற்கு, அவைகள் காரணமாயிருக்கும். சாவானபாவம் சாவைப் போலவும், அற்பப்பாவம் வியாதியைப்போலவும் இருக்கிறதென்று சொல்லத்தகும்.

(௩) அற்பப்பாவமென்று சொல்லும்பொழுது, அந்தப்பாவம் சொற்பப் பாவந்தானேயென்று அலட்சியமாய்ச் செய்யக்கூடாது. ஆத்துமத்தைக்கொல்லுகிற சாவானபாவத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அற்பப்பாவம் சொற்பக் காரியமென்பது மெய்யே. ஆனால் அளவில்லாத மகிமையுள்ள சர்வேசுரனுடைய இந் [illegible] டைவாததினாலே, சாவான பாவம் நீங்கலாக, அற்பப்பாவத்துக்கு ஒத்த பொல்லாப்பு உலகத்தில் ஒன்றுமில்லையென்று சொல்லவேண்டியது. மேலும், அற்பப்பாவமானது நமக்கு மிகுந்த கெடுதல் வருவிக்கிறதினாலே, அதற்கொத்த தின்மை வேறொன்றுமில்லை.

(௪) யாதொருகாரியம் தன்னிலேதானே அற்பப்பாவமாயிருந்தாலும், மனச்சாட்சியின் பிசகினால் சாவானபாவம் ஆகிறதுண்டு. அதெப்படியென்றால், ஒருவன் ஒரு சிறுபழத்தைத் திருடுகிறான் என்று வைத்துக்கொள்வோம்.



அதைத்திருடும்போது, சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதாகத் தப்பிதமாய் எண்ணித்திருடினால், அந்தத் தப்பிதமான எண்ணத்தின் முகாந்திரமாக, அந்த அற்பத்திருட்டுமுதலாய் அவனுக்குச் சாவானபாவமாகும். இந்த உதாரணத்துக்கொத்ததுபோல் மற்ற விஷயங்களிலும் சம்பவிக்கலாம். ஆகையால், அற்பப்பாவம் எது, சாவானபாவம் எது என்று திட்டமாய் அறிந்துகொள்வது அவசரமாமே. ஆனால் எல்லாத்தையும்விட முக்கியமானதேதென்றால், நமது மனச்சாட்சிக்கு விரோதமான எந்தக் காரியத்தையும் ஒருக்காலும் செய்யாமலிருப்பதேயாம்.

### 4. தலையான பாவங்கள்.

தலையான பாவங்கள் ஏழு. இவைகளில் ஒவ்வொன்றும் அநேக பாவங்களுக்கு ஊற்றும், காரணமுமாயிருக்கிறதினாலே, இந்த ஏழு பாவங்களும் தலையான பாவங்களென்று சொல்லப்படுகின்றன.

(௧) ஆங்காரமென்னவென்றால், தன்னைப் பெரிதாயெண்ணி, மற்றவர்களை நிந்திக்கப்பண்ணுகிற பாவம்.

(௨) உலோபித்தனமாவது மட்டுக்கடந்த ஆசை ஆவலோடே பொருளைத்தேடிச் சம்பா

திற்று வைத்துக்கொள்ளவும், தன் அந்தஸ்துக் கடுத்தபடி தானதர்மம் செய்யாமலிருக்கவும், காரணமாயிருக்கிற பாவம்.

(௩) மோகமானதேதென்றால், கற்புக்கு விரோதமான இன்பசுகங்களை அக்கிரமமாய் ஆசித்து, சுகிக்கச்செய்கிற பாவம்.

(௪) காய்மகாரமானது பிறத்தியாருக்கு வருகிற நன்மையைப்பற்றிக் கஸ்தியும், அவர்களுக்கு வருகிறதின்மையைப்பற்றிச் சந்தோஷமு முண்டுபண்ணுகிற பாவம்.

(௫) போசனப்பிரியமாவதேதென்றால், அன்னபான முதலியவைகளை மிதமிஞ்சிச் சாப்பிடத் தூண்டுகிற பாவம்.

(௬) கோபமானதேதென்றால், நமக்குப் பொருந்தாதவைகளை நம்மைவிட்டு அகற்றும்படி, கிரமந்தப்பிச் சண்டை சச்சரவு வருவிக்கிற பாவம்.

(௭) சோம்பலானது, நம்முடைய அந்தஸ்தின் கடமைகளையும், ஆத்தும இரட்சணியத்துக் கடுத்த காரியங்களையும், நிறைவேற்றாமலிருக்கவும், அல்லது அசமந்தமாய் நிறைவேற்றிவரவும், [illegible]ருக்கவும், வழியாயிருக்கிற பாவம்.

## மூன்றாம் பிரிவு.

### இரட்சணியம் அடைவதற்கு உதவியான வழிப்பாடுகள்.

இவைகள் தேவத்திரவிய அநுமானங்களும், செபமுமாமே.

### I. வரப்பிரசாதத்தின் பேரில்.

1. பாவத்தை விலக்கி, மோட்சத்தை அடைவதற்கு நம்முடைய சொந்தப் பலம் போதாது. சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் அகத்தியமாய் வேண்டியது. சர்வேசுரனுடைய விசேஷ உதவி சகாயமில்லாமல், மோட்சத்துக்குப் பாத்திரமான யாதொரு புண்ணியக் கிரிகையும் செய்ய நமக்கு வல்லமையில்லை. சுபாவத்துக்கு மேலானதும், இரட்சணியத்துக்குப் பிரயோசனமானதுமான ஒரு சொற்ப நல்ல நினைவாவது, நல்ல ஆசையாவது, தேவானுக்கிரகமில்லாமல் நம்மிடத்தில் உண்டாகமாட்டாது. இப்படியிருக்க, பெரும் பாவச்சோதனைகளை எப்போதும் ஜெயிக்கவும், புண்ணியத்தில் நிலைநிற்கவும், நம்முடைய சொந்தப் பலத்தினால்

கூடாது. அதற்கு தேவ வரப்பிரசாதம் அவசியம்.

தேவ வரப்பிரசாதம் இரண்டுவகைப்படும். அவையாவன: அநுக்கிரகப்பிரசாதமும், தேவ இஷ்டப்பிரசாதமுமாம்.

2. அநுக்கிரகப்பிரசாதம் ஆகிறதென்ன?

ஆத்தும இரட்சணியம் அடையப் பிரயோசனமான ஒவ்வொரு கிருத்தியத்தைச் செய்கிறதற்கும் அவசரமான தேவ ஒத்தாசை, அநுக்கிரகப்பிரசாதம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு சமயத்திலும், இந்த அநுக்கிரகப்பிரசாதம் நமக்கு அகத்தியமாய்வேண்டியதானபடியால், அந்தந்தச் சமயத்தில் அதை அடையும்படியாக வேண்டிக்கொள்ளவேணும்.

(க) சர்வேசுரன் இவ்வித மேலான உதவியை ஒருவருக்கும் இல்லையென்று சொல்லமாட்டார். பதிதர்களுக்கும், அஞ்ஞானிகளுக்கும் முதலாய்த் தமது சகாயத்தைத் தயவாய்க் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். எல்லா மனிதரும் மோட்சகரை சேரவேணுமென்பதே சர்வேசுரனுடைய சித்தம்.

(உ) அ[illegible] நமது புத்திக்குப் பிரகாசம் கொடுத்து, ம[illegible]தைத்தூண்டி எழுப்பும்போது, இப்பேர்க்கொத்த அநுக்கிரகப்பிரசாதத்தை நாம் பி[illegible]ணியாமல், உடனே அதற்கேற்றபிரகாரம் சுறுசுறுப்போடு [illegible]ந்துகொள்ளவேண்டியது. தேவாநுக்கிரகப்பிரசாதத்தைச் சர்வேசுரன் கொடுக்கிற சமயத்தில், அதைக் கையேற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுவோமானால், வேறே சமயத்தில் இப்பேர்ப்பட்ட விசேஷ உதவியை நமக்குக் கொடுப்பாரென்பது நிச்சயமில்லை. அதினாலே நம்முடைய [illegible] சுபாவத்தையும், பசாசையும் ஜெயிக்கப் பெலனற்றவர்களாய்ப் போவோமென்று பயப்பட இடமுண்டு. ஆகையால், ஆண்டவருடைய அநுக்கிரகப்பிரசாதம் நமக்குத் திரளாய்க் கிடைக்கும்படி, அவரைப் பார்த்து இடைவிடாமல் மன்றாடவேண்டியது.

(ங) சர்வேசுரன் பெரிய பாவிகளுக்கு முதலாய்ப் போதுமான அநுக்கிரகப்பிரசாதம் எப்போதும் கொடுப்பாரென்பது சத்தியம். அதற்குமேல் தாராளமான உதவி அடையும்படிக்கு வேண்டிக்கொள்ளவேண்டியது. ஆகையால், நாம் கெட்டுப்போய் நரகத்தில் விழுந்தால், தேவ உதவியைத் [illegible]கேளாததே இதின் ஏக முகாந்தரம்.

### 3. இஷ்டப்பிரசாதமாவதென்ன?

நமது ஆத்துமத்தை அர்ச்சித்து, சர்வேசுரனுக்கு நம்மை உகந்த பிள்ளைகளாக்கி, யேசுநாதர்சுவாமியோடு நம்மை மோட்ச இராச்சியத்துக்கு உடன்பங்காளிகளாக்குகிற மேலான வரம். சாவானபாவமில்லாத ஸ்திதியில் இருப்பவர்களுக்குச் சர்வேசுரன் தமது தேவஇஷ்டப்பிரசாதத்தைத் தந்தருளுகிறார். அதோடுகூட விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமென்கிற தேவசம்பந்தமான புண்ணியங்களும், விவேகம், நீதி, மனத்திடம், மட்டசனம் என்னும் நல்லொழுக்கத்துக்கடுத்த புண்ணியங்களும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களும், அவர்களுக்குத் தந்தருளுவார்.

(க) ஞான சீவியமாகிற இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவன், அநுக்கிரகப்பிரசாதத்தின் உதவியைக்கொண்டு செய்கிற ஒவ்வொரு நல்ல கிரிகைக்கும், நித்திய பேறுபலன் அடைகிறான், அதினாலே மோட்சத்தில் அந்த ஒவ்வொரு கிரிகைக்கும் விசேஷ மகிமை சம்பாவனை கிடைக்கும்.

(உ) சாவானபாவத்தோடிருக்கிறவன், ஆத்துமத்துக்கு மேலான சீவியத்தைக் கொடுக்கிற இஷ்டப்பிரசாதமில்லாதிருக்கிறபடியால், எவ்விதப் புண்ணியக் கிரிகைகளைச் செய்



தாலும், அவைகளுக்கு மோட்ச சம்பாவனை ஒன்றும் பெறமாட்டான். ஆனால் அந்த நற்கிரிகைகளினிமித்தம், பாவத்தை விட்டு மனந்திரும்புகிறதற்கு விசேஷமான உதவியைத் தயையுள்ள சர்வேசுரன் அவனுக்குத் தந்தருளுவார்.

(ங) சாவானபாவத்தினால் உண்டாகிற கனமான நஷ்டம் நமக்கு வராதபடி, சாவானபாவத்தோடு கொஞ்சநேரமாவது இராமல், உடனே பாவசங்கீர்த்தனம் பண்ணவேண்டும். அப்படிச் செய்யக்கூடாத சமயத்தில், பாவசங்கீர்த்தனம் பண்ணுவேன் என்கிற கருத்தோடு தன்னுடைய பாவங்களுக்காக உடனே உத்தம மனஸ்தாபப்பட்டு, இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாதத்தைத் திரும்பவும் அடையப் பிரயாசைப்படவேணும்.

---

## II. தேவத்திரவிய அநுமானங்களின் பேரில்.

1. சேசுநாதர்சுவாமி தம்முடைய திருமரணத்தினாலே மனுஷருக்காக அடைந்த பாவப்பொறுத்தலையும், இஷ்டப்பிரசாதத்தையும் தந்

தருளும்படி, அவர்தானே தேவத்திரவிய அநுமானங்களை ஏற்படுத்தினார்.

(க) தேவத்திரவிய அநுமானமாகிறதென்ன?— தேவத்திரவியமென்றால், இஷ்டப்பிரசாதமென்றும்,—அநுமானமென்றால், அடையாளமென்றும் அர்த்தமாகும். அதாவது: தேவ இஷ்டப்பிரசாதத்தைக்கொடுக்க, சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய அடையாளமாம்.

(உ) எத்தனை தேவத்திரவிய அநுமானங்கள் உண்டு? நம்முடைய ஞானச்சீவியகாலத்தில் பற்பல அந்தஸ்துக்குத்தக்கதாய் பற்பல தேவ ஒத்தாசை அவசரமாயிருக்கிறது. அந்த அவசரங்களில் நமக்கு வேண்டிய ஒத்தாசை செய்கிறதற்குச் சேசுநாதர்சுவாமி ஏழு தேவத்திரவிய அநுமானங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளாவன: ஞானஸ்நானம், உறுதிபூசுதல், நற்கருணை, பச்சாத்தாபம், அவஸ்தைபூசுதல், குருத்துவம், மெய்விவாகம்.

## 2. தேவத்திரவிய அநுமானத்துக்கு வேண்டிய பொருள், வார்த்தைகளின் பேரில்.

ஒவ்வொரு தேவத்திரவிய அநுமானத்திலும் நாம் பஞ்சேந்திரியங்களால் உணரக்கூடிய பொருள், வார்த்தையாகிய இரண்டு அடையாளங்களைச் சேசுநாதர்சுவாமி சேர்த்திருக்கிறார். தேவத்திரவிய அநுமானத்தைப் பெறும்போது ஆத்துமத்துக்கு அளிக்கப்படும் இஷ்டப்பிரசாதத்தை இவ்விரண்டு அடையாளங்கள் வெளியாய்க் காட்டுவதுந்தவிர, அவைகளே அந்த இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கச் சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன.

(க) அதெப்படியென்றால், அந்தந்த தேவத்திரவிய அநுமானத்திற்குரிய பொருளையும், வார்த்தைகளையும், அதிகாரமுள்ளவர்கள் தக்க கருத்தோடு சேர்த்து நிறைவேற்றினால், தகுந்த ஆயத்தமாயிருக்கிறவர்களுக்குத் தேவ இஷ்டப்பிரசாதம் கிடைக்குமென்பது வேத சத்தியம்.

அப்படியே, ஞானஸ்நானத்தில் ஒரு குழந்தையின் தலையிலே தண்ணீர் வார்த்துச், சொல்லவேண்டிய வார்த்தைகளைத் தக்க கருத்தோடு உச்சரித்தால், அக்குழந்தையிடத்திலுள்ள ஜென்மப்பாவம் நீங்கி, அதின் ஆத்துமம் இஷ்டப்பிரசாதத்தினாலேயும், சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களினாலேயும் அலங்கரிக்கப்படும் என்று மேற்சொன்ன குறிகளால் நிச்சயமாய் அறிகிறோம். இதில், தலைமேல் வார்க்கப்படுகிற தண்ணீர், பொருளாயும், அப்படி வார்க்

ளும்போது சொல்லுகிற செபம், வார்த்தையாயும் இருக்கிறது. இப்பொருளையும் வார்த்தையையும் சேர்த்து, அதிகாரமுள்ளவர்கள் திருச்சபைக் கருத்துப்படி இச்சடங்கைச் செய்து முடித்தால், பாவ அசுத்தத்தைக் கழுவுகிற ஞானஸ்நானம் என்கிற தேவத்திரவிய அநுமானமாகும்.

(உ) சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த பொருளும், வார்த்தையும், கருத்தும் தேவத்திரவிய அநுமானத்துக்கு அகத்தியமாய் வேண்டியிருப்பதினால், அவைகளில் அவசியமானதேதாவது சரியாய் இல்லாதேபோனால், தேவத்திரவிய அநுமானம் ஆகமாட்டாது. இஷ்டப்பிரசாதமும் கொடுக்கப்படமாட்டாது.

### 3. ஒவ்வொரு தேவத்திரவிய அநுமானத்துக் குரிய விசேஷ வரப்பிரசாதம்.

ஒவ்வொரு தேவத்திரவிய அநுமானமும் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதுமல்லாமல், அதைப் பெறுகிறவன் தன்மேல் சுமருகிற கடமைகளைக் கமுத்திரையாய் நிறைவேற்றுவதற்கு அவசியமான அநுக்கிரகப்பிரசாதத்தை வேண்டியபோதெல்லாம் அடையும்படி, அவனுக்குச் சுதந்தரத்தையும் கொடுக்கும். இந்த



அநுக்கிரகப் பிரசாதத்தைப்பெறுவிக்கும் சுதந்திரம் தேவத்திரவிய அநுமானத்தில் கிடைத்த இஷ்டப்பிரசாதத்தினால் உண்டாகிறது.

### 4. ஞான உயிரைக் கொடுக்கிறதும் அதை அதிகரிக்கிறதுமான தேவத்திரவிய அநுமானங் களின் பேரில்.

இந்த ஏழு தேவத்திரவிய அநுமானங்களில் இரண்டு ஞான உயிரில்லாத பாவிகளுக்கும், மற்றவைகள் ஐந்தும் ஞான உயிராகிய இஷ்டப்பிரசாதத்தோடு இருக்கிறவர்களுக்கும் நியமிக்கப்பட்டது. பாவத்தினிமித்தம் ஞான உயிரில்லாதவர்களுக்கு ஆத்துமத்தின் உயிராகிய இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கும்படியாக, ஞானஸ்நானமும், பச்சாத்தாபமும் விசேஷமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

மற்ற தேவத்திரவிய அநுமானங்கள் ஐந்தும் ஆத்துமத்திலிருக்கிற தேவ இஷ்டப்பிரசாதம் மென்மேலும் அதிகரிக்கும்படியாக, ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் ஞான உயிருள்ளவர்களுக்கு உரியதாயிருக்கிறதினாலே, அவைகளை அடைவதற்குச் சாவானபாவமில்லாமல் இருக்கவேண்டியது. ஆனால் ஞானஸ்நானமும்

பச்சாத்தாபமும் பெறுகிறவர்கள் உத்தம மனஸ்தாபத்தினால் பாவப்பொறுத்தலை முன்னமே அடைந்திருப்பார்களாகில், அவர்களிடத்தில் இருக்கிற இஷ்டப்பிரசாதம் இன்னம் அதிகரிக்குமென்பது தப்பாத சத்தியம். அவஸ்தைப்பூசுதலோ வென்றால், பாவசங்கீர்த்தனம் செய்யக்கூடாதவர்களுக்குப் பாவப்பொறுத்தலையும் தரக்கூடியதாயிருக்கிறது.

### 5. ஞான அக்ஷரத்தின்பேரில்.

தேவத்திரவிய அநுமானங்களுக்குள் ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவம் ஆகிய இம்மூன்றும் ஆத்துமத்தில் அழியாத ஞான அக்ஷரத்தைப் பதிப்பிக்கும். அதினாலே அவைகளை ஒருவிசைமாத்திரம் பெற்றுக்கொள்ளலாமே யொழிய, இரண்டு தடவை பெற முடியாது.

(க) இந்த மூன்று தேவத்திரவிய அநுமானங்களும் உண்டாக்கும் ஞானக்குறிகள், சர்வேசுரனுடைய முத்திரைபோல் ஆத்துமத்திலே ஞானவிதமாய்ப் பதிகின்றன. இம்மூன்று அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறாக இருக்கும். ஞானஸ்நானம் பெறுகிறவன், சேசுநாதர்சுவாமியின் சீஷனாகவும், உறுதிபூசுதல் பெறுகிறவன் அவருடைய போர்வீரனாகவும், குருத்துவம் பெறு



கிறவன் அவருடைய குருவாகவும், ஞானவிதமாய்க் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் இப்போது அந்த ஞான அக்ஷரங்களைக் கண்ணாலே பார்க்கக்கூடாதாயினும், மறு உலகத்தில் நன்றாய்க் கண்டுகொள்வோம்.

(உ) அவைகள் மோக்ஷவாசிகளிடத்தில் மகிமை சம்பாவனைக்காகவும், நரகவாசிகளிடத்தில் ஆக்கினை அவமானத்திற்காகவும் என்றென்றைக்கும் தெளிவாய் விளங்கும்.

---

## III. ஞானஸ்நானத்தின் பேரில்.

### 1. ஞானஸ்நானமாவதென்ன?

இது ஜென்மப்பாவத்தையும் கர்மப்பாவத்தையும் போக்கி, நமக்குத் தேவ இஷ்டப்பிரசாதமாகிய ஞானச் சீவியத்தைத் தந்து, நம்மைச் சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்குகிற தேவத்திரவிய அநுமானம்.— ஞானஸ்நானமில்லாமல், ஒருவனும் மோக்ஷத்தை சேரமாட்டான்.

### 2. ஞானஸ்நானம் யார் கொடுக்கலாம்?

அவஸ்தை சமயத்திலே, குருக்கள் வரக்கூடாதபோது, யாரும் ஞானஸ்நானம் கொடுக்

கலாம். ஓர் அஞ்ஞானிமுதலாய், திருச்சபைக் கருத்துப்படி, தக்கவிதமாய்க் கொடுத்தால், அது மெய்யான ஞானஸ்நானமாயிருக்கும்.

(ச) இது உலோகமெங்கும் வழங்கிவருகிற பொது ஒழுங்கு. ஆனால் இத்தேசத்தில், போதுமான குருக்கள் இல்லாததினால், மரண அவஸ்தையிலிராத குழந்தைகள் மட்டிலும், அர்ச். பாப்பானவர் ஒரு விசேஷ உத்தரவு கொடுத்திருக்கிறார். அதாவது: குருக்கள் இல்லாத ஊரில், சௌக்கியமாயிருக்கிற குழந்தைகளுக்கு முதலாய் உபதேசிமார்களாவது, கோவில்பிள்ளைகளாவது, அல்லது ஞானஸ்நானத்தைக் கொடுக்க நன்றாய் அறிந்திருக்கும் வேறேயாராவது இத்தேவத்திரவிய அநுமானத்தை நிறைவேற்றலாம்.

(உ) ஆகையால், [illegible] ஊர்களிலிருக்கிற தாய் தகப்பன்மார் தங்கள் குழந்தைகளுக்குத் தாமதமில்லாமல், தகுந்த ஆளைக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்கும்படி பிரயாசப்படவேண்டியது. இது அவர்கள்மேல் சுமந்த கடன். பிற்பாடு கோவில் சடங்குகளை நிறைவேற்றும்படி, குருவானவரிடத்தில் குழந்தைகளைக்கொண்டு போகவேண்டியது.



(ங) குழந்தைகளுக்கு எப்போது ஞானஸ்நானம் கொடுக்கவேணும்?—குழந்தைகளுக்குக் கூடிய சீக்கிரம் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதென்று அர்ச். பாப்புமார்கள் கற்பித்திருக்கிறார்கள்.

இத்தேசத்தில் கூடின மேற்றிராணிமார்கள் தங்கள் சங்கங்களில், பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம்கொடுக்க எட்டுநாட்களுக்குமேல் தாமதிக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த மேற்றிராணிமார்களின் கட்டளைக்கு உரோமாபுரி அநுமதியுண்டு.

ஆகையால் தாய் தகப்பன்மார்கள் ஆபத்தானவேளையில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தாமதிப்பது சாவானபாவமாகும். ஏனென்றால் அவர்களுடைய தப்பிதத்தினால், குழந்தைகள் ஞானஸ்நானம் இல்லாமல் இறந்து போகலாம். இப்படி அநேகவிசை சம்பவிக்கிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதினால் ஞானஸ்நானம் கொடுக்கிறதற்கு எட்டுநாளுக்குமேல் தாமதப்படலாகாதென்று இத்தேசத்து மேற்றிராணிமார்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

3. ஞானஸ்நானம் கொடுக்கிறதெப்படி?

ஞானஸ்நானம் சரியாய்க் கொடுப்பதற்கு

சில்காரியங்கள் அத்தியாவசியம். அவைகளென்னவென்றால், அதைக்கொடுக்கிறவன் முந்த முந்த் திருச்சபை ஞானஸ்நானம் கொடுக்கிற கருத்தோடே அதைக்கொடுக்கவேணும். பின்னும் பிள்ளையின் நெற்றியின்மேல், தண்ணீர் வார்க்கும்போதே, இடவேண்டிய பேரை உச்சரித்து, "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துவுடையவும், நாமத்தினாலே நான் உன்னைக்கழுவுகிறேன்" என்று அவன்தானே சொல்லவேண்டியது. வார்த்த தண்ணீர் தலைமயிரிலே மாத்திரம் பட்டால் போதாது. தோல்மேல் ஓடும்படியாகச் செய்யவேண்டியது.

மெய்யான தண்ணீர் உபயோகிக்காமலும், அவசரமான வார்த்தைகளை உச்சரிக்காமலும் ஞானஸ்நானம்கொடுத்தால், அது தேவத்திரவிய அநுமானம் ஆகமாட்டாதென்று நன்றாய்க் கவனிக்கவேண்டியது.

4. ஆசை ஞானஸ்நானமாகிறதேன்ன?

புத்தி விபரமுள்ள அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெறக்கூடாத சமயத்திலிருக்கும்போது, ஆத்தும இரட்சணியம் அடைய முடியாதென்று நினைக்கவேண்டாம். ஓரே சர்வேசுரன் உண்டென்றும், அவர் தமக்கு ஊழி



யம் செய்கிறவர்களுக்கு மோட்ச பாக்கியத்தைக் கொடுப்பாரென்றும், விசுவசிப்பதுந்தவிர, தங்களால் கூடினமட்டும், வேதத்தின் பிரதான சத்தியங்கள் எவையென்றும், அவர்கள் அறிந்து, விசுவசித்து, செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படவேண்டியது.

மேலும், ஞானஸ்நானம் பெறுதல், வேதகற்பனைப்படி நடத்தல், முதலிய சர்வேசுரனுடைய கட்டளைகளெல்லாம் தங்களுக்குத் தெரிந்தமட்டும் அநுசரிக்க அவர்கள் ஆசையாயிருந்தால், இரட்சணியம் அடைவார்கள் என்பது நிச்சயம். இது தான் ஆசை ஞானஸ்நானம் என்று சொல்லப்படும். இப்படிப்பட்டவர்களுக்குச் சமயங் கிடைக்கிறபோது தண்ணீர் ஞானஸ்நானம் பெறக்கடன் உண்டு. புத்தி விபரமுள்ளவர்களுக்கு மரணசமயத்தில் முதலாய் ஞானஸ்நானம் கொடுக்கிறதற்குமுன், பிரதான சத்தியங்களை அவர்களுக்குச் சுருக்கமாயாகிலும் சொல்லிக்கொடுக்கவேணும்.

5. இரத்த ஞானஸ்நானமாகிறதேன்ன?

தண்ணீர் ஞானஸ்நானம் பெறாதவன், வேதத்துக்காகத் தன் உயிரைக்கொடுத்து, வேதசாட்சியாக மரணமடைந்தால், மோட்ச பேரின்ப பாக்

கியத்தைப் பெற்றுக்கொள்ளுவானென்பது சத்தியம். இவ்விதமரணந்தான் இரத்தஞானஸ்நானமென்று சொல்லப்படும்.

### 6. குழந்தைகளுடைய ஞானஸ்நானம்.

புத்திவிபரம் அறியாத குழந்தைகள், வேதத்துக்காக மரணம் அடையாவிட்டால், தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமல், ஒருபோதும் மோட்சத்தில் சேர்ந்து, சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கமாட்டார்களென்பது வேதசத்தியம். அப்பேர்ப்பட்ட மோசம் வராதபடி, மரண அவஸ்தையாயிருக்கிற ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சமயம் கிடைக்கும்போது, நமது உயிர்ச்சேதத்தை முதலாய்க் கவனியாது, அத்தேவத்திரவிய அநுமானத்தை நிறைவேற்றவேண்டும்.

ஞானஸ்நானமில்லாமல் ஒருவரும் மோட்சத்துக்குப் போகக்கூடாததினாலே, ஒரு குழந்தையானது தன் காலத்துக்கு எத்தனை மாசத்துக்குமுன் பிறந்தபோதிலும், அதற்கு உடனே ஞானஸ்நானங் கொடுக்காமலிருப்பது சாவான பாவத்துக்குரியதாயிருக்கும்.

---



## IV. உறுதிபூசுதலின் பேரில்.

உறுதிபூசுதலானது, இஸ்பிரீத்துசாந்துவையும் அவருடைய ஏழு வரங்களையும் பூரணமாய் நமக்குக் கொடுத்து, நம்மை உத்தம கிறீஸ்துவர்களாக்குகிற தேவத்திரவிய அநுமானம். இதினால் நாம் சத்தியவேதத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டு, இரட்சணியத்தின் சத்துராதிகளை ஜெயிக்கும்படி, விசேஷ பலத்தை அடைகிறோம்.

(க) இஸ்பிரீத்துசாந்துவினுடைய ஏழு வரங்களாவன:—(1) ஞானம், (2) புத்தி, (3) விமரிசை, (4) திடம், (5) அறிவு, (6) பத்தி, (7) தெய்வபயம்.

(உ) அஜாக்கிரதையினால், இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைப் பெறாமல் விட்டுவிடுகிறது, ஆத்துமத்துக்குப் பெரிய நஷ்டம் வருவிக்கிறதென்கிறதினாலே, சகல கிறீஸ்துவர்களும் அதைப் பெறக்கடவார்கள். அதை நிந்தித்துப் பெறாதிருக்கிறவன் சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறான்.

(ங) எப்போது அதைப் பெறுகிறது.—வேதசத்தியங்களை அறிந்தவர்கள், புதுநன்மை வாங்கு

முன்னே முதலாய், உறுதிப்பூசுதல் பெறுகிறது கிரமம். அதை ஒருவிசை மாத்திரம் பெறலாம்.

---

# V. தேவநற்கருணையின் பேரில்.

## 1.—நற்கருணையாவதென்ன?—

இது சகல தேவத்திரவிய அநுமானங்களுக்குள்ளே மிகவும் மேலானது. அதேதென்றால், இந்தத் தேவத்திரவிய அநுமானம், மற்றத் தேவத்திரவிய அநுமானங்களைப்போல், இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதுந்தவிர, அதில் இஷ்டப்பிரசாதத்துக்கு ஊற்றாகிற சேசுநாதர்சுவாமி தாமே, தம்முடைய திருச்சரீரத்தோடும், திரு இரத்தத்தோடும், திரு ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் எழுந்தருளியிருக்கிறார்.

இவ்விதமாய்ச் சேசுநாதர்சுவாமி, தம்முடைய தேவசுபாவத்தோடும், மனுஷசுபாவத்தோடும் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறதினால், அதை உட்கொள்ளுகிறவர்களுடைய ஆத்துமத்துக்கு அவர் திவ்விய போசனமாயிருக்கிறார்.



## 2.—தேவநற்கருணையில் சம்பவிக்கிற சில விசேஷங்கள்.

(௧) சேசுநாதர் அப்ப இரசத்தின் குணங்களுக்குள்ளிருக்கிறார்.—குருவானவர் பூசை பண்ணுகையில், அப்பத்தின்மேலும், இரசத்தின்மேலும், தேவ வசீகரமான வார்த்தைகளைச் சொன்னவுடனே, அப்பமானது சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசமானது அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது. அப்போது ஐம்புலன்களுக்குத் தோன்றுகிற, அப்பத்தினுடையவும் இரசத்தினுடையவும் குணங்களாகிய சாயல், நிறம், வாசனை, உருசி, கனம் முதலியவைகள் அதில் இருக்கிறதேயல்லாமல், அப்பமுமில்லை, இரசமுமில்லை.

(௨) ஏனெனில், அப்பத்தின் பொருள் சேசுநாதருடைய திருச் சரீரமாகவும், இரசத்தின் பொருள் அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது.

இந்த மேலான ஆச்சரியத்தோடு, திவ்விய நற்கருணையில் வேறநேக அதிசயங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே சொல்லத்தகும்.

(௩) உலகத்தின் எத்திசையிலும் ஒரே நேரத்தில் எத்தனை பூசை நடந்தாலும், ஒரே பூசையில் எத்

தனை அப்பத்துண்டுகளைக் குருவானவர் வசீகரம்பண்ணினாலும், ஒவ்வொரு இடத்திலும், அப்பம் சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசம் அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது. இப்படி ஒரே நேரத்திலே சேசுநாதர் பல இடங்களிலும், பற்பல அப்பத்தின் துணுக்குகளுக்குள்ளேயும், முந்திரிகை இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், வீற்றிருப்பது பெரிய ஆச்சரியமல்லோ?

(அ) அப்ப இரசக் குணங்களின் ஒவ்வொரு பாகத்திலும் முழுதும் இருக்கிறார். இதுவுந்தவிர, எப்படித் தேவ வசீகரம்பண்ணப்பட்ட ஒவ்வொரு அப்பத்தின் குணங்களிலும், இரசத்தின் குணங்களிலும், சேசுநாதர்சுவாமி முழுதும் வீற்றிருக்கிறாரோ, அப்படியே இந்தக் குணங்கள் பிரிபடாதபோது முதலாய் ஒவ்வொரு சிறுபாகத்திலும் முழுதும் வீற்றிருக்கிறார். நமது ஆத்துமம் சரீரத்திலே முழுதும் இருக்கிறதுபோலவே, சரீரத்தின் ஒவ்வொரு பங்கிலேயும் முழுதும் இருக்கிறதல்லோ?—அவ்விதமாகவே சேசுநாதர் திவ்வியநற்கருணையிலும் வீற்றிருக்கிறாரென்று விசுவசிக்கவேண்டியது.

(இ) அதினாலே, அப்பத்தைத் துண்டுதுண்டாய்ப் பிரித்தாலும், ஒவ்வொரு துண்டிலேயும், சேசு



நாதர்சுவாமி முழுதும் இருக்கிறார். திவ்வியநற்கருணையைப் பிட்கும்போதாவது, அது வாயில் பிரிபடும்போதாவது, சேசுநாதர்சுவாமியைப் பிரிக்கிறதாக எண்ணவேண்டாம்; ஏனென்றால், அப்பத்தினுடைய குணங்களை இப்படிச் செய்கிறோமேயன்றி, சேசுநாதருடைய திருச்சரீரம் பிட்கப்படுகிறதுமில்லை, பிரிக்கப்படுகிறதுமில்லை.

(ஈ) அப்பத்தின் குணங்களுக்குள்ளே திரு இரத்தமும் உண்டு:—தேவ வசீகரம் பண்ணினவுடனே, அப்பமானது சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசமானது அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறதென்று சொல்லும்போது, அப்பத்தில் சேசுநாதருடைய திரு இரத்தம் இல்லையென்றும், இரசத்தில் அவருடைய திருச்சரீரம் இல்லையென்றும் எண்ணக்கூடாது. குருவானவர் பூசைசெய்யும்போது, சேசுநாதர்பேரில் அப்பத்தைப்பார்த்து: "இது என் சரீரம்" என்றும், இரசத்தைப்பார்த்து: "இது என் இரத்தம்" என்றும் சொல்லுகிறபடியால், தேவ வசீகரம் பண்ணுகிற இவ்வார்த்தைகளின் பெலத்தால், அப்பத்தில் சரீரமும், இரசத்தில் இரத்தமுமாத்திரம் இருக்கவேண்டியது.

(உ) ஒவ்வொரு குணங்களுக்குள்ளே சேசுநாதர்சுவாமி முழுதும் இருக்கிறதுக்கு முகாந்தரமென்ன?—

சேசுநாதர்சுவாமி உயிர்த்தெழுந்தபோது, திரும்பவும் சாகக்கூடாதவராயிருக்கிறபடியினாலே இப்போது அவர் மோட்சத்தில் எப்படியிருக்கிறாரோ, அப்படியே தேவநற்கருணையிலும் எழுந்தருளியிருக்கிறார். இப்போது மோட்ச இராச்சியத்தில் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரமும், இரத்தமும், ஆத்துமமும், தேவசுபாவமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத விதமாய் ஒன்றித்திருக்கிறதினாலே, அப்பத்தின் குணங்களிலேயும், இரசத்தின் குணங்களிலேயும், சேசுநாதர்சுவாமி தமது திருச்சரீரத்தோடும், இரத்தத்தோடும், ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும், மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமாய் வீற்றிருக்கிறார்.

## VI. திவ்விய பூசையின்பேரில்.

1. சேசுநாதர்சுவாமி மனுஷர்பேரில் வைத்த அத்தியந்த நேசத்தினால், திருப்பீடத்தில் தினந்தோறும் நமக்காகத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுக்கிறார். அவர் முன் கல்வாரியிலேமேல் சிலுவையில் ஒப்புக்கொடுத்த



பலியும் இதுவே! இப்போது அவர் பிரதான குருவாயிருந்து, தேவ ஊழியர்களான குருக்களைக்கொண்டு, எவ்விடத்திலும், எந்நேரத்திலும், அந்தப்பலியைப் புதுப்பித்துக்கொண்டு வருகிறார்.

சிலுவையின்பலி இரத்தம் சிந்தின பலியாகவும், பீடத்தின் பலி இரத்தம் சிந்தாத பலியாகவும் இருக்கிறது. இந்த இரண்டு பலிக்கும் மேற்சொன்ன ஒரே வித்தியாசம் தவிர, வேறே வித்தியாசமில்லை. ஏனென்றால், இவ்விரு பலிகளிலேயும் சேசுநாதர்சுவாமிதானே பலியாகவும், பிரதான குருவாகவும் இருக்கிறார்.

### 2. தேவநற்கருணைக்குச் செய்யவேண்டிய நமஸ்காரமென்ன?

(அ) பூசைநேரத்திலும், பூசை முடிந்தபின்னும், பீடத்துப்பெட்டியிலே தேவநற்கருணை வைத்திருந்தால், சேசுநாதர்சுவாமி மெய்யாகவே அதில் எழுந்தருளியிருக்கிறதினாலே, நாம் அவருக்குத் தேவ ஆராதனை நமஸ்காரம் செலுத்தவேண்டியது.

(உ) தேவநற்கருணையானது, பாடுபட்ட சுரூபத்தைப்போல, சேசுநாதர்சுவாமியைக் குறிக்கும் வெறும் அடையாளமல்ல. அதில்

அவருடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் திரு ஆத்துமமும் தேவ சுபாவமும் மெய்யாகவே அடங்கியிருக்கிறது. ஆகையினாலே திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கிறவர் அர்ச்சியசிஷ்ட கன்னிமரியம்மாளிடத்தில் நின்று பிறந்து, நமக்காகச் சிலுவையில் அறையுண்டு, மரித்து, உயிர்த்த இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரனே.

(ங) தேவநற்கருணை எத்தனைநாள் வரையில் நீடித்திருக்கும்? அப்பத்தின் குணங்கள் எவ்வளவு நாள் கெடாமல் இருக்குமோ, அவ்வளவு நாளும் அவ்[illegible]தில் எழுந்தருளியிருப்பார், அந்தக் குணங்கள் அழிந்துபோனவுடனே அவர் நீங்கிப்போவார்.

### 3. தேவநற்கருணை ஆயத்தம் எத்தனை வகைப்படும்?

சரீர ஆயத்தம், ஆத்தும ஆயத்தம் ஆ[illegible] இரண்டு வகைப்படும்.

(க) சரீர ஆயத்தம் ஏதென்றால், திவ்விய நற்கருணை வாங்குகிறவன், மரண அவஸ்தைச் சமயம் தவிர மற்றச் சமயங்களிலே, நடுச்சாமம் துவக்கி தேவநற்கருணை வாங்குகிற நேரம் வரைக்கும், மருந்தாக முதலாய் ஒன்றும் சாப்



பிடாமலும், குடியாமலும், உபவாசமாயிருக்க வேண்டும். உபவாசமாயிராமல் தேவநற்கருணை வாங்கினது சாவான பாவமாகுமென்று நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

(உ) ஆத்தும ஆயத்தம் ஏதென்றால் தேவநற்கருணை வாங்குகிறவன், சாவான பாவமில்லாமல் இருக்கவேண்டியதுந்தவிர, தன்னுடைய பாவ நடக்கையைத் திருத்திக்கொள்ள முழு மனதுள்ளவனாயிருக்கவேணும். இப்படிப்பட்ட ஆயத்தமில்லாமல், தேவநற்கருணை வாங்குகிறவன் தேவ துரோகமென்கிற கனமான பாவத்தைக் கட்டிக்கொண்டு, தனக்குத்தானே சாபத்தை உட்கொள்ளுகிறான் என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார்.

### 4. நன்றியறிந்த தோத்திரத்தின் பேரில்:

திவ்விய நற்கருணை வாங்கின பிற்பாடு, நம்முடைய இருதயத்தில் எழுந்தருளி வந்திருக்கிற சேசுநாதரை மறந்துபோகாமல்; கொஞ்ச நேரமாகிலும் அவர் சந்நிதியிலே தானேயிருந்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து, சரீரத்துக்கும், விசேஷமாய் ஆத்துமத்துக்கும், அவசரமான காரியங்களைக் கேட்கவேணும்.

## VII. பச்சாத்தாபத்தின்பேரில்.

பச்சாத்தாபம் என்னும் வார்த்தையில் "பச்சா" என்பதற்கு "பிற்பாடு" என்றும், "தாபம்" என்பதற்கு "மனக்கலக்கம், மனஸ்தாபம்" என்றும் அர்த்தம். ஆகையால் பச்சாத்தாபமானது, பாவஞ்செய்துகொண்டபின் வருகிற மனவருத்தமாகும். அதாவது, செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவர்களுக்குப் [illegible] கொடுக்கிற தேவத்திரவிய அநுமானம் பச்சாத்தாபமென்று சொல்லப்படும்.

பச்சாத்தாபமாவது ஞானஸ்நானம்பெற்ற பிற்பாடு, செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புத்தருகிற தேவத்திரவிய அநுமானம்.

### 1. பாவப்பொறுத்தல் அடைகிறதற்கு, ஐந்து காரியம் வேண்டியது.

1வது, தான்செய்த பாவங்களை நினைக்கிறது.—2-வது, தான்செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறது.—3-வது, இனிமேல் ஒருக்காலும் ஒருபாவத்தையுஞ் செய்வதில்லையென்று கெட்டியான மனதோடு பிரதிக்கினை



தகாத பாவசங்கீர்த்தனத்தின் பேரில்.

(க) பாவசங்கீர்த்தனத்தில் யாதொரு சாவான பாவத்தை ஒளித்தால், அந்தப் பாவசங்கீர்த்தனம் பிரயோசனமில்லாமல் போய், சொன்ன பாவங்கள் பொறுக்கப்படாததுமன்றி, அப்படிச் செய்கிறவன் தேவதுரோகம் கட்டிக்கொள்ளுகிறான் என்பது எல்லாருக்குந் தெரிந்த காரியம்.

(உ) இதுதவிர, யாதொரு சாவான பாவத்துக்காக மெய்யான மனஸ்தாபப்படாமலும், இனிமேல் பாவத்தில் விழமாட்டேனென்று கெட்டியான பிரதிக்கினைபண்ணாமலும், யாதொரு பாவத்துக்கு செய்யவேண்டிய பரிகாரம் செய்ய மனதில்லாமலும், ஒருவன் பாவசங்கீர்த்தனம்பண்ணினால், பாவங்கள் பொறுக்கப்படமாட்டாது. அந்தப் பாவசங்கீர்த்தனம் யாதொரு பிரயோசனமுமில்லாததாய்ப் போகும்.

### 7. ஆகாத பாவசங்கீர்த்தனம் செய்தவன், பாவப்பொறுதலடையச் செய்யவேண்டியதென்ன?

முன்சொன்ன யாதொரு காரணத்தினிமித்தம், ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணினவன், மறுபடி பாவசங்கீர்த்தனத்துக்குப் போகும்போது, அநுசரிக்கவேண்டிய காரியங்களாவன:—

முதலாவது, முன் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணினதுமுதல் எத்தனைவிசை பாவசங்கீர்த்தனம், திவ்விய நன்மை, மற்றத் தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்று, தேவதுரோகம் கட்டிக்கொண்டானென்று அறிவிக்கவேண்டியது.

இரண்டாவது, ஆகாத பாவசங்கீர்த்தனத்துக்குப்பின் கட்டிக்கொண்ட சாவான பாவங்களையும் அதில் ஒளித்த சகல சாவான பாவங்களையும் சொல்லுகிறதுமல்லாமல், ஆகாத பாவசங்கீர்த்தனங்களில் சொன்ன சாவான பாவங்களையெல்லாம் தெரிந்தமட்டும் திரும்பவும் வெளிப்படுத்தவேண்டியது.

இதைப்பற்றி அறியவேண்டிய விசேஷமாவது: முன் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணின குருவானவர் நீங்கலாக, வேறே குருவானவரிடத்தில் பாவசங்கீர்த்தனத்துக்குப்போனால்மட்டும், இப்போதுசொன்னபிரகாரம் சகல பாவங்களையும் விபரமாய் வெளிப்படுத்துகிறது கடமை. ஆனால் தான் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணின குருவானவரிடத்திலேயே திரும்பவும்போனால், முன் அவருக்கு அறிவித்த சாவான பாவங்களையெல்லாம் விபரமாய்ச் சொல்வது அவசியமில்லை. அவைகளைப் பொதுவில்மாத்திரம் ஞாபகப்படுத்துகிறது போதும்.



ஆயினும், முன் கெட்ட பாவசங்கீர்த்தனம் செய்தேனென்றுசொல்லி, அவரிடத்தில் ஒளித்ததும், அந்தக் கெட்ட பாவசங்கீர்த்தனத்திற்குப் பிற்பாடு கட்டிக்கொண்டதுமான சாவான பாவங்களையெல்லாம், வழக்கப்பிரகாரம், விபரமாய் வெளிப்படுத்தவேண்டியது.

### 8. மறந்துபோன பாவங்களின்பேரில்.

மனம்பொருந்தி ஒளிக்கும் பாவங்களும் மறந்துவிடும் பாவங்களும், ஒரே மாதிரியானவையல்ல. ஆத்துமசோதனை சரியாய்ச் செய்த பிறகு, ஒரு பாவம் மறந்துபோயிருந்தால், தேவநன்மை வாங்குகிறதற்கு விக்கினமில்லை. ஆனால், அடுத்த பாவசங்கீர்த்தனத்தில் மறந்துபோன பாவத்தை அகத்தியம் வெளிப்படுத்தவேண்டியது. பொறுத்தலடைய இது போதுமான காரியம்.

### 9. சந்தேகமான பாவங்களின்பேரில்.

முன் செய்த காரியம் பாவமானதோவென்றும், அதைச் செய்யும்போது சாவானபாவம் கட்டிக்கொள்ள மனதிருந்ததாவென்றும், பாவசங்கீர்த்தனத்தில் அதை வெளிப்படுத்தவேணுமோவென்றும் இவை முதலிய சந்தேகங்கள்

உண்டாகி, அவைகளைப்பற்றி யோசிக்க யோசிக்க யாதொரு தீர்மானமும் செய்யக்கூடாமலிருக்கும்போது, அதைப்பற்றிக் குருவானவரிடத்தில் பேசுகிறது நல்லது. ஆயினும் நாம் இப்பாவங்களைக் கட்டிக்கொள்ளவில்லை என்பதற்கு இந்தச் சந்தேகமே கெட்டியான முகாந்தரமிருக்கிறதால், இந்தப் பாவசங்கீர்த்தனத்தில் அறிவிக்கக் கட்டளை இல்லை.

இனி செய்யப்போகிற காரியமொன்று பாவமோ என்று சந்தேகப்பட்டால், அதைப்பற்றி விசாரித்துக் கூடியமட்டும் முன்னதாக அறிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் அந்தக்காரியத்தைச் செய்வதற்கு முன்னும், சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளுவது கடன். இப்பேர்ப்பட்ட சந்தேகத்தைத் தீர்க்காமல், மனச்சாட்சிக்கு விரோதமாய் ஏதாகிலும் செய்தால், அது எப்போதும் பாவமாயிருக்கும்.

## 10. அற்பப்பாவத்துக்குப் பொறுத்தல்.

அற்பப்பாவங்களுக்குப் பொறுத்தல் அடைகிறதற்கு, அவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லக்கடனில்லை. அவைகளுக்காக அடி-ண்மை மனஸ்தாபப்பட்டால் போதும். ஆயினும்



இவ்விதமான பாவங்களையும் அருவருத்துக் குருவானவரிடத்தில் வெளிப்படுத்துகிறது நல்லது.

(க) எந்த அற்பப்பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறோமோ, அவைகளை மாத்திரம் குருவானவரிடத்தில் வெளிப்படுத்தவேண்டியது. அவைகளுக்காக மனஸ்தாபப்படாமலும், அவைகளைத் திருத்த மனதில்லாமலும், பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவேண்டாம். இப்படிச்செய்கிறது வீண் காரியமும், தேவத்திரவிய அநுமானத்துக்கு அவசங்கையுமாயிருக்கும். ஆனால் அது தேவதுரோகமல்ல.

(உ) தான் செய்த சகல சாவான பாவங்களையும் பாவசங்கீர்த்தனத்தில் சரியாய் வெளிப்படுத்தினால், அந்தச் சாவானபாவங்கள் நீங்கிப்போகிறதுந்தவிர, எந்தெந்த அற்பப்பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறோமோ, அப்பாவங்களும் மன்னிக்கப்படும். நாம் மனஸ்தாபப்படாத அற்பப் பாவங்களோவென்றால், சொன்னாலுஞ்சரி, சொல்லாவிட்டாலுஞ்சரி, அவைகளுக்குப் பொறுத்தல் கிடைக்கமாட்டாது. ஆகையால் எந்த அற்பப் பாவங்களின்மேலும் பற்றுதல் இல்லாமலிருக்கவேண்டும்.

11. ஞான அபராதத்தின் பேரில்.

கடைசியாய், பாவசங்கீர்த்தனம் பண்ணின பிறகு, குருவானவர் கொடுக்கும் அபராதத்தைக் குறையில்லாமல், கூடிய சீக்கிரத்தில், தீர்த்துப்போடப் பிரயாசப்படவேண்டியது.

---

## VIII. திருச்சபைப் பலன்களின் பேரில்.

பச்சாத்தாபம் என்னும் தேவத்திரவிய அநுமானத்தின் வழியாக, பாவங்களின் தோஷமும், அவைகளுக்கு வரவேண்டிய நித்திய ஆக்கினையும் மன்னிக்கப்பட்டாலும், மனஸ்தாபத்தின் குறைச்சலினால், அந்தப்பாவங்களுக்கு இவ்வுலகத்திலாகிலும், மறு உலகத்திலென்கிலும் சாதாரணமாய்ச் சில அநித்திய ஆக்கினைகள் அநுபவிக்கவேண்டியதாயிருக்கும். அந்த அநித்திய ஆக்கினையை நீக்குகிறதற்குக் குருவானவர் சாதாரணமாய் இடுகிற அபராதம் போதாததினாலே, தர்மக்கிரியைகளைக்கொண்டும், திருச்சபைப் பலன்களைக்கொண்டும், அதைத்தீர்த்துக்கொள்வது உத்தமம்.

### 1. திருச்சபைப் பலன்களினால் வரும் பிரயோசனமென்ன?

சகல பாவங்களையும், அவைகளுக்கு வரவேண்டிய நித்திய ஆக்கினையையும் பொறுக்க, சேசுநாதர்சுவாமி திருச்சபைக்கு அதிகாரம் கொடுத்ததுந்தவிர, அநித்திய ஆக்கினையை மன்னிக்கும் வல்லமையும் கொடுத்திருக்கிறார். அநித்திய ஆக்கினைக்குத் திருச்சபை கொடுக்கிற மன்னிப்பானது பலன் என்று சொல்லப்படும்.

(க) யாதொருபாவம் திருச்சபையின் பலன்களால் பொறுக்கப்படுமோ? திருச்சபையின் பலன்கள் பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினையை மன்னிக்கிறதேயல்லாமல், நித்திய ஆக்கினையையாவது, சாவான பாவத்தின் தோஷத்தையாவது, அற்பப்பாவத்தின் தோஷத்தையாவது, இனி கட்டிக்கொள்ளக்கூடிய எந்தப் பாவத்தையாவது மன்னிக்கிறதில்லை. பொறுத்தல் அடைகிறதற்குமுன், அப்பாவங்களுக்கு முதலாய்த் திருச்சபையின் பலன்கள் பிரயோசனப்படமாட்டாது. பொறுக்கப்பட்ட பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினைமாத்திரம் பலன்கள் வழியாய்த்தீரும்.

(உ) பலன்களினால் அநித்திய ஆக்கினைமாத்திரம் நீங்கிப்போகிறது.—அநித்திய ஆக்கினை தவிர,

பாவங்களினால் உண்டாகிற மற்றுக் கடன்களையெல்லாம் பலன்களைக்கொண்டு தீர்த்துப்போடலாமென்று எண்ணக்கூடாது. இதற்கு உதாரணமாக: மற்றவர்களுடைய பொருளை அபகரித்து, கீர்த்தியைக்கெடுத்து, அவர்களுக்குத் துர்மாதிரிகை காண்பித்து, நஷ்டம் வருவித்தவன் எவனோ, அவன் திருச்சபைப்பலன்களை அடைந்தானால், தான் செய்யவேண்டிய பரிகாரங்களையெல்லாம் செய்து முடித்துவிட்டதாக எண்ணக்கூடாது. அந்தந்தக் குற்றத்தினால் வந்த நஷ்டத்துக்குத் தன்னாலான பரிகாரம் செய்யவேண்டும்.

## 2. திருச்சபைப் பலன்களை அடைகிறதெப்படி?

(க) யாதொரு பலனை அடையவேண்டுமானால், அதை அடையும்படியாக, திருச்சபை கற்பித்திருக்கிற ஜெபம், தர்மக் கிரியைகளெல்லாம் சரியாய்ச் செய்யவேண்டியது அவசியம். வழக்கமாய் பரிபூரணபலன் அடைகிறதற்கு, பாவசங்கீர்த்தனம் பண்ணி, திவ்விய நன்மை வாங்கி, ஒருகோவிலைச்சந்தித்து, அர்ச். பாப்பானவர் கருத்துக்காக வேண்டிக்கொள்ளவேணும்.

(உ) பலனடைகிறதற்குப் பாவமில்லாமலிருக்க வேணுமா?—ஆத்துமத்தில் சாவானபாவமிருக்கும்போது, ஓர் அற்பப் பலனும் அடையமுடியாது. அற்பப்பாவத்தின்மேல் இருதயத்தில் பற்றுதலிருந்தால், பரிபூரண பலனை முழுதும் பெறுவது கூடாத காரியம்.

ஒரு பலன் அடையும்படி பற்பல தர்மக்கிரியைகளைக் கற்பித்திருக்கும்போது, அவைகளை எல்லாம் இஷ்டப்பிரசாத அந்தஸ்தோடு செய்வது மிகவும் பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. ஆனால் கடைசி கிரியையை நிறைவேற்றும்போதாகிலும், சாவானபாவமில்லாதிருப்பது பலனடைவதற்கு அத்தியாவசியம்.

சாவானபாவத்தோடு இருக்கிறவன் தனக்காக யாதொரு பலனும் பெறக்கூடாதபோதிலும், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக அவைகளை அடையலாம் என்று அநேக சாஸ்திரிகள் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இது உண்மையென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாததால், பாவம் நீங்கிப்போகும்படி, முந்த முந்த உத்தம மனஸ்தாப முயற்சிகள் செய்யப் பிரயாசப்படவேண்டியது.

## 3. உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக சில பலன்கள் அடையலாம்.

திருச்சபைப்பலன்கள் நமது பாவத்துக்குப் பரிகாரம் செய்ய உதவுகிறதுமல்லாமல், சிலது

னிக்கலாக, மற்றப் பலன்களெல்லாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் வேதனையைக் குறைக்கக்கூடும்.

4. எத்தனை வகைப் பலன்களுண்டு?

திருச்சபைப் பலன்கள் இருவகைப்படும். அநித்திய ஆக்கினையை முழுதும் தீர்க்கிறபலன் பரிபூரணபலன் என்றும், ஓர் பங்கை மாத்திரம் தீர்க்கிறபலன் தனிப்பலனென்றும் சொல்லப்படும்.

5. தனிப்பலனென்கிறதற்கு அர்த்தமென்ன?

(க) திருச்சபை தனது ஞானப்பொக்கிஷத்திலிருந்து தனிப்பலன்களாகிற நூறுநாட்பலன், ஒருவருஷப் பலன், ஏழுவருஷம் ஏழுமண்டலப் பலன், இது முதலான சில்லறைப் பலன்களைக் கொடுக்கும்போது, உத்தரிக்கிற ஸ்தலத்தில் நூறுநாள், ஒருவருஷம், ஏழுவருஷம், ஏழுமண்டலமாகிய காலத்து வேதனை குறைந்து போகிறதென்று நினைக்கவேண்டாம்.

(உ) திருச்சபையின் துவக்கத்தில், பாவத்துக்குத் தண்டனையாக, நூறுநாள், ஒருவருஷம், ஏழுவருஷம், ஏழுமண்டலமும், இதுமுதலான காலங்களுக்கு அதிகமாயும், பற்பல



வகைத் தபசு செய்யும்படி ஏற்பாடு இருந்தது. ஒருமண்டலமென்றால் நாற்பதுநாள் தபசென்று அர்த்தமாகும். இப்போது திருச்சபை முன் சொல்லப்பட்ட பலவகைத் தபசுகளுக்குப் பதிலாகச் செபங்கள், நற்கிரிகைகளைக் கொண்டு அநித்திய ஆக்கினைக்கு மன்னிப்புக் கொடுக்கிறது.

(ங) அப்போது செய்த தபசு முயற்சிகளாலும், இப்போது அடைகிற திருச்சபைப்பலன்களாலும், உத்தரிக்கிறஸ்தலத்தின் வேதனை எவ்வளவு குறைகிறதென்று கணக்கிட்டுச் சொல்லமுடியாது. அது சர்வேசுரனுக்குமாத்திரம் தெரிந்த காரியம்.

6. தபசுபண்ண எல்லாரும் கடமைப்பட்டிருக்கிறார்களா?

பற்பல பலன்களை அடைந்துகொள்ளலாமென்று சொல்லும்போது, இக்காலத்துக் கிறீஸ்துவர்கள் தபசுசெய்யக் கடன்பட்டவர்களல்லவென்று கனவிலும் நினைக்கப்படாது. ஆனால் நமது தாயாராகிய திருச்சபை பாவத்துக்குப்பரிகாரமாக நாம் தபசு செய்யும்படி புத்தி சொல்லுகிறதுமல்லாமல், நம்முடைய பத்தி பெலக்குறைவுக்கு உதவியாக, பலன்களைக்

தந்து, சகல விதத்திலும் நமக்கு நன்மைசெய்து வருகிறதென்று அறியவேண்டியது.

## IX. அவஸ்தைப்பூசுதலின் பேரில்.

### 1. அவஸ்தைப்பூசுதலாவதென்ன?

வியாதிக்காரருடைய ஆத்துமத்துக்கும், சரீரத்துக்கும் ஆறுதலாக உண்டாக்கப்பட்ட தேவத்திரவிய அநுமானம்.

(க) இதினால், ஆத்துமத்திலிருக்கிற இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கிறதுமல்லாமல், மரணநேரத்தில் உண்டாகிற பசாசின் தந்திரங்களை ஜெயிக்கவும், வியாதியின் உபாத்திரியங்களைப் பொறுமையோடு அநுபவிக்கவும், விசேஷமான வரப்பிரசாதம் கிடைக்கிறது.

(உ) அவஸ்தைப்பூசுதலால் பாவங்கள் பொறுக்கப்படுமா?—ஆத்துமத்திலிருக்கும் அற்பப் பாவங்களும், முன் செய்த பாவங்களினிமித்தம் உண்டான ஞான அசமந்தமும், அநுபவிக்கவேண்டிய அநித்திய ஆக்கினையும், அவஸ்தைப்பூசுதலைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுடைய ஆயத்தத்திற்குத்தக்கது நீங்கிப்போகும்.—அன்றியும் பாவ



சங்கீர்த்தனம்பண்ணக்கூடாத சமயத்தில், தான் செய்த சகல சாவானபாவங்களுக்கும் அடிமை மனஸ்தாபப்பட்டிருந்தால், அவஸ்தைப்பூசுதல் வழியாக அவைகளும் பொறுக்கப்படும்.

2. ஆத்தும இரட்சணியத்துக்குப் பிரயோசனமாயிருந்தால், அவஸ்தைப்பூசுதல் வழியாக சரீரத்துக்கு ஆரோக்கியமுண்டாகும்.

### 3. எப்போது அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாம்?

துவக்கின வியாதியினாலே மரணம் வரக்கூடுமென்று சந்தேகப்பட்டவுடனே, வியாதிக்காரன் இன்னும் பெலனாயிருந்து அனேகநாள் உயிரோடிருப்பானென்று தெரிந்தாலும், அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாம்.—வியாதி அற்பமாயிருப்பதினாலே மரணம் வராதென்று நிச்சயமாய்த் தெரியும்போது, அவஸ்தைப் பூசுதல் கொடுக்கிறதற்கு உத்தரவில்லை. அதைக்கொடுத்தாலும், மெய்யான தேவத்திரவிய அநுமானம் ஆகமாட்டாது. ஏனெனில் வியாதியினால் மரண அவஸ்தையாயிருப்பது, அவஸ்தைப் பூசுதலுக்கு அத்தியாவசியம். இதினிமித்தம்தான் மரணத்தீர்வை யிடப்பட்டவர்களுக்கு அவஸ்தை நன்மை கொடுக்கலாமேயொழிய, அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாகாது.

அவஸ்தைக்காரனுடைய ஆத்துமத்துக்கும், சரீரத்துக்கும், அதிகப் பிரயோசனமாயிருக்கும்படி, சீவன்பிரிகிற சமயம்வரையிலும் காத்திராமல், அவனுக்குப் புத்தி தெளிவு இருக்கும்போதே, தாமதமின்றி, குருவானவரை வரவழைக்கவேண்டும். இது வியாதிக்காரனுடைய தாய்தகப்பன், உறவின் முறையார், முதலியவர்களின்மேல் சுமந்த விசேஷ கடமையாகும்.

4. யாருக்கு அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாம்?

புத்தி விவரம் அறிந்த சகல கிறீஸ்துவர்களும் மரண சமயத்திலே அவஸ்தைப்பூசுதல் பெறவேண்டும்.

(க) மந்திரம் தெரியாதவர்களும் புதுநன்மை வாங்காத பிள்ளைகளும், புத்தி விவரம் அறிந்திருப்பார்களானால், இத்தேவத்திரவிய அநுமானத்தைப் பெறவேண்டும். சில பிள்ளைகளுக்கு ஏழு வயதுக்கு முந்தியே சாவான பாவம் செய்வதற்கு வேண்டிய புத்தியறிவுண்டு. தங்கள் தாய்தகப்பன் அசட்டைத்தனத்தினாலே அவர்கள் பாவசங்கீர்த்தனமே அவஸ்தைப்பூசுதலில்லாமல், சாவான பாவத்தோடு செத்தால், இது எவ்வளவோ பரிதாபத்துக்குரிய மோசமாயிருக்கும்.



(உ) விருத்தாப்பியம் கடின வியாதிக்கு ஒத்ததாயிருக்கிறதினாலே, ஒரு தள்ளாத வயதுள்ளவன் குருவானவர் அவனிருக்கும் ஊருக்குத் திரும்பி வருமுன் இறந்துபோவானென்று கொஞ்சமாகிலும் சந்தேகப்பட்டால், அவனுக்கும் அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாம்.

5. எத்தனைவிசை அவஸ்தைப்பூசுதல் பெறலாம்?

சாவுக்கு ஏதுவான ஒவ்வொரு வியாதியிலும் ஒரு விசை மாத்திரம் அவஸ்தைப்பூசுதல் பெற உத்தரவுண்டு. வியாதிக்காரன் அதைப் பெற்ற பிறகு சவுக்கியமாகி பிழைப்பானென்று நம்பிக்கையுண்டாகும் ஸ்திதியடைந்தபின், திரும்பவும் மரண அவஸ்தைப்படுகையில், அவனுக்கு மறுபடியும் அவஸ்தைப்பூசுதல் கொடுக்கலாம்.

அவஸ்தைக்காரன் இஷ்டப்பிரசாதத்தோடே அவஸ்தைப்பூசுதல் பெறவேண்டியது. கூடுமானபோது, தேவநற்கருணையும் வாங்க அவனுக்குக் கண்டிப்பான கட்டளையுண்டு.

6. அவஸ்தை பெறக்கூடாதானால், செய்யவேண்டியதென்ன?

(க) பாவசங்கீர்த்தனமாவது அவஸ்தைப்பூசுதலாவது இல்லாமல், சாவானபாவத்திற்குப்

பொறுத்தல் அடைய அடிமை மனஸ்தாபம் போதாததினாலே, குருவானவர் வரக்கூடாத பொழுது, வியாதிக்காரன் தான்செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, சர்வேசுரனிடத்தில் தாழ்ச்சியோடே பொறுத்தல் கேட்டு மன்றாடி, தேவசிநேகத்தைத் தன் மனதில் எழுப்பப் பிரயாசப்படக்கடவான்.

(உ) மரணசமயத்திலே பசாசு வெகு சோதனை வருவிக்கிறதினாலே, அவஸ்தைக்காரனுடைய ஆத்துமத்தில் பயமும் அவநம்பிக்கையும் உண்டாகாதபடி, அவன்கிட்ட இருக்கிற கிறீஸ்துவர்கள், அஞ்ஞானிகளைப்போல அழுது கூக்குரலிடாமல், உருக்கத்தோடே செபம்பண்ணவேணும். திருஇருதயத்தையும், தேவமாதாவையும், அர்ச். சூசையப்பரையும், காவலான சம்மனசையும் வேண்டிக்கொண்டு, அவஸ்தைக்காரனிடத்தில் பசாசு அண்டாதபடிக்கு, அடிக்கடி தீர்த்தம் தெளிக்கவேணும்.

(ங) அன்றியும், பாடுபட்ட சுரூபத்தை அவன் கையில் கொடுத்து, செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, ஆண்டவருடைய அளவில்லாத கிருபையின்பேரில் அவன் நம்பிக்கை வைத்து, தேவ சித்தத்துக்கு அமைந்து, சந்தோஷமாய்த் தன் உயிரை ஒப்புக்கொடுத்து,



சேசுவென்கிற பெயரை உச்சரித்துப் பாக்கியமான மரணமடையும்படியாக, சமீபத்திலிருக்கிறவர்கள் எல்லாரும் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

---

## X. குருத்துவத்தின்பேரில்.

---

குருத்துவமானதேதென்றால், திவ்வியபூசை செய்யவும், தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றவும், சுதந்தரத்தையும் வரப்பிரசாதத்தையும் கொடுக்கிற தேவத்திரவிய அனுமானம்.

1. சர்வேசுரனிடத்தில் மனுஷருக்கு மத்தியஸ்தராகக் குருவானவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் தமக்குரிய விசேஷ சுதந்தரத்தினால், சர்வேசுரனுடைய பேரால் நமக்கு மோட்ச நன்மைகளையும், ஆத்தும வரங்களையும் கொடுக்கிறார்.

(க) அதினால் சம்மனசுக்களுக்கு முதலாய் இல்லாத அதிகாரம் குருவானவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், சம்மனசுக்களுக்குத் திவ்விய கருணையில் சேசுநாதர்சுவாமி

எழுந்தருளியிருப்பீர் செய்யவும், மனுஷருக்குப் பாவப் பொறுத்தல் கொடுக்கவும் அதிகாரமில்லை. குருவானவருக்கோ, சேசுநாதர்சுவாமி அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

(உ) திருச்சபையின் பேரால், குருவானவர் சகல தகன பலிகளிலும் மேலான பலியாகிய திவ்விய பூசையைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறார். சகல வஸ்துக்களின்பேரிலும் சர்வேசுரனுக்குச் சர்வ வல்லமையிருக்கிறதினாலே, அவருக்குத் தேவ ஆராதனை செலுத்தவும், நாம் அடைகிற எண்ணிறந்த உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்யவும், நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரம்பண்ணி, ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய சகாயங்களைப் பெறவும், நம்முடைய பேரால் குருவானவர் சர்வேசுரனுக்குத் திவ்விய பூசையை ஒப்புக்கொடுக்கிறார்.

(௩) அன்றியும், திருச்சபையின் பேராலும், சகல கிறீஸ்துவர்களுடைய நன்மைக்காகவும், குருவானவர் தினந்தோறும் சங்கீத செபங்கள் செய்து ஒப்புக்கொடுத்து, சர்வேசுரனிடத்தில் மன்றாடுகிறார்.

2. குருவானவர்மட்டில் நமது கடமை என்ன?

(க) இப்பேர்க்கொத்த மேலான அதிகாரமும், அதிசயத்துக்குரிய வல்லமையும், சர்வேசுரனால் குருவானவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினாலும், அவர் நமக்கு இவ்வளவு உதவிசெய்கிறபடியினாலும், அவரை நாம் எவ்வளவோ மதித்துச் சங்கிக்கவேணும்.

(உ) உத்தம குருவாகிய சேசுநாதர்சுவாமி தமது பிள்ளைகளாகிய கிறீஸ்துவர்களை நடத்தி வரும்படியாய், மெய்யாகவே தமக்குப் பதிலாய்க் குருக்களை நியமித்திருக்கிறதினால், அவர்களுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

(௩) குருக்களுக்கு உதவிசெய்கிறது கிறீஸ்துவர்களுடைய கடமை. அதினாலே, குருக்கள் தங்கள் அந்தஸ்துக்குத்தக்காப்போலே சீவியம்பண்ணும்படி, ஒவ்வொருவனும் தன் ஐசுவரியத்துக்கும், நாட்டு வழக்கத்துக்கும் ஒத்தபிரகாரம், குருக்களுக்கு உதவிசெய்யக்கடவான்.

(௪) இதுவுந்தவிர, நாம் குருக்களிடத்தில் காணும் மனுஷருக்குரிய குறைகளைக் கவனியாமல், விசுவாசக் கண்ணால் அவர்களிடத்தில் சேசுநாதர்சுவாமியை மாத்திரம் பார்க்கக்கடவோம்.

## XI. மெய்விவாகத்தின்பேரில்.

மெய்விவாகமாவதேதென்றால், சமுசார அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளுகிறவர்கள் தங்களுக்குள்ளே அன்னியோன்னிய நேசமாயிருக்கவும், தங்கள் பிள்ளைகளைத் தேவ பத்தியில் வளர்க்கவும், வேண்டிய வரப்பிரசாதத்தை அவர்களுக்குப் பெருவிக்கிற தேவத்திரவிய அநுமானம்.

(க) அதைப் பெற்றுக்கொள்ளுமுன், ஆண்டவருடைய உதவியைக் கேட்டு, நல்ல ஆயத்தம் பண்ணி, கலியாணத்தின் கடமைகளை அறிந்து, அவைகளைச் சரிவர அநுசரிக்கத் தீர்மானிப்பது அவசரமாம். சாவானபாவத்தோடு கலியாணம்பண்ணுகிறவன் தேவதுரோகம் கட்டிக்கொள்ளுகிறான்.

(உ) கலியாணத்துக்கு முன்தானே, திருச்சபையின் ஏற்பாட்டின்படி, யாதோர் விக்கினம் உண்டோ இல்லையோவென்றும், விக்கினங்கள் எவையென்றும், எத்தனையென்றும், கவனமாய் விசாரித்து, குருவானவரிடத்தில் ஒன்றும் ஒளியாமல் அறிவித்து, உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டியது. கலியாணத்தை விலக்குகிற யாதொரு விக்கினம் இருக்கும்போது, அதற்கு உத்தரவு பெறாமல், ஒரு கலியாணத்தை நடத்தினால், அறிந்து செய்தாலுஞ்சரி, அறியாமல் செய்தாலுஞ்சரி, அது மெய்யான கலியாணம் ஆகமாட்டாது. இதுவுந்தவிர, இப்பேர்ப்பட்ட காரியத்தை அறிந்துசெய்தால், கலியாணக்காரரும் அதற்கு உதவிசெய்கிறவர்களும் சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

## XII. செபத்தின்பேரில்.

நாம் வரப்பிரசாதத்தை அடையும்படியாக, தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுகிறதுமல்லாமல், செபம் பண்ணவும் வேண்டியது. நமது புத்தியையும் மனதையும் சர்வேசுரன் மட்டில் எழுப்புவதே செபம் என்று சொல்லப்படும்.

### 1. ஏன் செபம் பண்ணவேண்டும்?

செபம் பண்ணும்போது, சர்வேசுரனை ஆராதித்து, ஸ்துதித்து, வணங்கி, அவர் நமக்குச் செய்திருக்கிற நன்மைகளுக்கு நன்றியறிந்த தோத்திரம்செய்து, நம்முடைய ஆத்தும சரீரத்துக்குவேண்டிய சகல நன்மைகளையும் கேட்டுக்

சொல்லுகிறோம். சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறதற்கும், புண்ணியஞ் செய்கிறதற்கும் தேவ உதவி நமக்கு அவசரமாயிருக்கிறது. இந்தத் தேவ உதவிக்காக சேசுநாதருடைய திருநாமத்தையும், அவருடைய பேறுபலன்களையும் குறித்துச் சர்வேசுரனிடத்தில் தாழ்ச்சியோடும், சுறுசுறுப்போடும் மன்றாடினால், தப்பாமல் நமக்குக் கிடைக்குமென்பது நிச்சயம்.

### 2. கிறீஸ்தவன் விசேஷமாய்ப் படித்து, அறிந்து, வேண்டிக்கொள்ளத்தக்க செபங்களாவன.

(க) அர்ச்சியசிஷ்ட சிலுவை மந்திரம்:— நமது சத்துராதிகளாகிய உலகம், பசாசு, சரீரம் நம்மைக் கெடுக்காதபடி, திரியேக சர்வேசுரனைக் குறித்து, அடிக்கடி சிலுவை அடையாளம் வரைந்துகொள்ளக்கடவோம். இதுவே கிறீஸ்தவனுடைய விசேஷ அடையாளம். ஏனென்றால், அர்ச். திரித்துவத்தின் பரம இரகசியமும், இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரம் பண்ணின பரம இரகசியமும், அவர் மரணம் அடைந்து நம்மை இரட்சித்த பரம இரகசியமுமாகிய இம்மூன்றும் சிலுவை மந்திரத்தில் அடங்கியிருக்கின்றன.

சிலுவை அடையாளம் வரையும்போது, நாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய சீஷர்களென்றும், அவருடைய திருவேதத்தின் மூன்று பிரதான தேவ இரகசியங்களை மெய்யாகவே விசுவசிக்கிறோமென்றும், பிரசித்தமாய்க் காட்டுகிறோம்.

(உ) பரமண்டல மந்திரம்:— நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தாமே இந்த மந்திரத்தை உண்டாக்கிப் படிப்பித்ததினாலேயும், அதிலே நாம் சர்வேசுரனிடத்தில் கேட்கவேண்டியவைகளெல்லாம் அடங்கியிருக்கிறதினாலேயும், இந்த மந்திரம் சகலத்திலும் உத்தமமானதாமே.

இதில் இரண்டு பாகம் உண்டு. முதல் பாகத்தில் சர்வேசுரனுடைய தோத்திரத்திற்காக மூன்று மன்றாட்டும், இரண்டாம் பாகத்தில் நம்முடைய ஆத்தும சரீர பிரயோசனத்திற்காக நாலு மன்றாட்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ங. பிரியதத்த மந்திரம்:— இந்த மந்திரத்தில் அர்ச். கன்னிமரியம்மாளுக்குச் சம்மனசு சொன்ன மங்கள வார்த்தையும், அர்ச். எலிசபெத்தம்மாள் தேவமாதாவைப் புகழ்ந்து சொன்ன தோத்திரங்களும், இதோடே திருச்சபை சேர்த்திருக்கிற வேண்டுதலும் அடங்கியிருக்கிறது.

இந்த மந்திரத்தை நாம் தேவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். சேசுநாதர்தவாயி தாமே

தம்முடைய தாயாரை நமக்குத் தாயாராகவும், சர்வேசுரனிடத்தில் நமக்காக மனுப்பேசுகிற வளாகவும் கொடுத்திருக்கிறதினாலே, நாம் அந்த ஆண்டவள்பேரில் முழு நம்பிக்கை வைத்து வேண்டிக்கொள்ளுகிறது ஞாயந்தானே.

4. விசுவாச மந்திரம்:—பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் இந்த மந்திரத்தை உண்டாக்கி, அதிலிருக்கிற பன்னிரண்டு பிரிவுகளிலும் வேதத்தின் பிரதான சத்தியங்களைச் சுருக்கமாய் சொல்லியிருக்கிறார்கள். ஏக சர்வேசுரன் மூன்று ஆளாய் இருக்கிறாரென்றும், சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரம் எடுத்து நம்மை இரட்சித்தாரென்றும், நாம் அர்ச்சிக்கப்பட்டு எப்படி நித்திய சம்பாவனை அடைவோமென்றும், இந்த மந்திரத்தைக்கொண்டு அறிந்துகொள்ளுகிறோம்.

5. பத்துக் கற்பனைகளும், திருச்சபைக் கட்டளைகளும்:—பத்துக் கற்பனையின் முந்தின மூன்று கற்பனைகள் சர்வேசுரன்மட்டில் நமக்குண்டான கடமைகளையும், மற்ற எழு கற்பனைகளும் நம்மைக்குறித்தும், புறத்தியாரைக்குறித்தும், நாம் அனுசரிக்கவேண்டிய கடமைகளையும் கற்பிக்கின்றன. திருச்சபைக்கட்டளைகள் பத்தியுள்ள



சீவியத்துக்கு உதவியான சில வழிபாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

6. விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேக மந்திரங்கள்:—இவைகளை அடிக்கடி நாம் சொல்லவேண்டியது. இந்த மூன்று முயற்சிகளும் வழக்கமாய்ச் சொல்லுகிற உத்தம மனஸ்தாப மந்திரத்தில் அடங்கியிருக்கிறதினாலே, அதைச் சகலரும் நன்றாய்ப் படித்து, செபித்துவரக்கடவார்கள்.

7. எப்போது செபம்பண்ணவேணும்?—தன் ஆத்துமம் கரையேற மெய்யான ஆசையுள்ள கிறீஸ்துவன் அந்திசந்தி செபம்பண்ணுவான். காலமே எழுந்திருந்தவுடனே, அந்த நாளில் சர்வேசுரனுக்குப் பொருந்தாத பாவம் செய்யாமல், அவருக்குத் தோத்திரமாக அந்த நாளைச் செலவழிக்க, ஆண்டவருடைய உதவியைக் கேட்பான்.—அன்றைக்குத் தான் செய்யும் கிரிகைகள் எல்லாவற்றையும் முன்னதாகவே சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பான்.—இராத்திரி படுக்குமுன்னே, அன்றையத்தினம் தான்செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, தன் அந்தஸ்தின் கடமைகளின் பேரில் ஆத்துமசோதனை செய்து, இனிமேல் அதிக சுறுசுறுப்புடனே தன் கடமைகளை சுமுத்திரையாய் அனுசரிக்கப் பிரதிக்கினை பண்ணுவான்.

**8. யாரை நோக்கி வேண்டிக்கொள்ளவேணும்?**

சர்வத்துக்கும் கர்த்தாவான சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுகிறது நமது முக்கியமான கடமை. இதுவுமன்றி, சகல அர்ச்சியசிஷ்டவர்களும், சம்மனசுக்களும், முக்கியமாய் தேவமாதாவும் சர்வேசுரனுக்கு உகந்தவர்களாயிருப்பதால், அவர்களுக்குரிய வணக்கஞ் செய்கிறதும், அவர்களை நோக்கி மன்றாடுகிறதும், மகா பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. நாம் இரட்சணியமும், நித்திய பாக்கியமும் அடைய வேண்டுமென்று அவர்கள் வெகுவாய் ஆசிக்கிறபடியால், தங்களுடைய மன்றாட்டினாலே நமக்கு ஒத்தாசை செய்துகொண்டு வருகிறார்கள்.

**9. பொதுவிலே செபம்பண்ணுகிறது:**—குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் நித்திரை செய்வதற்குமுன் ஒன்றாய்க்கூடி செபம் செய்தால், அதினால் விசேஷமான தேவ ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கோவிலில் அந்திசந்தி பிரார்த்தனை நடக்குமாகில், கூடியவரையில் வீட்டுக்கு ஒருவராவது கோவிலுக்குப் போவது நலமாயிருக்கும்.

குடும்பத்திலே நாள்தோறும் பொதுவிலே செபம் நடத்திக்கொண்டுவந்தால், பிள்ளைகள்



சிறுபிராயத்திலிருந்துதானே செபம் பண்ணப் பழகிக்கொள்வதுமன்றி, அவர்களுக்கு மந்திரம் நன்றாய்த் தெரிந்திருக்கிறதினால், அவர்கள் புது நன்மை வாங்குவதற்கு அதிக தாமசம் செய்ய முகாந்தரமிருக்காது.

## XIII. தேவ சம்பந்தமான புண்ணியங்களின்பேரில்.

தேவ கற்பனைகளையும் திருச்சபைக் கட்டளைகளையும் அநுசரித்து, மேலான புண்ணியங்களை அடைவதற்கும், கிறீஸ்துவர்களுக்குரிய நற்கிரிகைகளைச் செய்வதற்கும், செபமானது அவசியமாயிருப்பதுமன்றி, தப்பாத வழியாகவுமிருக்கிறது.

**1. கிறீஸ்துவனுக்குரிய ஞான சீவியமாவதென்ன?**

ஞானஸ்நானம் பெற்றவுடனே, ஆத்துமத்தில் குடிகொள்ளும் இஷ்டப்பிரசாதமாகிய ஞான சீவியத்தினால், கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் மகா பாரதூர வித்தியாசமுண்டாகிறது. ஞானஸ்நானத்துக்குப் பிறகு,

மனுஷசுபாவம், அதைப் பெறுமுன்னிருந்தது போலவே சரியாயிருந்தபோதிலும், அச்சுபாவத்தின் ஸ்திதியும் மகிமையும் அதிக சிறந்தவைகளாயிருக்கின்றன.

சுபாவத்துக்கு மேலான அந்தஸ்தில் உயர்த்தப்பட்ட மனுஷன் சர்வேசுரனுக்குச் சுவிகாரப்பிள்ளையும் மோக்ஷ இராச்சியத்துக்கு, சுதந்தரர், சுவாமியோடு உடன் பங்காளியுமாகி, திவ்விய தரிசனையை நித்தியகாலமாய்ச் சுகித்து அநுபவிக்கும்படியான சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான்.—சுபாவ ஒழுங்கின்பிரகாரம் சீவிக்கவும் கிரிகைகளைச் செய்யவும் நிலைமையான சக்தி சர்வேசுரன் மனுஷனுக்குக் கொடுத்திருக்கிறாப்போலே, சுபாவத்துக்கு மேலான ஒழுங்கிலும் தக்கவிதமாய் சீவிக்கவும் நித்திய சம்பாவனைக்குரிய கிரிகைகளைப் பண்ணவும் நிலைமையான சக்தி நமது ஆத்தும தத்துவங்களுக்குத் தந்தருளுகிறார். சர்வேசுரன் இஷ்டப்பிரசாதத்தினால் ஞான உயிரையும், மேலான புண்ணியங்களினால் அவ்வுயிருக்கடுத்த தத்துவங்களையும் நமக்கு அளிக்கிறதுமல்லாமல், நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரிகையினிமித்தம் அவைகளை எப்போதும் அதிகரித்துக் கொண்டுவருகிறார்.



(க) சாவான பாவமில்லாத கிறீஸ்தவன் எந்தச் சிருஷ்டியின் சுபாவத்துக்கும் தனது சுபாவத்துக்கும் மேலானதோர் புது சீவிய[illegible], அர்ச். இராயப்பர் சொல்லுமாப்போலே, தேவ சுபாவத்துக்குப் பங்காளியாகி, தேவ சீவியம் சீவிக்கிறான். அறிகிறதும் சிநேகிக்கிறதுமே அரூபிகளுடைய சீவியம். இதினிமித்தம் சர்வேசுரன் நித்தியமாய்த் தம்மை அறிகிறதும், தம்மைச் சிநேகிக்கிறதுமே தேவ சீவியமாகும். அவர் மனுஷசுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்தில் நமது ஆத்துமத்தை உயர்த்தும்போது, நாம் இப்பூலோகத்திலேயே அவரைத் திவ்வியவிதமாய் அறியவும் சிநேகிக்கவும் விசேஷ சுதந்தரத்தையும் சக்தியையும் நமக்குக் கொடுத்தருளுகிறார். இப்பூலோகத்தில் இந்த அறிவும் சிநேகமும் குறைவுள்ளதாயிருக்கிறதென்றாலும், மோக்ஷத்தில் இவைகள் உத்தமமானவைகளாயிருக்கும். இங்கே நாம் துவக்கும் திவ்விய சீவியம் அங்கே சம்பூரணமாய் ஊழியுள்ள காலம் நிலைத்திருக்கும்.

இதுவிஷயத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது, நமது புத்தியும் அறிவும் மோக்ஷத்தில் மகா உத்தமமானவையாயிருந்தபோதிலும், எப்போதும் அள

யுள்ளவைகளாயிருக்கும். சர்வேசுரனிடத்தி லோவென்னில் இவைகள் அனாதிக்கிரமமாயிருக்கின்றனவென்று திருஷ்டாந்தமாய் விளங்குகிறது.

(உ) மனுஷசுபாவம் இந்த ஞானசீவியத்திலுஞ் சிறிதும் மாறாமல், மகா மேன்மையான அந்தஸ்தை அடைகிறது. சாதாரணமான ஓர் வெள்ளைச் சிவப்புச் சாயத்தில் தோய்ந்தால், அந்த வெள்ளை டி தன் சுபாவத்தில் மாறாதபோதிலும், அதிக விலையுயர்ந்ததாகவும், அதிக மேன்மையான உபயோகத்துக்கேற்றதாகவுமிருக்கிறதென்று நாம் அறிந்துகொள்ளுகிறோம். இவ்விதமே, மனுஷனும் இஷ்டப்பிரசாதத்தால் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்படும்போது, அவனுடைய சுபாவம் மாறாதேபோனாலும், முன் தன்னாலே நிறைவேற்றமுடியாத புண்ணியங்களைச் செய்யவும், தன் சுபாவத்தினாலேயாகிலும் அடையக்கூடாத மோக்ஷபாக்கியத்தைச் சம்பாதித்துக்கொள்ளவும், புதியதோர் சக்தியையடைந்துகொள்ளுகிறான்.

(௩.) ஞானசுபாவமில்லாத கிறீஸ்துவனுக்கு மாத்திரமுரிய புண்ணியங்களேவை? அஞ்ஞானிகள், ஞானசுபாவமில்லாத கிறீஸ்துவனைப் போல், நல்லொழுக்கத்துக்குரிய கிரியைகள்



செய்யலாமென்பது மெய்யே. ஆனால் அவர்களுக்கு மோக்ஷத்துக்குரிய பலன் கிடைக்குமென்று நினைக்கலாகாது. இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவனோவெனில், மேலான அந்தஸ்திலிருக்கிறபடியால், அவன் செய்கிற ஒவ்வொரு நற்கிரிகையும் நித்திய சம்பாவனைக்குப் பாத்திரமாயிருக்கிறது.

தேவசம்பந்தமான புண்ணியங்கள் ஞானசீவியத்துக்குரியவைகளாயிருப்பதினால், இவை மூன்றும் மற்ற மேலான புண்ணியங்களும் இஷ்டப்பிரசாதமுள்ளவனிடத்தில் மாத்திரமிருக்கின்றன.

## 2. தேவசம்பந்தமான புண்ணியங்களாவதேன்ன?

சர்வேசுரனை நேரேநோக்கிச்சென்று, அவனைமாத்திரம் நாடி, அவருக்கு நமது புத்தியையும், மனதையும், இருதயத்தையும் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க ஏதுவாயிருக்கிற புண்ணியங்களாம்.

° (௧) இப்புண்ணியங்களால் சர்வேசுரனுக்கும் மனுஷனுக்கும் ஆச்சரியத்துக்குரிய ஐக்கியமும் ஞான உறவு சம்பந்தமும் உண்டாகிறது. இவைகளைக்கொண்டு சர்வேசுரனை விசுவசிக்கிறோம்;

அவரை நம்புகிறோம்; அவரைச் சகலத்தையும் பார்க்க நேசிக்கிறோம்.

(உ) விவேகம், நீதி, மனத்திடம், மட்டசனமாகிய நல்ல நடக்கைக்கு அடுத்த புண்ணியங்களும் இவைகளைச் சேர்ந்த மற்றப் புண்ணியங்களும் இப்பூலோகத்தின் நன்மைகளை நோக்கிச் சென்று, புத்திக்கொத்தபடி நமது கிரிகைகளையெல்லாம் ஒழுங்குப்படுத்துகின்றன.—தேவசம்பந்தமான புண்ணியங்கள் சர்வேசுரனுடைய சித்தத்துக்குச் சரியாய் அமைந்து, நித்திய நன்மைகளைத் தேடும்படி செய்கிறது.—இவைகளின் வழியாக நல்ல நடக்கைக்கு அடுத்த புண்ணியங்களையும் சர்வேசுரனைக்குறித்து மாத்திரம் செய்யக்கூடும். — மீளவும், தேவசிநேகமுள்ளவன் சுத்த கருத்தோடு நல்ல நடக்கைக்குரிய கிரிகைகள் செய்யும்போது, இவைகள் மோக்ஷத்துக்குரிய பலனடைகின்றன.

(ஊ) தேவசம்பந்தமான புண்ணியங்கள் சகல புண்ணியங்களையும்விட உன்னதமானவைகளாம். இவைகள் மோக்ஷத்தையடைய நமக்குச் சுதந்தரமும் வல்லமையும் கொடுப்பதுமன்றி, இவ்வுலகத்திலேதானே திவ்விய சீவியத்துக்கு நம்மைப் பங்காளிகளாக்குகிறது.

குறிப்பு:—மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்ட புண்



ணியங்களைக்குறித்து இங்கே சொல்லியிருப்பதைக் கண்டுபிடிப்பது சிலருக்கு வருத்தமாய்த் தோன்றக் கூடும். ஆனால் பத்தியுள்ள கிறீஸ்துவர்களுக்கு இதை அறிவது பிரியமும் பிரயோசனமுமாயிருக்குமென்பதினால் இப்பிரதான விசேஷங்களை வெகு சுருக்கமாய் எழுதும்படி நேரிட்டது.

### 3. தேவசம்பந்தமான புண்ணியங்கள் எத்தனை?

மூன்று. அவைகள் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமாம். மோக்ஷத்தைப் பெறும்பொருட்டு, இம்மூன்று தேவசம்பந்தமான புண்ணியங்களும் நமது ஆத்துமத்திலிருக்கவேண்டியதுமல்லாமல், நமது சீவியகாலத்தில் அடிக்கடி இப்புண்ணியமுயற்சிகளைச் செய்வதும், விசேஷமாய் நமது மரணநேரத்தில் இப்புண்ணியக் கிரிகைகளைப் பண்ணுவதும் வெகு அவசரமாமே. அடிக்கடி செய்யாதிருப்பது சாவான பாவமாகும்.

### 4. விசுவாசமாகிறதென்ன?

அளவில்லாத சத்திய சுரூபியாயிருக்கிற சர்வேசுரன் வேதசத்தியங்களையெல்லாம் அறிவித்தகினாலே, யாதொரு சந்தேகத்துக்கும் இடங்கொடாமல் உடனே அவைகளை ஏற்றுக்கொள்ளுகிறது விசுவாசமென்று சொல்லப்

படும்.—இந்தச் சத்தியங்களை நமக்குப் படிப்
பிக்கும்படி வழுவாத திருச்சபையைச் சர்வேசு
ரன்தாமே ஸ்தாபித்திருக்கிறபடியால், இவை
களை எப்படித் திருச்சபை போதிக்கிறதோ,
அப்படியே நாமும் கொஞ்சமேனும் தத்தளிக்
காமல் முழுதும் விசுவசிக்கிறோம்.

தேவ விசுவாசமானது சுபாவத்துக்கு மேலா
ன சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரமாம்.
விசுவாசமில்லாமல் இரட்சணியமில்லை.

(௩) மோட்சத்தை அடைவதற்கு நாம் விசுவ
சிக்கவேண்டிய பிரதான சத்தியங்களெவை?—சர்
வேசுரன் உண்டென்றும், நமக்கு நல்ல ஊழி
யஞ் செய்பவர்களுக்கு நித்திய பேரின்ப பாக்
கியத்தைத் தந்தருளுகிறாரென்றும், அகத்தி
யம் விசுவசிக்கவேண்டியது.—இதுவுந்தவிர,
அர்ச். திரித்துவத்தின் பரம ரகசியத்தையும்,
இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன்
நம்மை இரட்சிக்கும்படி மனுஷாவதாரமெடு
த்து நமக்காக மரணமடைந்தாரென்கிற தேவ
இரகசியத்தையும், சர்வேசுரனுடைய கற்பனை
களும் திருச்சபையின் கட்டளைகளுமெவை
யென்றும், தான் பெறப்போகிற தேவத்திர
விய அநுமானங்கள் எப்பேர்ப்பட்டவையென்
றும், இவை முதலியவைகளை அறிந்து விசு



வசிப்பது நமது கடமையாம். வயது, புத்தி,
சகவாசத்துக்கு ஏற்றப்போல், ஒவ்வொருவ
னும் இவைகளைக் கற்றறியவேண்டியது.

(௪) ஒரு சத்தியத்தின்மேல் மனம்பொருந்தி சந்
தேகப்பட்டால், விசுவாசம் முழுதும் அழிந்து போகி
றது.—ஏனென்றால் சந்தேகத்துக்கு இடங்
கொடுக்கிறது சர்வேசுரனுடைய அளவில்லாத
உண்மைத்தனத்தைப் பிறக்கணித்து, அவர்
சொல்லியருளிய வார்த்தை பொய்யென்று தீர்
மானிப்பதுபோலாகிறது.

(௫) விசுவாசத்தை ஒருக்காலும் மறுதலிக்கக்
கூடாது.—தன் வேதத்தைப் பிரசித்தமாய் வெளி
ப்படுத்த அவசியமிருக்கும்போது, யாதொரு
வேதசத்தியத்தை மறுதலிக்கிறதைவிட, தன்
ஆஸ்திபாஸ்திகளையும் உயிரையுமுதலாய் இழக்
கத் தயாராயிருக்கவேண்டியது. மவுனமான
து மறுதலிக்கிறதற்கொப்பாயிருக்கும்போதும்,
தன் வேதத்தை மறைப்பது மற்றவர்களுக்கு
ஆத்தும நஷ்டத்தை வருவிக்கும் பெரிய துர்
மாதிரிகையாயிருக்கும்போதும், பிரசித்தமாய்
வேதத்தை வெளிப்படுத்த மகா கண்டிப்பான
கடமையுண்டு.

(௬) விசுவாசத்துக்கு விரோதமான பாவங்க
ளாவன:—பதிதர் அஞ்ஞானிகள் முதலியவர்

கள் ஒப்புக்கொடுக்கும் ஆராதனையில் சேருகிறதும், பசாசைக் கும்பிடுவதும், அதற்கு ஒப்புக்கொடுக்கும் பலிகளுக்கு உதவிசெய்வதும்;— மேலும் யாதொரு வேதசத்தியத்தை ஒத்துக்கொள்ளாமலிருப்பதும், அதின்பேரில் மனசார சந்தேகப்படுவதும் விசுவாசத்துக்கு விரோதமான பாவங்கள். இவைகளினால் விசுவாசம் முழுதும் அழிந்துபோகிறது.

### 5. நம்பிக்கையாகிறதேன்ன?

சர்வேசுரன் நமக்கு மோட்ச பாக்கியத்தையும் அதை அடைகிறதற்கு வேண்டிய அநுக்கிரகத்தையும் கொடுத்தருளுவாரென்று கெட்டியான மனதாயிருப்பதே நம்பிக்கையென்னப்படும்.

(க) நமது நம்பிக்கைக்கு முகாந்தரமென்ன? சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களை நமது சொந்தப் பலனால் அடைய முடியாதென்றறிந்திருக்கிறதினாலேயும், அவைகளை யடையும்படி உதவிபுரிய வாக்குக் கொடுத்திருக்கும் சர்வேசுரன் அளவில்லாத பிரமாணிக்கம், தன்மைத்தனம், வல்லமையுள்ளவராயிருக்கிறதினாலேயும், நமது நம்பிக்கை உறுதியாயிருக்கவேண்டியது. மேலும் மோட்சபாக்கியத்தையும் இர



ட்சணியத்துக்கேதுவான உதவிகளையும் சேசுநாதர்சுவாமி நமக்காக அடைந்திருப்பதினாலே, அவருடைய அளவில்லாத பேறுபலன்களின் மேல் நமது நம்பிக்கையெல்லாம் வைக்கிறோம்.

(உ) நம்பிக்கைக்கு விரோதமான பாவங்களேத்தனை? இரண்டு: முதலாவது.—மிதமிஞ்சின நம்பிக்கை:—யாதொரு பிரயாசையும் எடுத்துக்கொள்ளாதபோது, இரக்கமுள்ள சர்வேசுரன் நம்மை அகத்தியம் இரட்சிப்பாரென்று வீணாய் எண்ணுவதும், சர்வேசுரனுடைய உதவியின்றி நமது சொந்தப் பலத்தினாலேயே மோட்சத்தை சேரக்கூடுமென்று மூடத்தனமாய் நினைக்கிறதும், மிஞ்சின நம்பிக்கையாகிற பாவமாகும்.

இரண்டாவது.—அவநம்பிக்கை.—இரட்சணியமடைய முடியாதென்கிற நினைவுக்கு மனம்பொருந்தி இடங்கொடுப்பதும், நாம் செய்த பாவங்களைச் சர்வேசுரன் மன்னிக்கமாட்டாரென்றெண்ணுவதும், நமது இரட்சணியத்துக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைக் கொடுக்கமாட்டாரென்று உறுதியாய் நினைப்பதும், அவநம்பிக்கையென்கிற பாவமாகும்.

## 6. தேவசிநேகமாகிறதென்ன?

எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனை நேசித்து, அவரைப்பற்றி நமது புறத்தியாரையும், நம்மை நாம் சிநேகிப்பதுபோலே, நேசிப்பதே தேவசிநேகமென்னப்படும்.

ஆகையால், தேவசிநேகமும் பிறர்சிநேகமும் ஒரே சிநேகந்தான். பிறரைச்சிநேகியாதவன் சர்வேசுரனைச் சிநேகிக்கிறதில்லை. பிறரின் மேல் நமக்குள்ள சிநேகத்தின் அளவே, சர்வேசுரன்மேல் நமக்குள்ள சிநேகத்தின் அளவாம். ஆனதைப்பற்றி யாதொரு எதிராளியின் மட்டில் சிநேகமில்லாதிருந்தால், சர்வேசுரன் மட்டிலுள்ள சிநேகமும் நம்மிடத்தில் இல்லையென்று சொல்லவேண்டியது.

(க) சர்வேசுரன் மட்டிலுள்ள சிநேகம்.—மெய்யான தேவசிநேகம் நம்மிடத்திலிருக்க வேணுமானால், சர்வேசுரனைச் சகல வஸ்துக்களுக்கு மேலாக எண்ணி மதித்து நேசிக்கவேண்டியது. இந்தப்பிரகாரமாக மேலான விதமாய்ச் சர்வேசுரனை நமது புத்தியிலே மதித்து, மனதிலே சிநேகிப்பதுதான் தேவசிநேகத்துக்குரிய அத்தியாவசியமான காரியம்.



பண்ணுகிறது.—4-வது, தன் பாவங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமல் குருவுடனே சொல்லுகிறது.—5-வது, குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்க்கிறது.

### 2. செய்யவேண்டிய நல்ல ஆயத்தத்தின் பேரில்.

(க) நினைவு, வாக்கு, கிரிகையினால் தான் செய்த சகல சாவானபாவங்களையும் ஒன்றும் விடாமல் நன்றாய்ச் சோதித்து, அவைகளுக்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு, அவைகளை வெறுத்து, அப்படிப்பட்ட பாவங்களில் ஒன்றையும் இனிமேல் ஒருக்காலும் செய்ய மாட்டேனென்றும், பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலக்கி நடப்பேனென்றும், புறத்தியார்க்குச் செய்த குறைகளைப் பொறுத்து நான் அவர்களுக்கு வருவித்த நஷ்டத்தை உத்தரிப்பேனென்றும், உறுதியான பிரதிக்கினை செய்துகொள்ளவேண்டியது.—செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவது, மகா அவசியமாயிருப்பதால், பாவசங்கீர்த்தனம் செய்யப் போகுமுன், சகல பாவங்களுக்காகவும் சரியான மனஸ்தாபப்படும்படி சர்வேசுரனுடைய இரக்கத்தை மன்றாடவேணும்.

(உ) சாவானபாவமில்லாதவன் முன் செய்த சாவானபாவங்களின்பேரிலாவது, ஒரு விசேஷ

அற்பப்பாவத்தின்பேரிலாவது, தனது இருதயத்திலே மெய்யான மனஸ்தாபம் எழும்ப, மகா பிரயாசப்படவேண்டியது. வெளிப்படுத்தும் பாவங்களுக்குள்ளே ஒரு அற்பப்பாவத்தின் மேலேயாகிலும் மனஸ்தாபப்படுவது அவசியம்; இல்லாவிடில், பாவசங்கீர்த்தனம் வீணாய்ப்போகும்.

### 3. எத்தனைவகை மனஸ்தாபமுண்டு?

இரண்டுவகை மனஸ்தாபம் உண்டு. அளவில்லாத சகல நன்மைச் சுரூபியும், நமது பேரில் மட்டில்லாத சிநேகமுள்ளவருமான சர்வேசுரனுக்கு நமது பாவங்களால் துரோகஞ் செய்தோமேயென்று எண்ணி மனஸ்தாபப்பட்டால், அது உத்தம மனஸ்தாபமாகும்.

நமது பாவ அக்கிரமங்களினாலே மோட்சத்தை இழந்து, சர்வேசுரன் நமக்கு அனுப்புகிற அநித்திய நித்திய ஆக்கினைக்கு ஆளாய்ப் போனோமேயென்று நினைத்துக் கஸ்திப்பட்டால், அது அடிமை மனஸ்தாபமாகும்.

ஆகையினாலே உத்தம மனஸ்தாபம் தேவசிநேகத்தினாலும், அடிமை மனஸ்தாபம் தேவபயத்தினாலும் உண்டாகிறது. பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் பண்ணுகையில், உத்தம



மனஸ்தாபப்படுவது மெத்த நலமாயிருந்தபோதிலும், அது அவசரமில்லை. அடிமை மனஸ்தாபமிருந்தால் போதும். ஆனால் அடிமை மனஸ்தாபமாகிலும் அத்தியாவசியமாய் நம்மிடத்தில் இருக்கவேண்டியதால், இந்த மனஸ்தாபமில்லாமல், பாவங்களுக்குப் பொறுத்தல் அடைய முடியாது.

### 4. அதிகாரம் பெற்ற குருவிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்கிறது.

பாவப்பொறுத்தல் அடையவேண்டுமானால், அர்ச். பாப்பானவரிடத்திலிருந்தாவது, அல்லது அவரால் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமார்களிடத்திலிருந்தாவது, அதிகாரமும் உத்தரவும்பெற்ற குருவானவரிடம், கட்டிக்கொண்ட பாவங்களை வெளிப்படுத்தவேண்டியது.

### 5. பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டிய விதம்.

(க) நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதற்கு, சகல சாவானபாவங்களையும், ஒன்றும் ஒளியாமல், சொல்லுகிறதுமன்றி, ஒவ்வொரு சாவானபாவத்தைக்கட்டிக்கொண்டது எத்தனை விசை என்றும், பாவத்தின் வகையை மாற்றுகிற விசேஷங்கள் எதென்றும், மிகுந்த தாழ்ச்சி

யோடு, குருவானவரிடத்தில் தெரிந்தமட்டும் தெளிவாய் அறிவிக்கவேண்டியது.

(உ) ஒரே ஒரு காரியமாத்திரம் செய்திருந்த போதிலும், அதிலே அநேக பாவங்கள் அடங்கியிருக்கக் கூடும். நாம் செய்த காரியம் எத்தனை புண்ணியங்களுக்கு விரோதமாயிருக்குமோ, அத்தனை பாவங்களாக இருக்கும். இதற்குத் திஷ்டாந்தமாக: கோவில் சாமான்களைத் திருடுகிறது நீதி என்கிற புண்ணியத்துக்கும், தேவ பத்தியென்கிற புண்ணியத்துக்கும், விரோதமாயிருக்கிறபடியினால், இந்த ஒரே கிரிகையில் தேவதுரோகம் என்கிற முதல் கற்பனைக்கு விரோதமான பாவமும், களவென்கிற ஏழாம் கற்பனைக்கு விரோதமான பாவமும், ஆக இரண்டு பாவங்கள் அடங்கியிருக்கின்றன. அதினாலே, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு, களவு செய்தேன் என்று சொல்லுகிறது போதாது. கோவில் பொருளைத் திருடினேனென்று வெளிப்படுத்தவேண்டியது.—அப்படியே தாயை அடித்தவன், நாலாம், ஐந்தாம் கற்பனைகளை மீறினதினாலே, ஒரு ஆளை அடித்தேனென்று சொல்லாமல், தாயாரை அடித்தேனென்று சொல்லவேண்டியது அவசியம்.



ஆனால் இதை நமது உணர்ச்சிகள் உணரவேண்டுமென்பது அவசியமல்ல. தனது தாய் தகப்பனின் மரணத்துக்காக அழுது பிரலாபிக்கிறவன், சர்வேசுரனுக்கு விரோதமாகத் தான் கட்டிக்கொண்ட பாவங்களுக்காகச் சிறிதும் கண்ணீர் சிந்தாமலிருக்கலாம். இதினால் அவன் தன் தாய் தகப்பனைச் சர்வேசுரனைவிட அதிகமாய் நேசிக்கிறானென்றும், தேவசிநேகத்தைப் போக்கடிக்கிறதைவிட சகலத்தையும் இழக்க அவன் ஆயத்தமாயிருக்கிறதில்லையென்றும் ஒருக்காலும் சொல்லமுடியாது. உருக்கமான பற்றுதல் மனதிலே உணருகிறது மெத்த நலமாயிருந்தாலும், அது தேவ சிநேகத்தின் கட்டளையை அநுசரிக்கிறதற்கு அவசியமில்லை. தேவ கற்பனைகளையெல்லாம் சரியாய் அநுசரிப்பதே, நாம் சர்வேசுரனைச் சகலத்தையும் பார்க்க அதிகமாய்ச் சிநேகிக்கிறோமென்பதற்குத் தப்பாத அடையாளம்.

(உ) பிறர்மட்டிலுள்ள சிநேகம்.—பிறரை அவர்களின் சற்குணங்களுக்காக மாத்திரம் சிநேகியாமல், முக்கியமாய் சர்வேசுரனைக் குறித்து அவர்களை நேசிக்கவேணும். பிறர் சர்வேசுரனுடைய சாயலாயிருக்கிறதினாலும், சேசுநாதரின் திருஇரத்தத்தால் அவர்கள் இரட்சிக்கப்

பட்டிருக்கிறதினாலும், அவர்கள் நமது சகோதரராயிருப்பதினாலும், நம்மோடேகூட ஒரே நித்திய மோக்ஷ பாக்கியம் அநுபவிக்க வேண்டியவர்களாயிருப்பதினாலும், அவர்களைச் சிநேகிக்க வேண்டியது கடன். இந்த முகாந்தரங்களினிமித்தம் நமது எதிராளிகளைமுதலாய் நம்மைப்போல சிநேகிக்கவேண்டும்!

(க) நம்மைப்போல பிறனைச் சிநேகிக்க வேண்டுமென்பதற்கு அர்த்தமென்ன?—நமக்கு நாம் ஆசிக்கிற ஞான நன்மை பிறருக்கும் கிடைக்கவும், அவர்கள் விரும்புகிற காரியத்தை அடைவதற்கு உதவிசெய்யவும், பொல்லாப்பினின்று அவர்களைக் காப்பாற்றவும், தயாராயிருக்க வேண்டுமென்று அர்த்தம். ஆனால் ஒரே விதமான நன்மை நமக்கும் பிறருக்கும் தேவையாயிருக்கும்போது, பிறனை நமக்குமேலான விதமாய் வென்கிலும், நமக்குச் சரிசமான விதமாக முதலாய்ச் சிநேகிக்க அவசரமில்லை. ஆகையால் பிறரின் ஞான நன்மைகளுக்காக, நமது ஞான நன்மைகளை இழக்கலாகாது. அவர்களை இரட்சிக்கும்படி, ஓர் அற்பப் பாவமுதலாய் நாம் கட்டிக்கொள்ளக்கூடாது. ஆனால் பிறர் ஞான நன்மைகளுக்காக, அவசியமிருக்கும்போது, நமது. சொத்துக்களை இழக்க ஆயத்தமாயிருக்க-



வேண்டியது. அவர்களுடைய ஆத்துமங்களை இரட்சிக்கும்படி, நமது உயிரை முதலாய் சந்தோஷமாய்க் கொடுக்கவேண்டியது.

(ச) பிறருக்கு இலௌகீக நன்மை உதவிகள் செய்வதெப்படி?—பிறருக்குள்ள மிகவும்கடினமான அவசரங்களிலே, நம்மால்கூடியமட்டும் அவர்களுக்கு உதவிசெய்யாதிருப்பது சாவான பாவமாகும். ஆனால் பிறருக்கு ஒரு கனமான காரியம் எவ்வளவு அவசியமாயிருக்கிறதோ, அவ்வளவு அது நமக்கும் அவசியமாயிருந்தால், நம்மைப்பார்க்க அவர்களை அதிகமாய்ச் சிநேகித்து அதைக் கொடுக்கக் கடனில்லை. ஆனால் சர்வேசுரனுக்காக இந்த உபகாரம் செய்தோமானால், அது உத்தமமான சிநேக முயற்சியாயிருக்கும்.—நமது அந்தஸ்துக்கடுத்தபடி பிறருக்குத் தானதர்மம் செய்யவேணுமென்று சர்வேசுரன் கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிறார்.

(ரு) பிறர்சிநேகத்துக்கு விரோதமான பாவங்களாவன:—பகை, சண்டை சச்சரவு, காய்மகாரம், பழிவாங்குதல், அநியாய நஷ்டம் வருவித்தல், துர்மாதிரிகை, கோள் குண்டணி முதலியவைகளாம்.

---

## கடைசி முடிவு.

நாம் எப்போதாகிலும் ஒருநாள் சாவது நிச்சயம். சாகிற நேரமோ, நிச்சயமில்லை. நம முடைய நித்திய பாக்கியமும், நித்திய நிற்பா கியமும், அந்தக் கடைசி க்ஷணத்திலே அடங்கியிருக்கின்றன. அந்த க்ஷணத்திலே தேவஇஷ் டப்பிரசாதத்தோடேயோ, அல்லது பாவ தோடேயோ, எந்த ஸ்திதியிலிருப்போமோ அதற்குத்தக்கது நித்திய பாக்கியமாகிய மோ சமாவது, நித்திய ஆக்கினையாகிய நரகமாவது நமக்குத் தப்பாமல் கிடைக்குமென்று நன்றா நினைத்துக்கொள்ளவேண்டியது.

அந்தக் கடைசி க்ஷணம் எப்போது வரு ன்று நாம் அறியாதிருந்தாலும், அது இப்பொ வரக்கூடும் என்பதினாலும், எந்நேரமும் சாவா பாவமில்லாமல் இருக்கவேண்டுமென்று அறி கடவோமாக.

## பொருள் அட்டவணை.

பக்கம்.

### முதல் பிரிவு.


| | |
|---|---|
| சர்வேசுரனும், அவருடைய இலக்ஷணங்களும் ... ... ... ... | 4 |
| அர்ச். திரித்துவம் ... ... ... | 6 |
| உலக சிருஷ்டிப்பு, சம்மனசுக்கள் ... | 7 |
| ஆதித்தாய் ஆதித்தகப்பன், அவர்களுடைய பாவம் ... ... ... | 8 |
| சேசுநாதர்சுவாமி, மனுஷாவதாரம், பிறப்பு ... ... ... ... | 12 |
| அர்ச். கன்னிமரியம்மாள், தேவமாதா ... | 15 |
| சேசுநாதர்சுவாமி, இரண்டு சுபாவமுண்டு | 16 |
| அவர் ஆள்வகையில் ஒருவர்தான் ... | 18 |
| உலக இரட்சணியம் ... ... ... | 19 |
| நாதர் உயிர்த்தது ... ... ... | 21 |
| இஸ்பிரீத்து சாந்து ... ... ... | 23 |
| திருச்சபை, இதின் அடையாளங்கள் ... | 24 |
| உரோமான் திருச்சபை ... ... | 28 |
| திருச்சபையின் தவறாத நிலைமை ... | 29 |
| அர்ச். பாப்பானவரின் பேரில்... ... | 29 |
| அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகிதப் பிரயோசனம் ... ... ... | 31 |

பாவத்தைப்பொறுக்கத் திருச்சபைக்கு அதிகாரம் ... ... ... ... 34
தனித்தீர்வை ... ... ... ... 37
மாம்ஸ உத்தானம் ... ... ... 38
நடுத்தீர்வை ... ... ... ... 40

## இரண்டாம் பிரிவு.

சர்வேசுரனுடைய கற்பனைகள்—முதல் கற்பனை ... ... ... ... 42
இரண்டாம் கற்பனை ... ... ... 45
மூன்றாம் கற்பனை ... ... ... 47
நாலாம் கற்பனை ... ... ... 49
ஐந்தாம் கற்பனை ... ... ... 52
ஆறாம், ஒன்பதாம் கற்பனைகள் ... 54
ஏழாம், பத்தாம் கற்பனைகள் ... ... 55
எட்டாம் கற்பனை ... ... ... 57
திருச்சபைக்கட்டளைகள்.—முதல் கட்டளை ... ... ... ... 58
இரண்டாம், மூன்றாம் கட்டளைகள் ... 58
நாலாம் கட்டளை ... ... ... 61
ஐந்தாம் கட்டளை ... ... 63
பாவத்தின் பேரில்.—சாவான பாவமும்; அற்பப்பாவமும் ... ... 64
தலையான பாவங்கள் ... ... ... 69



## மூன்றாம் பிரிவு.

தேவ வரப்பிரசாதம் ... ... ... 71
அநுக்கிரகப் பிரசாதம் ... ... 72
இஷ்டப்பிரசாதம் ... ... 74
பேறுபலன் ... ... ... 74
தேவத்திரவிய அநுமானங்கள் ... ... 75
தேவத்திரவிய அநுமானங்களுக்கு வேண்டிய பொருளும், வார்த்தைகளும், கருத்தும் ... ... 76
இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதும் அதிகரிக்கிறதுமான தேவத்திரவிய அநுமானங்கள் ... ... ... 79
ஞானஸ்நானத்தின் பேரில் ... ... 80
ஞானஸ்நானம் ... ... 81
உறுதிப்பூசுதல் ... ... ... 87
தேவநற்கருணை ... ... ... 88
திவ்விய பூசை ... ... ... 92
பச்சாத்தாபம் ... ... ... 96
திருச்சபையின் பலன்கள் ... ... 106
அவஸ்தைப்பூசுதல் ... ... ... 112
குருத்துவம் ... ... ... ... 117
மெய்விவாகம் ... ... ... 120
செபத்தின் பேரில் ... ... ... 121
விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமாகிய தேவசம்பந்தமான புண்ணியங்கள் ... 127

11607